தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி

ஆ. சதாசிவம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி

ஆ. சதாசிவம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-372-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 311

திருவள்ளுவராண்டு 2037, ஆடி - ஆகஸ்ட் 2006

நூல்	:	தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி
ஆசிரியர்	:	ஆ. சதாசிவம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மொழியியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2006
பக்கம்	:	12 + 224
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16-கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரு. 90/-
படிகள்	:	1000
ஒளியச்சு	:	வீரா கம்ப்யூட்டர்ஸ். தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

அணிந்துரை

உலக மொழிகளுள் தொன்மை மிக்க முதல் மொழி தமிழ் மொழியே என்பதைப் பல ஆராய்ச்சியாளர்களும் நிறுவி வருகின்றனர். தமிழ்ச் சொற்களின் தோற்றம் பற்றிய ஆய்வுகள் இம்மொழியின் தனித்தன்மையை எடுத்துரைக்கக் காண்கிறோம். தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் இவ்வகையில் உருவாக்கப்பட்ட ஓர் அரிய படைப்பாகும். நூலாசிரியர் திரு ஆ. சதாசிவம் அவர்கள் தம் மொழி நூல் ஆராய்ச்சிப் புலமையை இதில் திறம்படப் புலப்படுத்தியுள்ளார். மனிதன் தமிழிற் பேசத் தொடங்கிய காலத்திலிருந்து சொற்களின் பிறப்பு, அவற்றின் ஒலி வடிவம், பொருள் ஆகியவற்றை விளக்குவதாக இந்நூல் அமைகின்றது.

தமிழ்ச் சொற்கள் எக்காலத்தில் தோற்றம் கொண்டன என்பதை எவரும் வரையறுத்துக்கூற இயலவில்லை என்பதே உண்மை. தமிழ் மொழியின் வளர்ச்சி தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். எனவே, தொன்மைக்காலத் தமிழர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பதே ஒரு தனி ஆய்வாகிறது.

குமரி முனைக்குத் தெற்கேயுலவும் இந்தியப் பெருங்கடல் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் பெருநிலனாயிருந்ததென்று கூறும் புவியியலார் ஆய்வுகளையும், இருபெருங் கடல்கோள்களால் தமிழகத்துப் பெருநிலப்பரப்பு இந்துமாக் கடலின் அடியில் அமிழ்ந்துள்ளது என்ற இறையனார் களவியலார் கூற்றுகளையும், லெமூரியா அல்லது குமரிநாடு பற்றிய மேல்நாட்டு வரலாற்று ஆசிரியர் கூறுவனவற்றையும் இந்நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இன்று தமிழில் உள்ள நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் ஆகும். இதனுடைய காலத்தை இன்னும் யாரும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் இந்நூல் எழுந்திருக்கக்கூடும் என்பது பலருடைய கருத்து. தொல்காப்பியம் கூறும் சொல் மரபு, பொருள் மரபு என்பன தொல்காப்பியர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழில் பல இலக்கிய இலக்கண நூல்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றன.

தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி பற்றிக் கூறும் இநநூல் தமிழல்லாத பிறிதொரு மொழியான சுமர் மொழிச் சொற்களைத் தரவுகளாக ஏற்று விளக்கங் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். சுமர் மொழி சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேலாக உலகிலிருந்து மறைந்துபோன மொழி. அக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற எழுத்தோவியங்கள் களிமண் ஏடுகளாகப் பூமியில் புதையுண்டிருந்தது கி.பி.1879க்குப் பின்பு கண்டெடுக்கப்பட்டுள்ளன. உலகில் வேறெந்த மொழிக்கும் சுமர் மொழி கொண்டுள்ளது போன்ற மிகப் பழைய கால எழுத்தோவியங்கள் இல்லை. மனித வரலாற்றில் இது ஓர் அற்புத நிகழ்ச்சியாகும். இருப்பினும், அதற்கும் முற்பட்ட தமிழ் மொழியின் பழைய வடிவங்கள் கிடைக்காமைக்குக் காரணம் தமிழர்கள் எழுதப் பயன்படுத்திய பொருள் பனையோலை ஏடுகளே என்பதையும் இந்நூலாசிரியர் குறிப்பிடுவது கருதத்தக்கது.

கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட தமிழ்ச் சொற்களின் வழக்குகளை அறிந்துகொள்ள உதவும் பழைய நூல்களோ கல்வெட்டுகளோ இப்போது இல்லை. எனவே, சுமர் மொழியில் கி.மு.2800 - கி.மு.2000 ஆகிய காலப் பகுதியில் செங்கல் வெட்டுக்களில் குறிக்கப்பட்ட சொற்தொகுப்புகளின் அடிப்படையில் தமிழிலுள்ள அடிச்சொற்களை விளக்குகிறார் ஆசிரியர். அழிந்துபோன தமிழ்ச் சொற்களுக்கு இணையான சொற்களாகவே சுமர் மொழிச் சொற்களை ஆசிரியர் இந்நூலில் காட்டியுள்ளார். சுமர் மொழியும் அதற்கு முற்பட்ட தமிழ் மொழியும், பிற திராவிட மொழிகளும் குமரி மொழிக் குடும்பம் என்ற நிலையில் கிளைத்து வளர்ந்தவை என்பதையும் இவர் நிறுவுகின்றார்.

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட ஒரு காலப்பகுதியில்

தமிழ்மொழி தரப்படுத்தப்பட்டு செம்மை செய்யப்பட்டுள்ளது. அது எக்காலம் என உறுதியாகத் தெரியவில்லை. அக்காலத்திய எழுத்து வடிவங்கள் பற்றிய சான்றுகள் எதுவும் இன்று வரையில் கிடைக்கவில்லை. இந்நிலையில், இந்நூல், வரலாற்றுக் காலத்துத் தமிழ் மொழியின் முந்தைய வடிவங்களையும் அவற்றின் தோற்றங்களையும் பற்றியதாக அமைவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி ஆய்வில் இந்நூல் ஒரு புதிய வரவாகும்.

நூலாசிரியரின் வலிமையான சிந்தனை வளத்தையும் இடைவிடாத ஆய்வு முயற்சியையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

(சி.சுப்பிரமணியம்)

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	1
2.	தமிழில் தனிநிலை அடிச்சொற்கள்	19
3.	தமிழில் இணைநிலை அடிச்சொற்கள்	85
4.	தமிழில் குறைநிலை அடிச்சொற்கள்	139
5.	தமிழில் உயிர் முதற் சொற்களின் பிறப்பு நெறி	157
6.	தொல்காப்பியங்காட்டும் பழந்தமிழ்ச் சொற்பிறப்பு நெறி	185
7.	முடிவுரை	215

முகவுரை

பண்டைய உலகில் சிறந்த நாகரிக வளர்ச்சிக்குரிய இடங்களாகக் கருதப்படுபவை தென்னிந்தியா எனப்படும் தமிழ்நாடு, மொசெப்பத்தேமியா எனப்படும் சுமரிநாடு, சிந்து வெளி நாடு என்பன. இம் மூன்றனுள் பின்னைய இரண்டன் நாகரிகங்களும் ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன்பே சிதைந்து அழிந்து புதைபொருள் வடிவ நிலையில் மண்ணினுள் மண்டிக் கிடக்கின்றன. தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பண்டைய நிலப்பரப்பின் ஒரு பகுதியோ காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடல்கோள்களால் விழுங்கப்பட்டுக் குமரிக்குத் தெற்கே ஆழ்கடலின் அடியில் அமிழ்ந்து கிடக்கின்றது.

ஆற்றங்கரை நாகரிகத்துக்கு உரியவர்களெனக் கருதப்படும் இம்மூன்று நாட்டு மக்களும் ஓரின மக்களா என்பதை ஆய்ந்து கண்டறிவதில் உலக ஆய்வாளரின் கவனம் இன்று ஈர்க்கப் பட்டுள்ளது. பண்டைய உலகம் மிகச் சுருங்கிய உலகமாகும். அக்கால மக்கள் மரக்கலங்கள் மூலம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் பயணஞ் செய்து நாடுகளையும் நகரங்களையும் தோற்றுவித்தனர். அவர்கள் விட்டுச் சென்ற மொழியே அவர்கள் எவ்வினத்திற்கு உரியவர் என்பதைக் காட்டிக் கொடுக்க வல்லது. சிந்து வெளிக் கல்வெட்டுக்களை யாரும் இதுவரை படித்தறிந்தாரில்லை. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பலர் கல்வெட்டுக்களைப் படித்தறிய முயன்றும் ஈற்றில் வெற்றி பெற்றாரில்லை. தந்தை கெரஸ் (Father Heras) முதலிய சில

அறிஞர்கள் கல்வெட்டு மொழி பழந்தமிழின ஒருபடிநிலையைக் காட்டுகின்றது என்கின்றனர். ஆனால் ஈராயிரத்துக்கும் மேற்பட்ட சுமர்மொழிச் சுடுமண் ஏடுகள் சென்ற நூற்றாண்டின் இறுதியில் முறையாக வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்பட்டன. இவற்றை இலகுவில் வாசிப்பதற்கு உதவி புரிந்தது ஒரு மும்மொழிக் கல்வெட்டு என்பது இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. சுமர் மொழி ஓர் ஒட்டுநிலை மொழி என மேல்நாட்டு அறிஞர் கருத்துத் தெரிவித்தனரே அன்றி அதற்குமேல் அவர் எவரும் ஆய்வு நிகழ்த்தவில்லை. முற்றிலும் எதிர்பாராத சூழ்நிலையில் சுமர் மொழிக் கல்வெட்டுக்களும் ஆய்வு நூல்களும் 1964- ஆம் ஆண்டில் அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தில் எமக்குக் கிடைத்தன. அவற்றை ஆய்வு செய்த யான் 'சுமர் மொழி ஒரு திராவிட மொழி' (Sumerian,a Dravidian language) என்னும் பெயரில் 1965 -ஆம் ஆண்டு கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தில் ஒரு கைந்நூலை வெளியிட்டேன். அக்காலத் தொடக்கம் சென்ற இருபது ஆண்டுகளாகச் செய்த ஆய்வின் விளைவாக 'சுமேரோ-திராவிடம் அல்லது குமரிக் குடும்ப மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதி' (An Etymological Dictionary of Sumero-Dravidian or Kumari family of Languages) என்னும் பெயரில் எம்மால் தயாரிக்கப்பட்ட பேர் அகராதி ஒன்றில் பொறிக்கப்பட்ட சுமர் மொழிச் சொற்களை இவ்வாய்வுக்குப் பயன்படுத்தினேன்.

சுமர் மொழியின் இலக்கண அமைப்பு, 'சொல்வடிவங்கள் என்பன தமிழில் உள்ளனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையின் சுமர் மொழி பண்டைத் தமிழிலிருந்து கிளைத்த ஒரு மொழியென்றும், அதில் காணப்படும் பழைய சொல்வடிவங்கள் அழிந்து போன பழந்தமிழ்ச் சொற்களைப் பெரிதும் ஒத்திருக்கக் கூடும் என்றும் இரு கோட்பாடுகளை இந்நூலில் நிலைநாட்டியுள்ளேன். ஒரு மொழியின் மூலச் சொற்களை இன்னொரு மொழியின் அழிந்து போன மூலச் சொற்களின் தரவுகளாகக் கொண்டு ஆய்வு செய்யும் முறை ஒரு புதிய அணுகுமுறையாகும். சுமர்மொழி பண்டைய சொற்களைக் கல்லேடுகளிற் பொறித்து விட்டு வழக்கிழந்த மொழியாகி விட்டது. தமிழ் மொழியோ இன்றைய சொற்களின் பண்டைய மூல வடிவங்களைக் கால வெள்ளத்தில் இழந்து விட்டது. எனவே இனமொழிகளுள் ஒன்று ஏற்படுத்தியுள்ள வெற்றிடம் மற்றைய மொழிச் சொற்களால் நிரப்பப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக 'பார்த்தல்' என்னும் பொருள்படும் காண், பார் என்ற தமிழ்ச் சொற்களின் மூலச் சொல் சுமர் மொழியிலுள்ள gar, kar என்னும்

சொற்கள். இவையே தமிழ் வெற்றிடத்தில் நிரப்பப்பட்ட மூலச் சொற்கள். kar > காண் kar > பார். நிரப்பப்பட்ட மூலச் சொல் சரியானது என்பது இவ்வெடுத்துக்காட்டுக்களிலிருந்து தெளிவாகிறது. சுமர்ச் சொற்களின் உதவியின்றி 'தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி' என்னும் இந்நூல் உருவாகியிருக்க முடியாது.

இந்நூல் தமிழ்ப்பல்கலைக்கழகத்திற் சென்ற எட்டு மாதங்களாக நடத்திய ஆய்வின் பயனாக உருவாக்கப் பட்டுள்ளது. இந்நூலை ஆக்குவதற்கு முழுப் பொறுப்பாகவிருந்து எல்லா வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தந்தவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர், பெருந்தகைச் செம்மல் பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் ஆவர். தமிழ்மொழி ஆய்வு புதிய பல கோணங்களிலிருந்து அணுகப்பட வேண்டுமென்னும் சிந்தனை படைத்த இவர் 'சிறப்பாய்வாளர்' தகைமையை எமக்கு அளித்து இந்நூலை உருவாக்கும்படி பணித்தார்கள். இவருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் படியை வாசித்து ஏற்ற திருத்தங்களைச் செய்துதவியும் ஆய்வு நூல்கள் பலவற்றைத் தந்துதவியும் பல்வேறு வகையில் இந்நூலாக்கத்துக்குத் துணை புரிந்த எமது மொழியியல் துறை தலைவர் பேராசிரியர் கி.அரங்கன் அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகுக.

என்றும் இளமை குன்றாது கன்னியாக வாழும் என் தமிழ் அன்னையின் திருவடி மலர்களுக்கு என் சிறு காணிக்கையாக இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆ.சதாசிவம்

சுருக்கக் குறியீடுகள்

<u>தமிழ்</u>

க	கன்னடம்	Ka -	Kannada
குர்	குருக்கு	Ga -	Gadba
கொ	கொடுகு	Ko -	Kotā
கொல	கொலாமி	Kod -	Kodugu
கோ	கோடா	Kol -	Kolāmi
த	தமிழ்	Go -	Gonda
து	துளு	Ta -	Tamil
தெ	தெலுங்கு	Tu -	Tulu
தோ	தோடா	Te -	Telugu
நை	நைகி	Nk -	Niki
ப	பரசி	Pa -	Parsi
ம	மலையாளம்	Ma -	Malayalam
மோ	மோல்டா		
கி.மு.	கிறித்துவுக்கு முன்		

தொல்.எழு:	தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
தொல்.சொல்:	தொல்காப்பியம் சொல்லதிகாரம்
தொல்.சொல்.பெய:	தொல்காப்பியம் சொல்லதிகாரம், பெயரியல்
தொல்.சொல்.வினை:	தொல்காப்பியம் சொல்லதிகாரம், வினையியல்
தொல்.சொல்.இடை:	தொல்காப்பியம் சொல்லதிகாரம், இடையியல்

தொல்.பொரு.புற:	தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியல்
தொல்.பொரு.மர:	தொல்காப்பியம் பொருளதிகாரம், மரபியல்

English

E.	English	Ka:	Kannada
Got.	Gothic	Ga:	Gadba
Gr.	Greek	Ko:	Kota
Hit.	Hittite	Kod:	Kodugu
L.	Latin	Kol:	Kolami
Pers.	Persian	Go:	Gonda
S.	Sanskrit	Ta:	Tamil
Sinh.	Sinhalese	Tu:	Tulu

B: Brunnow 'A classified list of all simple and compound cuneiform ideographs', Leyden 1889.

M: Meissner Brano, Seltene Assyrische ideogramme, Leipzig, 1910.

CS: Chinese and Sumerian

CSSL: A Sign-List in Chinese and Sumerian

ஆ. சதாசிவம்

1. முன்னுரை

'தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி' என்னும் இந்நூல் மனிதன் தமிழிற் பேச ஆரம்பித்த காலத்திலிருந்து சொற்களின் பிறப்பு, அவற்றின் ஒலி வடிவம், பொருள் என்பன பற்றி விளக்குகின்றது. சொல் என்பது பொருளைக் குறித்து வரும் என்றும், ஒருவன் பொருட்டன்மை யுணர்த்துதற்குச் சொல் கருவியாய் நிற்கும் என்றும் சொல்லுவானது கருதுதற்றொழிலைச் சொன்மே லேற்றிச் சொற் பொருள் குறித்து வருவது என்றும் சேனாவரையர் சொல் என்பதன் விளக்கத்தை வரைந்துள்ளார்.[1] 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல்.சொல்.155) எனத் தொல் காப்பியரும் அங்ஙனம் கூறுவார். சொற்பொருட் காரணம் ஆசிரியர்க்குப் புலனாவதல்லது நம்மனோர்க்குப் புலனாகாமையின், மொழிப் பொருட் காரணம் இல்லை யென்னாது விழிப்பத் தோன்றா என்பதை 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'(தொல்.சால்.394) எனத் தொல்காப்பியர் மிக அழகாகக் கூறியுள்ளார். சொற்களின் பொருட்காரணம் விழிப்பத் தோன்றா வெளவே ஆழமாக ஆராய்ந்து பார்க்கின் அவை புலப்படும் என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டுள்ளது.

தோற்றக் காலத்தில் தமிழ்ச் சொல் ஓரசைச் சொல்லாக விருந்தது என்பதும் இவ்வோரசையின் ஒலியமைப்பு மெய் + உயிர்+மெய் ஆக விருந்தது என்பதும் இந்நூலால் திட்டவட்டமாக வலியுறுத்தப் படுகிறது. கர் (க்+அ+ர்), கார் (க்+ஆ+ர்), கல் (க்+அ+ல்), கால்

(க்+ஆ+ல்), கம் (க்+அ+ம்), காம் (க்+ஆ+ம்), குர் (க்+உ+ர்), கூர் (க்+ஊ+ர்), குல் (க்+உ+ல்), கூல் (க்+ஊ+ல்), கும் (க்+உ+ம்), கூம் (க்+ஊ+ம்) முதலியனவே தோற்றக் காலத்துத் தமிழ்ச் சொல் வடிவங்கள். இவ் அசைச் சொற்களின் முக்கிய பண்புகள்.

(1) சொல்லின் முதலுறுப்பான மெய் ககர மெய் மட்டுமே யாகும். ஆதி மனிதனின் அடித் தொண்டையிலிருந்து பிறப்பது இம்மெய்யொலியே. சொல் வரலாறு என்பது இக்ககர மெய் சகர, தகர, பகர, மகர, வகர மெய்யொலி களாக மாற்றம் பெற்றும், அக் ககர வொலி தேய்ந்து உயிர் முதற் சொற்களாக மாற்றம் பெற்றும் வருவதாகும். இந்நூலிற் கூறப்படும் அடிப்படையான கோட்பாடு இதுவே.

(2) தமிழில் உள்ள உயிர் முதற் சொற்களெல்லாம் சொன் முதற் ககர மெய்யொலியின் கெடுதலினால் ஏற்பட்டவையாகும்.

தமிழ்ச் சொற்கள் எக்காலத்தில் தோற்றமெடுத்தன என்பதை வரையறுத்துக் கூறுதல் முடியாததாகும். தமிழ் மொழி வளர்ச்சி தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றோடு பின்னிப் பிணைந்து நிற்கின்றது. தமிழ் மக்கள் ஆதியில் எங்கிருந்தார்கள் என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அக்கருத்துக்களுள் ஒன்று பின்வருமாறு: இப்போது குமரி முனைக்குத் தெற்கே யுலவும் இந்தியப் பெருங்கடல், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெரு நிலனாயிருந்த தென்பதும், ஆபிரிக்காவின் கீழ்க் கரையிலிருந்து இந்தியப் பெருங்கடலினிடையே நீளத் தொடர்ந்து சென்ற தீவுகளோ அன்றிப் பெரிய நிலமோ இருந்திருத்தல் வேண்டுமென்பதும் புவியியலாரதும் ஆராய்ச்சியாளரதும் கருத்தாகும். இலக்கிய காரர் பின்வரும் சிலப்பதிகார (11,17-22) அடிகளுக்குக் கொடுக்கும் விளக்கம் இக் கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றது.

அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென் றிசை யாண்ட தென்னவன் வாழி

என்பது மாங்காட்டு மறையோன் பாண்டிய மன்னனை வாழ்த்தும் பகுதியாகும்.

பஃறுளியாறு என்பது குமரியாற்றிற்குத் தெற்கேயிருந்த குமரிமலைத் தொடராகிய பன்மலையடுக்கத்தின் தென்பால் ஓடியதோர் ஆறு. தென்பாலமைந்த கடல் மீதூர்ந்து தமிழ்நாட்டைக் கொள்ள வரும் நிலையிற் பஃறுளியாற்றை முதலிற் கொண்டது என்பது புலனாக இளங்கோவடிகள் பஃறுளியாற்றை முதலிற் குறித்திருத்தல் காணலாம். குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையே அமைந்து கடலாற் கொள்ளப்பட்ட 49 நாடுகளும் 700 காவதப் பரப்புள்ளன என்பர் அடியார்க்கு நல்லார். ஒரு காவதம் என்பது 8000 முழங் கொண்டது. (2 ¼ மைலும் 80 முழங்களும்) என்பர். இவ்வளவுப்படி 700 காவதம் என்பது 1600 மைல்களாம். இச் குமரிநாடு கடலா லழிந்த தொன்மை வரலாற்றினையே இறையனார் களவியலுரை கூறுகின்றதென்பர் மறைமலையடிகளார். [2]

இயற்கையின் சீற்றத்தின் பாற்பட்டுப் பண்டைய நாடுகள் பல கடல் கோள்களால் அழிந்தொழிந்த வரலாற்றினைப் பல்வேறு நாட்டு மனித வரலாறுகள் கூறும். இறையனார் களவியலார் இருபெருங்கடல் கோள்களால் தமிழகத்துப் பெருநிலப்பரப்பு இந்து மாசமுத்திரத்தின் அடியில் அமிழ்ந்து கிடக்கின்றது என்பர். இந்நிலப்பரப்பு பாண்டியரது ஆட்சிக்குட்பட்டதாயிருந்தது என்பர். பாண்டியரது அவைக்களத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 ஆண்டுகள் நிலைத்திருந்தன வென்றும், முதலூழியிறுதிக் கண் தென் மதுரை யகத்துத் தலைச் சங்கம் 4440 ஆண்டுகள் நிலவிற்றென்றும், அக்காலத்தில் ஏற்பட்ட பெருங் கடல் கோள்களால் 49 நாடுகள் கடலுள் அமிழ்ந்து விடவே அங்கு வாழ்ந்த மக்கள் வடக்கு நோக்கிக் குடி பெயர்ந்து வாழ்ந்த காலத்தில் பாண்டிய மன்னன் கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை அமைத்த போது அவ்விடைச் சங்கம் 3700 ஆண்டுகள் நிலவிற் றென்றும், அந்நிலப்பரப்பும் பின்னர் ஏற்பட்ட கடல் கோள்களால் கடலுள் அமிழ்ந்து விடவே மக்கள் வடக்கு நோக்கிச் சென்று குடியமர்ந்த காலத்தில் இப்போதுள்ள மதுரை (தென் மதுரை) யில் கடைச்சங்கம் எனப்படும் மூன்றாவது தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டு 1850 ஆண்டுகள் நிலவிற்றென்றும் இறையனார் களவியலுரை கூறும்.[3] கடல் கோள்களால் அழிந்தொழிந்த பெரு நிலப்பரப்பையே உலக வரலாற்றாசிரியர் லெமூரியா அல்லது குமரிநாடு என அழைப்பர்.

குமரி நாடும் அங்கு வாழ்ந்த மக்களும் பற்றி மேல்நாட்டு வரலாற்றாசிரியர் கூறுவனவற்றை இனிக் காண்போம். 'இந்து

சமுத்திரம் மனித இனத்தின் தொட்டில்' (Indian ocean, the cradle of the Human race-Indian Foreign Review,1980) என்னும் ஆய்வுக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள் இங்கு மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன.[4]

'' 25,000 ஆண்டுகளுக்கு முன் நிலவிய ஒரு பெரிய நாகரிகத்தின் எஞ்சிய கூறுகள் இந்து மா கடலின் அடியில் அமிழ்ந்து கிடக்கின்றன. பூமியின் அடித்தள நகர்வுகளால் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடல் கோள்களின் விளைவாக ஏற்பட்டதே இது.''

''வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நிலப் பெயர்வுகள், வாயு அமுக்கங்கள், பூமி நடுக்கம், எரிமலை வெடிப்பு என்பனவற்றால் பூமியின் மேற்பரப்பிலும் சமுத்திரங்களின் தளத்திலும் காலத்துக்குக் காலம் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இது எல்லாக் கண்டங்களின் கரையோர நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திற்று.''

''திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற மனித, விலங்குகளின் எலும்புக் கூடுகள் மெடித்தரேனிய நாடுகளில் பண்டு வசித்த மனித இனத்தவர் தென்னிந்தியாவுக் கூடாகவே அங்கு சென்று குடியேறினர் என்பதைக் காட்டுகின்றது.''

''தென்னிந்தியாவில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் சுவாமி விவேகாநந்தர் பின்வருமாறு கூறுவர். சென்னை மாவட்டம் தமிழ் மக்களின் ஆதி இருப்பிடம். இவர்களின் நாகரிகம் மிகப் பழமையானது. இத்தமிழ் மக்களின் ஒரு பகுதியினரான சுமேரியர் பண்டைய காலத்தில் யூபிரதீசு நதிக் கரையில் குடியேறி நிலைநாட்டிய வானவியல், சமயம், நீதிக் கொள்கைகள், பழக்க வழக்கங்கள் என்பன அஸ்ஸீரிய, பாபிலோனிய நாகரிகங்களுக்கு வித்திட்டது மன்றி கிறித்தவ பைபிள் கூறும் வரலாறுகளுக்கும் மூலமாயமைந்தன.''

தமிழ் மக்களதும் அவர்தம் இலக்கிய வரலாற்றினதும் கால எல்லை 20,000 ஆண்டு பழமையானது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வரலாற்றாசிரியர், அகழ் வாய்வாளர், புவியியலார் ஆகியோரின் விளக்கத்தின்படி இன்று இந்துமாசமுத்திரத்தில் அமிழ்ந்து கிடக்கும் இலெமூரியாக் கண்டமே தமிழ் மக்களின் பண்டைய இருப்பிடம்.

'' கடலுள் அமிழ்ந்து கிடக்கும் பெரிய நிலப்பரப்புப் பற்றி பல அறிஞர்கள் விளக்கியுள்ளனர். சேர் வால்டர் ரலி (Sir Walter Raleigh) என்பவர் தாம் எழுதிய உலக வரலாறு (History of the World) என்னும் நூலில் 'கடல் கோளின் பின் புதிதாக உருவாக்கப்பட்ட மனித இனக் குடியேற்றப் பகுதியே இந்தியா' என்பர். மிக அண்மைக் கால ஆய்வுகளின் படி மனித இனத்தின் தோற்றம் இந்துமாசமுத்திரத்தினுள் அமிழ்ந்து கிடக்கும் பெரிய நிலப்பரப்பு என்பதை 1900 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வெளியான 'மனிதனின் விஞ்ஞானம்' (Science of Man) என்னும் சஞ்சிகை கூறுகின்றது.

''சேர் யோன் ஈன்ஸ் என்னும் அறிஞர் 1897 -ஆம் ஆண்டு பிரித்தானிய கழகத்தில் (British Association) ஆற்றிய உரையில் மனித இனத்தின் தொட்டில் இந்தியா ஆகும் எனக் கூறியுள்ளார். இக்கொள்கையை கலாநிதி மாக்கிளியன் (Dr.Maclean) என்னும் அறிஞர் தம் நூலில் ஏற்றுள்ளார். ஸ்கொட் எலியட் (Scott Eliot) என்பாரும் தம் நூலில் இந்து சமுத்திரமே மனித இனத்தின் தோற்ற நிலையம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.''

அலெக்சாண்டர் கொண்டிராரோவ் எனும் அறிஞர் தாம் அண்மையில் (1974) வெளியிட்ட 'மாக்கடல் மர்மம்' (Riddles of Three Oceans) என்னும் நூலில் குமரி எனப்படும் இலெமூரியாக் கண்டமே மனித இனத்தின் தோற்ற நிலையம் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அவர் கூறுவதாவது :[5]

உருசிய அறிஞரான ரெசெத்தோவ் (Reshetov) என்பார் மிக அண்மைக் காலம் வரை வெளியான புவியியல் அடிப்படையிலான புதிய கண்டுபிடிப்புக்களை ஆதாரங் காட்டித் தாம் எழுதிய 'பூமியின் தன்மையும் மனித இனத்தின் தோற்றமும்' (The Nature of the Earth and the Origin of Man) என்னும் நூலில் இலெமூரியாக் கண்டம் முக்கிய பங்கினை வகித்துள்ளது எனக் கூறியுள்ளார். இப்போதுள்ள மடகாஸ்கர், இலங்கை, அராபியக் கடல் உள்ளிட்ட இந்து சமுத்திரத்தின் பரந்த பகுதி ஏறக்குறைய 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு பரந்த நிலப்பரப்பாய் விளங்கியது என்றும், பின்னர் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட புவியியல் அதிர்ச்சி விளைவுகளின் பயனாய் இந்நிலப்பரப்பின் பல்வேறு பகுதிகள் சிதறி வெடித்து இந்து சமுத்திரமாக மாறி உருப்பெற்றன என்றும் அவர்

கூறுவர். 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல்கோள்களின் விளைவாக அங்கு வசித்து வந்த மனித இனத்தினர் மேற்கே ஆபிரிக்காவுக்கும், வடக்கே இந்தியாவுக்கும் சென்று குடியேறினர்''

''பண்டைய உலக நாகரிக வளர்ச்சி பற்றி இதுவரை நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டும் மர்மம் யாதெனில், இந்து சமுத்திரத்தின் அடிப்பரப்பில் தேங்கிக் கிடக்கும் இலெமூரியாக் கண்டம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்வது மிக மிக இன்றியமையாததாகும் என்பது. இக்கண்டம் கடலில் அமிழ்ந்த காலத்தில் மிக முதிர்ச்சி பெற்ற மனித நாகரிகத்தின் இருப்பிடமாக விளங்கியது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.''

'' பண்டைத் தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் கூற்றின்படி தமிழ் மக்களின் ஆதி வசிப்பிடமான தமிழகம் 'நாவலந் தீவு' என்பதாகும். இது இந்து சமுத்திரத்தில் சம ரேகை பகுதியை அடுத்து தோன்றிய நிலப்பரப்பாகும். மத்திய காலப் பகுதியில் தோன்றிய தமிழ் உரைநடை நூல்கள் தமிழ்ப் புலவோரும் அறிஞரும் ஒன்றாக அமர்ந்து தமிழாய்ந்த மிகப் பழைய தமிழ்ச் சங்கம் 10000 ஆண்டுகளுக்கு முன்னர் கடல் கொண்ட இலெமூரியா எனப்படும் தென்கண்டத்தில் **(Southern Continent)** நிலவிற்று என்றும் இலெமூரியாவும் அதன் தலைநகரமான தென்மதுரையும் இந்துசமுத்திரத்தால் விழுங்கப்பட்டதன் பின்னர் தமிழ்ச்சங்கங்கள் முடிவுற்றன என்றும் கூறும்.''

''மேலும் திராவிட மக்களின் முன்னோடிகள் மொசெப்பத்தேமியா, ஈழம், காக்கேசியா முதலிய மேல்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறினர் என்ற கூற்று இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதற்கில்லை. மொழியியல் தரவுகளின் அடிப்படையில் ஆராயும்போது திராவிட மொழிகள் தென்பகுதியிலிருந்து வடபகுதி நோக்கிப் பரந்து சென்றன என்பது ஏற்றுக்கொள்ளத்தகும். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேப்பாளம் முதலிய நாடுகளின் மொழிகளை ஆய்வு செய்த சோவியத்து இந்திய மொழி அறிஞர் கூற்றின்படி திராவிடர்கள் தெற்கிலிருந்து வடபிராந்தியங்களுக்குச் சென்று குடியேறினர் என்ற கோட்பாடு மிக அண்மைக் காலத்தில் வலுப்பெற்று வருகின்றது''

இதுகாறும் கூறியவற்றிலிருந்து தமிழகத்தின் தென்பாலும்

மேற்கிலும் பண்டு அமைந்திருந்த பாரிய நிலப்பரப்பே 'குமரி' எனப்படும் 'லெமூரியா' என்பதும், இங்கேயே ஆதிமனித இனமாகிய தமிழினம் தோன்றிற்று என்பதும், இத்தமிழினத்தின் ஒரு பகுதியினரே கடல் கோள்களின் பின் யூபிரதீசு நதிக்கரையாகிய மொசெப்பத்தேமியாவில் குடியேறிய சுமேரியர் (šumer<Kumari) என்பதும் பெறப்பட்டன. இதுபற்றி டேவிட் டிறிங்கர் (David Dringer)என்னும் மேல்நாட்டு அறிஞர் பின்வருமாறு கூறுவர்.[6] ''சுமேரியர் என நாம் இன்று அழைக்கும் இனந்தெரியாத மக்கட் கூட்டமொன்று கி.மு.4000-க்கு முன்னாக மொசெப்பத்தேமியாவின் தென்பகுதிக்குள் வந்து சுதேசிகளுடன் போரிட்டு வெற்றி பெற்று இந்நாட்டில் தம் ஆட்சியை நிறுவலாயினர். அதன் பின் ஏறக்குறைய 1500 ஆண்டுகள் மத்திய கிழக்கில் தனிப் பேரரசு நடத்தி இலக்கியம், கலை, ஆட்சி, சட்டம் முதலிய துறைகளில் பெரும் வளர்ச்சியை உண்டு பண்ணினர்.''

பிரித்தானிய நூதன சாலையின் அதிபராக இருந்து அகழ்வாராய்ச்சிக்காக மொசெப்பத்தேமியா சென்றிருந்த எச்.ஆர்.கால் (H.R.Hall) என்னும் அறிஞர் தாம் எழுதிய 'அண்மைக் கிழக்கின் பண்டைய வரலாறு' [7] என்னும் நூலில் சுமேரியர் பற்றிப் பின்வருமாறு கூறுவர்:

> அகழ்வாராய்ச்சியிற் கண்ட சுமேரிய மக்களின் எலும்புக் கூடுகளும் தோற்றமும் அவர்தம்மைச் சூழ்ந்திருந்த அயல் நாட்டவரினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. அவர்தம் மொழி ஆரியரதும் செமித்திக்கு மக்களினதும் மொழிகளினின்றும் மிக வேறுபட்டது. அவர்தம் மொழி இந்தியாவைச் சார்ந்தது. பண்டைய சுமேரியர் விட்டுச் சென்றவற்றின் அடிப்படையில் நோக்கும்போது இந்தியாவில் வாழும் திராவிட இனத்தவரின் பண்பினர் இவர்கள் என்பது கருதத்தக்கது. திராவிட மொழி பேசும் தென்னிந்திய இந்துக்களின் தோற்றமே இவர்களின் தோற்றம். சுமேரியர் இந்திய இனத்தவர். தரைவழியாகவும் கடல் வழியாகவும் இவர்கள் பாரசீகத்தின் இரு நதிகளுக்குட்பட்ட நிலப் பிரதேசத்தினுள் புகுந்திருக்கலாம். இவர்களின் கலைகள் தோன்றி வளர்ந்த இடம் இந்தியா (பெரும்பாலும் சிந்துவெளி). அங்கேயே அவர்களின் உரு எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டு பின் பாபிலோனியாவில் செங்கல்லில் எழுதப்பட்டமையின் ஆப்பெழுத்து வடிவாயின என்றும் கருத இடமுண்டு.''

சுமேரியன் (Sumerian) என்னும் ஆங்கிலச் சொல் சுமேரு (šumêru) என்பதினின்றும் பிறந்தது. இது 'சுமர் (šumer) நாட்டினது' எனப் பொருள்படும். சுமர் நாட்டினது மொழி சுமேரி (šumêri) எனக் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படுகிறது. ஏறக்குறைய கி.மு.4000 ஆண்டளவில் குமரி நாட்டிலிருந்து பண்டைத் தமிழர்கள் குடியேறியதாகக் கருதப்படும் சுமர் (<குமரி) என்னும் நாடு தற்போது 'ஈராக்கு' என அழைக்கப்படுகிறது. தென் மொசெப்பத்தேமியாவில் வடக்கே பாக்தாது நகரையும் தெற்கே பாரசீகக் குடாவையும் எல்லையாகவுடைய ஏறக்குறைய 10,000 சதுரமைல் பரப்பிலான நிலப்பரப்பே சுமர் நாடாகும்.[8]

சுமேரு (šumêru) என்பது குமேரு (Kumêru) என்னும் துளுமொழிச் சொல்லின் ககரம் சகரமாக ஒலி மாற்றம் பெற்ற சொல்லாகும். இது கேரளர் சேரர் ஆனது போலவாகும். திராவிட அகராதிகாரர் (DED,1448) குமேரு என்பதன் பொருள் 'கமச் செய்கைக்காகப் பண்படுத்தப்பட்ட தரிசுநிலம்' எனக் கூறுவர். குமேரு என்பதன் கன்னட, தமிழ் வடிவங்கள் 'குமரி' என்பது. இதுவும் அதே பொருளைச் சுட்டுகின்றது. குமரி என்பது குமேரு என ஆயிற்று. குடியேற்றக்காரர்கள் தாம் எந்நாட்டிலிருந்து வந்தார்களோ அந்நாட்டின் பெயராகிய குமரி என்பதையே புதிய நாட்டிற்கும் பெயராக்கியதில் வியப்பொன்றுமில்லை. அவர்கள் பாரசீகக் குடாவில் முதல் கால் வைத்து வாழ்க்கையை ஆரம்பித்த இடத்திற்கு 'ஊர்' எனப் பெயரிட்டனர். ஊர் என்பது சுமர்நாட்டு வரலாற்றில் மிகப் பிரசித்தி பெற்ற பெயராகும். அவர் தம் இராச்சியத்தின் தலைநகர் 'நிப்பூர்' எனப்படும். அவர் தம் புதிய நாட்டைக் 'களம்' (Kalam) என்ற பெயராலும் அழைத்தனர். பாரசீகக் குடாக் கடற்கரையில் பஃரன் (Bahran) என்னும் பெயருடன் இன்று விளங்கும் விமானத் துறையே அக்காலத்திய 'ஊர்' என்னும் பட்டினம் என்பதை ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். அம்மக்கள் தம் தந்தையரை அப்-ப (அப்பன்) என்றும் அத்-த (அத்தன்) என்றும் அழைத்தனர். தாயை அம (அம்மா) என்றும் அழைத்தனர். ஒருவன் தன்னை கன் (யான்) என்றும், முன்னிலையானை நீ (நீ) என்றும் அழைத்தான். இங்ஙனமே அம்மக்கள் புதிதாகச் சூட்டிய இடப்பெயர்கள், உறவுப் பெயர்கள் ஆகியனவெல்லாம் அக்காலத்திய தமிழ்ப் பெயர்களாகவே காணப்படுகின்றன.

ஏறக்குறைய கி.மு.4000 ஆம் ஆண்டளவில் குடியேறியவர்கள்

என வரலாற்றாசிரியர்களாற் கூறப்படும் இம்மக்கள் எழுதிய கல்வெட்டுக்கள் கி.மு.3300 ஆம் ஆண்டிலிருந்து திகதியிடப்பட்டுள்ளன. ஏறக்குறைய 500 ஆண்டுகள் (கி.மு.3300-2800) எழுதிய கல்வெட்டுக்கள் அனைத்தும் உரு (படம்) எழுத்தில் அமைந்துள்ளன. இவற்றைப் படித்தவர்களால் பொருள் கண்டு கொள்ளப்படாது நூதன சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. கி.மு.2800-1950 ஆம் ஆண்டு வரை எழுதப்பட்ட ஆப்பெழுத்து வடிவங்கள் (**Cuneiform**) சுட்ட களிமண்ணில் எழுதப்பட்டவை. 19 ஆம் நூற்றாண்டு இறுதியில் நடத்திய அகழ்வில் கிடைக்கப் பெற்ற ஆயிரத்துக்கும் மேலான செங்கல் வெட்டுக்கள் ஏறக்குறைய 500 ஆண்டுகள் பூமியின் அடியில் புதைந்து கிடந்தபோதும் எந்தவித பாதிப்பின்றி கிடந்துள்ளன. இவற்றை உண்டு பண்ணிய சுமர் மக்களும் அவர்தம் நாகரிகமும் மனித ஞாபகத்திலிருந்து மறைந்து 5000 வருடங்களாகியும் இன்று மீண்டும் அவை பேச ஆரம்பித்து விட்டன. இது ஒரு விந்தையே. அகழ்வாய்வில் கிடைத்த செங்கல்வெட்டுக்களின் பொருளை எவ்வாறு கண்டு கொள்வது எனத் திணறிய ஆய்வாளர்களுக்கு இறைவனிட மிருந்து கிடைத்தது போல் ஒரு வரப்பிரசாதம் கிடைத்தது. அதுதான் ஈரானிலுள்ள பெகிஸ்தான் (**Behistan**) மலையினுள் கண்டெடுக்கப்பட்ட மும்மொழிக் கல்வெட்டு. இது கி.மு.521-486 வரை ஆட்சி புரிந்த தாரியஸ் (**Darius**) என்னும் மன்னன் தன் கீர்த்தியை பேர்சியன், ஈழமைற்று, அக்காடியன் என்னும் மும்மொழிகளில் ஒன்றன் பின் ஒன்றாக வரைந்துள்ள கல்வெட்டு. இவற்றுள் பேர்சியன் (**Persian**) ஒரு தற்கால மொழியானமையின் அதில் அமைந்த இயற்பெயர்களின் ஒலியமைப்பு உதவி கொண்டு ஈழமைற்று (**Elamite**) மொழியினதும், அக்காடியன் (**Akkadian**) மொழியனதும் ஒலியமைப்பை இலகுவில் அறிந்து கொள்ள முடிந்தது. இவற்றுள் அக்காடியன் மொழி கி.மு.2800 வரையிலிருந்து சுமேரியனும் சேர்ந்து வாழ்ந்து வரும் ஒரு செமித்துக்கு மொழி. இம்மொழி சுமேரியச் செங்கல் வெட்டுக்களின் பொருளைப் படித்தறிந்து கொள்ள உதவிற்று. இக்காரணத்தால் கி.மு.2800 க்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட உரு எழுத்தாலான சுமேரியப் பழங்கல்வெட்டுக்கள் பொருள் காணப்படாது கிடக்கின்றன. இவை தனித்தமிழில் அமைந்த கல்வெட்டுக்கள் என நம்பப்படுகிறது. இவற்றிற்கும் மொகெஞ்சதரோ,கரப்பா ஆகிய சிந்துவெளி நகரக் கல்வெட்டுக்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றிப் பேராசிரியர்

ஸ்டீபன் லாங்டன் (Stephen Langdon) என்பார் சேர், டீயான் மார்சல் எழுதி வெளியிட்ட 'மொகெஞ்சதரோவும் சிந்து வெளி நாகரிகமும்' நூலின் பிற்குறிப்பில் குறிப்பிட்ட பின்வரும் விளக்கம் ஈண்டு நோக்கத்தக்கது.[9]

''கி.மு.3500 வரையிலான காலப்பகுதிக்கு உரியன என மதிப்பிடப்படும் ஜெம்டெட்டு நசாரில் (Jemdet Nasar) கிடைத்த ஏறக்குறைய 200 சுமேரியக் கல்வெட்டுக்கள் மிகப்பழைய சுமேரிய உருவெழுத்துக் கல்வெட்டுக்களாகும். இவற்றோடு பிந்திய சுமேரிய (கி.மு.3000-2000) செங்கல் வெட்டுக்களுடன் உள்ள ஒற்றுமையிலும் பார்க்கச் சிந்துவெளிக் கல்வெட்டுக்களுடன் (கி.மு.3250-கி.பி.2750) உள்ள ஒற்றுமை மிகப்பெரிதாகும் என்பது என் ஆய்வின்போது கண்ட உண்மையாகும். இம்மிகப்பழைய சுமேரிய எழுத்துக்களும் சிந்துவெளி எழுத்துக்களும் உரு எழுத்தில் அமைந்தவையாகும். இவ்வீர் எழுத்துக்களும் ஓவியந் தீட்டப்பட்ட மட்பாண்டம் முதலியவற்றுடன் இணைந்து காணப்படுகின்றன. இவ்வீர் எழுத்துக்களும் வலது பக்கமிருந்து இடது பக்கமாக 90 பாகை நிமிர்ந்து நிற்கும் நிலையில் எழுதப்பட்டவை. உரு எழுத்துக்களாய் அமைவன இவை. ஆனால் பின்னைய சுமேரிய ஆப்பெழுத்துக்கள் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக எழுதப்பட்டு 90 பாகை சமாந்தரமாகச் சரிந்து நிற்பன. பின்னைய சுமேரிய மொழியில் உருவான இலக்கண வினைவடிவங்கள் ஒன்றும் இம்முன்னைய சுமேரிய மொழியில் காணப்படாது மிக எளிமையாகத் தோற்றமளிக்கின்றன. பொதுவாக நோக்குமிடத்து மிகப்பழைய சுமேரிய உரு எழுத்து வடிவங்களும் சிந்து வெளி உருவெழுத்து வடிவங்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றின எனக் கருதலாம். உதாரணமாகப் பின்வருவதனைக் கவனிக்க:

சிந்து சுமேரியன்

15.  = P1.84  'gal'

பெரிது, அதிகம்

தமிழில் இது 'கள்' என்றும் 'கழி' என்றும் வழங்கும்.

சுமர் நாட்டில் ஏறக்குறைய 1850-1950 ஆகிய நூற்றாண்டுக் காலப்பகுதியில் வெவ்வேறு நகரங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற

கல்வெட்டுக்களும் செங்கல் வெட்டுக்கலும் ஈராயிரத்துக்கும் மேற்பட்டவை. இவற்றுள் கி.மு.3000-க்கும் முற்பட்ட காலப்பகுதிக்குரியனவெனக் கணக்கிடப்பட்ட கருங்கல் வெட்டுக்கள் உருவெழுத்துக்கள் (Pictographic inscriptions) ஆகும். சிந்து வெளிக் கல்வெட்டுக்களின் சாயலில் அமைந்த இவற்றின் பொருளை எவராலும் கண்டு கொள்ள முடியவில்லை. கி.மு.3000க்குப் பிந்திய காலப்பகுதியிலெழுந்த குறியெழுத்துச் செங்கல் வெட்டுக்கள் (ideographic inscriptions) பல. இவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட குறியெழுத்துக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 400 வரையிலாகும். ஒவ்வொரு குறியெழுத்தும் ஒன்றோ பலவோ பொருள்களைச் சுட்டி நிற்கும். சில குறியெழுத்துக்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் எல்லாம் கி.மு.1950 வரையிலான காலப்பகுதியில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவையாய் வந்து சேர்ந்தவையாகும். கி.மு.2800 க்கு முன் உயிர் எழுத்துகளுக்கெனத் தனிவடிவங்கள் இல்லை. மூவொலி (மெய்+உயிர்+மெய்). அசைச் சொற்களின் நடுவே அமைந்து கிடப்பவையே உயிரொலிகள். இக்குறியெழுத்துக்களிலிருந்து படிப்படியாக ஒலியெழுத்துக்கள் (Phonetic Writing) பிறந்தன. சுமர் மொழியில் நான்கு (அ,எ,இ,உ) உயிரெழுத்துக்களும் பதினான்கு மெய்யொலிகளும் (k,g, ;t,d;p,b;m,n;T,l;š,s,z) உள்ளன. உயிரெழுத்துக்களுக்கு குறில், நெடில் என்ற மாத்திரையளவு இல்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் குறிலாகவோ நெடிலாகவோ ஒலிக்கும். மெய்யொலிகளுள் g̃ என்பதை , ḫ எனவும் இட்டு எழுதுவர். இம்மெய்யொலிப் பாங்குகள் தமிழல்லாத ஏனைய 22 திராவிட மொழிகளிலுள்ளன போன்று காணப்படுகின்றன. தமிழ் செந்தமிழாக மாற்றம் பெற்று அமைக்கப்பட்ட காலப்பகுதியில் தற்போதைய ஒலிவரி வடிவங்களைப் பெற்றிருக்கலாம். தமிழெழுத்து வரிவடிவங்கள் பேச்சு ஒலியைப் பிரதிபலித்துக் காட்டவில்லை யென்பது யாவரும் அறிந்ததே.

தமிழிலிருந்து கிளைத்தது எனக் கருதப்படும் சுமர் மொழி கி.மு.2000-க்குப் பின் இவ்வுலக வாழ்வை நீத்து விட்டது. இறந்த மொழியான இது சென்ற 4000 ஆண்டுகளாக மாற்றமெதுவும் பெறாது கிடக்கின்றது. ஆனால் தமிழ் மொழியோ வளர்ந்து வரும் ஒரு மொழி; உபயோகத்திலிருக்கும் இத்தமிழ் மொழிச் சொற்கள் காலத்துக்குக்காலம் பல ஒலி மாற்றங்களைப் பெற்றுக் கொண்டு

வருகின்றது. இது தவிர்க்க முடியாததே. பெரு வழக்கில் இல்லாத சில திராவிட மொழிகளில் இம்மாற்றங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

மலையையும் அதன் உச்சியாகிய சிகரத்தையும் சுட்ட எழுந்தனவாகிய உருவெழுத்து, குறியெழுத்து, ஒலியெழுத்து ஆகியனவும் ஒலியெழுத்துக்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களும் எடுத்துக்காட்டாக இங்கு தரப்படுகின்றன. தமிழொலி மாற்றங்களைக் கவனிக்க. இவ்வொலி மாற்றங்கள் அனைத்தும் வளர்ச்சித் தமிழுக்குப் பொதுவானவையென இந்நூலில் விரித்து விளக்கப்பட்டுள்ளன.

உருவெழுத்து: மலையுச்சி 90 பாகை நிமிர்ந்து நிற்கின்றது.

குறியெழுத்து: ,, 90 பாகை சரிந்து நிற்கின்றது.

ஒலியெழுத்து ,, kur

சுமர்	தமிழ்
1.kur:mountain	1. kur̲iñci குறிஞ்சி hilly tract ku n̲ r̲u குன்று mountain kōṭu:kōṭai,kōṭar கோடு, கோடை, கோடர் Summit of a hill mountain, peak kuvaṭu, குவடு mountain, peak kuṭumi, குடுமி Summit of a mountain kō,கோ: mountain

2.kur:dwelling	kurampai, குரம்பை
	bird's nest
	kuṭi, ba குடி
	house, abode
	kūṭu, கூடு.nest
3.kur: earth	kū,கூ earth
4.kur: horse	kutirai,குதிரை,horse
	koe gurram. horse
5.kur: great	kur,கூர், great
6.kur:kindle	koluttu,கொளுத்து kindle
enflame	uru உரு enflame
	pa kuḍ' kindle
7.kur: strong	uram,உரம் strength
8.kur: palace	kō ṭṭai,கோட்டை, castle
9.kur: rise	uyar உயர் rise
	koe: kuri: rise

மேற்படி எடுத்துக்காட்டிலிருந்து பின்வரும் ஒலிமாற்றக் கோட்பாடுகளைக் கண்டு தெளியலாம். கி.மு.2000க்கு முன்னிருந்த Kur குர் என்னும் ஒரே சொல் கடந்த 4000 ஆண்டுகளாக ஒலி மாற்றங்களைப் பெற்றிருக்கின்றதே தவிர பெரும்பாலும் பொருள் மாற்றங்களைப் பெறவில்லை.

(1) உயிரெழுத்துக்களில் குறில், நெடில் என்ற வேறுபாடு பண்டைத் தமிழில் இருக்கவில்லை.

குர் > குதிரை: கூர்: மிகுதி

(2) உ,ஊ முறையே ஒ,ஓ வாகப் பிற்காலத்தில் மாற்றம் பெற்று இரட்டித்தன.

குர் > குரம்பை, கூர் > கோடு.

(3) தமிழ்ச் சொற்களில் மெல்லின ஒலிச் சேர்க்கை பிற்காலத்திய பண்பாகும்.

குர் > குன்று

(4)தமிழ்ச் சொல்லின் முதல் மெய்க்கேடு

குர் > உரம் : வலிமை

(5) தமிழ்ச் சொல்லின் ஈற்று மெய்க்கேடு

குர் > கூ, பூமி

குர் > கோ, மலை

(6) சொல்லின் இறுதி ரகர மெய் சூழலுக்குத் தக றகர, டகர, தகர, ளகர, வகர மெய்களாக மாறுகின்றது:

குர் > குறிஞ்சி குர் > கோடு

குர் > குதிரை குர் > குவடு

குர் > கொளுத்து.

7) தமிழிலுள்ள ஓரொலியன், ஈரொலியன்களாலான ஆ, தா, போ, சே, கா முதலிய சொற்களெல்லாம் மூவொலியன்களாலாய அடிப்படைச் சொற்களின் குறுக்கங்கள்:

kur குர் > கோ:மலை

kur குர் > கூ :பூமி

(8) தாய்மொழிச் சொற்பண்புகள் சிலவற்றை நீண்ட கால வழக்குப் பெற்ற தமிழ்மொழி மாற்றிக் கொண்ட போதும் ஏனைய திராவிட மொழிகளுட் சில மாற்றாதே இன்றும் வளர்ந்து வருகின்றன.

kur: kindle: parji ku kindle

Tamil: Ko uttu, கொளுத்து

kur: rise: Kolami: kuri, rise

Tamil: uyar, உயர், rise

(9) பண்டைய தமிழ்ச் சொற்கள் அடிச் சொற்களாயமைந்து பின்னொட்டுக்களைப் பெறுதல் தாய் மொழியிற் காணப்படாத பண்பாகும்.

kur: குர்+சி > குறிஞ்சி

kur குர் > குல் > கொள்+து > கொளுத்து

parji: kur >ku : கொளுத்து

பின்வரும் சுமர்மொழி வசனம் இதனைக் காட்டும்:

kaš nag nag e a ba nag nag (SP 1.105) He who drinks mud beer must drink water'

kaš-கள், nag-நக்குதல்: நக் நக் என இரட்டித்தல் 'அதிகம்' என்பதைக் காட்டுகின்றது. e-எவன், a-தண்ணீர் ba:must வேண்டும்: 'எவனொருவன் அதிகம் கள்ளைக் குடிக்கிறானோ அவன் அதிகம் தண்ணீரையும் குடிக்க வேண்டும்', சொற்களில் வேற்றுமை, காலம், வினை என்பனவற்றைச் சுட்டும் உறுப்புக்கள் எவையும் இல்லை. பின்னொட்டுக்கள் எவையும் இன்றிக் கருத்து சந்தர்ப்பத்திற்கு ஏற்பக் கொள்ளப்பட்டது.

இனி, 'கட்டுதல்', 'கட்டு' என்னும் பொருளைச் சுட்டும் சுமர்மொழிச் சொற்களையும் தமிழ் மொழிச் சொற்களையும் ஒப்பிட்டுத் தமிழ்மொழி பெற்ற ஒலி மாற்றங்களை விளக்குவாம்:

சுமர்	தமிழ்
1.kad:bind,wrap	ka u,கட்டு to tie,bind
2. ar:bind,harness	a u,அடு,join together
3.gar:bind	acai,அசை,join,bind
4.mar,ma:bind	ma u மடு to unite,join
	vari,வரி: bind,tie
5 sar,šer:bind,tie	c r,சார் :unite,join
	c r,சேர், to join
6.lal,la:bind,tie	ta-ta ai தளை bind,tie
	va-'la: வல :tie,bind
7.a:bind	y , ,யா,ஆ :bind
8.keš:bind	ke uvu,கெழுவு :to unite
kešda:bind	

9.te:bind,tie	taṟu, தறு:fasten
	teṟ ṟu,tettu,தெற்று, தெத்து
	tie together, weave
10.teg:bind,weave	tai,தை:join,tie,weave
	To.teg:fasten
11.kid,gid:bind	ki u,கிட்டு tie,bind
12. ir:bind	iyai,icai,இயை,இசை
gir,tie,harness	join,bind
13.gil:bind,unite	k l,கீல்:joint
	i ai இழை to spin
14.gin,bind,bond	ni a,நிணை:tie,fasten
	pi ai,பிணை,unite,tie
	i ai,இணை:join,tie
15.kiš:bind	icai,இசை:to bind
giš:yoke	
16.sir:bind	iṟuku,இறுகு:become tight
17.kud,bind,fetter	kutai,குதை,loop,knot
	to u,தொடு,join
	k u,கூடு:join
18.kur:bind	kural,குரல்:tie,link
19.kuš:bind	mu i,முடி:tie,fasten

இவ்வாய்விலிருந்து பெறப்படும் உண்மைகள்:

(அ) சொற்களின் பிறப்புக் காலத்தில் k, ,g எனும் மூன்று ககரவர்க்க ஒலிகள் சுமர் மொழியிலிருந்தன என்பதை அம்மொழி வரலாறு காட்டுகின்றது. இதே நிலை செந்தமிழாக ஆக்கப்பட்டதற்கு

முற்பட்ட காலத்துத் தமிழ் மொழியில் நிலவியதா என்பதை இன்று கூறிக் கொள்ள முடியாது. சொன்முதற் ககர மெய்யொலி ஏனைய சகர,தகர,பகர,மகர,நகர,வகர ஒலிகளாக மாற்றம் பெற்றமையை இவ்விருமொழிகளின் வரலாறுகள் வெள்ளிடை மலை போல் தெளிவுறுத்துகின்றன. தமிழில் சொன்முதற் ககர மெய்யொலி காலப்போக்கில் பலவற்றிற் கெட்டுவிட, வட இந்திய திராவிட மொழிகளாகிய பிராகுவி, குருக்கு, மால்றோ என்பனவும் ஓரளவு கன்னட மொழியும் அவ்வொலிகளைப் பாதுகாத்துள்ளன. தமிழில் உள்ள உயிர் முதற் சொற்களெல்லாம் மொழி முதற் ககர மெய்யொலிக் கேட்டால் உருவானவையாகும். எடுத்துக் காட்டாக சுமர் மொழியில் gar>ga>a 'கட்டுதல்' தமிழில் gar>ga>y ā > ā 'கட்டுதல்' என வருகின்றது. தமிழ் யகரவொலி g ஒலியின் மெலிவாலும் நலிவாலும் ஏற்பட்டது. இதுபோன்றே தன்மையொருமையைச் சுட்டும் gan என்ற சுமர் மொழிச் சொல் யான்,நான் எனத் தமிழிலும் அன்,நான் எனக் கன்னடத்திலும் வருகின்றது.

(ஆ) குமரி மொழிக் குடும்பத்தில் (தமிழ்,சுமர்) உயிரொலிகளுள் அகர ஒலியே முதன்மையானதும் அடிப்படையானதுமாகும். சொற்கள் தோன்றிய காலத்தில் அகர நடுவணதாகிய (மெய்+உயிர்+மெய்) சொற்களே பெரும்பாலன எனக் கருதப்படுகிறது. இக்குடும்பத்தில் எந்த உயிரொலியும் அகர ஒலியாக மாறுவதில்லை. ஆனால் அகரவொலியே எகரமாகவும் இகரமாகவும் மாறுகின்றது. அதுவே உகரமாகவும் மாறுகின்றதா என்பது இன்றைய ஆய்வில் தெளிவுபடுத்தப்படவில்லை. சொற்கள் தோன்றிய காலத்தில் ஒவ்வொரு சொல்லும் (gal,gul) அகர, உகர வடிவங்களைக் கொண்டு விளங்குவதால் உகரமும் மூல ஒலியாகக் கருதப்படுகின்றது.

(இ) கட்டுதல், தைத்தல் என்னும் பொருள்களில் வரும் சுமர் மொழிச் சொல் teg என்பதாகும். இது தோடா மொழியில் teg என்றேயிருக்கத் தமிழில் tail (தை) என ஆகிறது. இங்ஙனமே கை, வை முதலிய சொற்களெல்லாம் பிறப்புக் காலத்தில் மூவொலிச் சொற்களாகப் பிறந்தனவே என்பது காணப்படும்.

(ஈ) தமிழிலுள்ள நிண (g>n), பிணை (g>p), இணை (g=0) என்ற மூன்று சொல்லும் gin, கின் என்பதன் வளர்ச்சிக் கால வடிவங்கள்

என்பதும், gir என்பதே gin என மாற்றம் பெற்றதென்பதும் மூல வடிவமாகிய ghar என்பது முன்நோக்கி உச்சரிக்கப்பட்டபோது ப்திகி என மாற்றம் பெற்றதென்பதும் அறிந்து இன்புறற்பாலதாகும். தமிழில் உள்ள அடிப்படைச் சொற்களெல்லாம் காலப்போக்கில் இவ்வொலி மாற்றக் கட்டளைகளுக்கமைய மாற்றம் பெற்றன என்னும் உண்மை குறிப்பிடத்தக்கது.

குறிப்புக்கள்

1. தொல்காப்பியம்-சொல்லதிகாரம், கணேசையரின் உரை விளக்கக் குறிப்புக்களுடன்.சுன்னாகம், 1938.பக்.x
2. வெள்ளைவாரணன்-தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1957 பக்.36.
3. Ibid பக்.105
4. Indian Ocean , the Cradle of the Human Race, Indian Foreign Review 1980,reproduced in the 'Weekend, Sunday,August 3, 1980.p.7.
5. Alexander Kondratou-Riddles of Three Oceans, Progress Publishers, Moscow, 1974.p.129-135&150.
6. David Dringer-Writing, New York 1962.p.35-36.
7. H.R.Hall:The Ancient History of the Near East, London 1913 p.172-173.
8. Samuel Noah Keramer-The Sumerians, their History,Culture and Character,The University of Chicago Press,1968.p.3.
9. Sir John Marshall. Mohenjadaro and the Indus Civilization, vol II, Post script by Stephen Langdon, London,1931,p.453.

2.தமிழில் தனிநிலை அடிச்சொற்கள்

'தனிநிலை' என்பது மெய்+உயிர்+மெய் என்னும் மூவொலிகளாலாய ஓரசைச் சொற்களைச் சுட்டும். முதலில் ககர மெய் வருக்க (,k.g) முதலொலிச் சொற்களை எடுத்துக் கொள்ளலாம். தமிழ் மொழியில் இம் மூவொலிகளுக்கும் பதிலாக க (k) என்னும் ஓரொலியே வரிவடிவில் காணப்படுகின்றது. சுமர் மொழியில் காணப்படும் இக் ககர வர்க்க முதன் மொழிச் சொற்களெல்லாம் அம்மொழியில் சொற்கள் பிறந்த மிகப் பழைய காலத்துக்கு உரியனவெனக் கருதப்படுகிறது. இக்காலம் கி.மு.6000க்கும் முற்பட்டதெனலாம். சங்கத் தமிழில் இச் சொற்கள் அனைத்தும் காணப்படுகின்றன. கடைச் சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்துத் தமிழ்ச் சொற்களின் வழக்குகளை அறிந்து கொள்ள உதவும் பழைய நூல்களோ கல்வெட்டுக்களோ இப்போது இல்லை. எனவே சுமர் மொழியில் கி.மு.2800-கி.மு.2000 ஆகிய காலப் பகுதியில் செங்கல் வெட்டுக்களில் குறிக்கப்பட்ட சொற்றொகுப்புகளின் அடிப்படையில் இங்கு விளக்கங்கள் தரப்படுகின்றன. கி.மு.2000க்கு உட்பட்ட காலப்பகுதியின வாகிய இந்தோ-ஐரோப்பிய மொழிகளிற் காணப்படும் ஒலி மாற்றங்களை விட குமரி மொழிக் குடும்பத்தில் முன்னைய காலத்து ஒலி மாற்றங்கள் பல காணப்படுகின்றன. சிலவிடங்களில் மூலச் சொல்லின் வடிவம் முற்றாகவே மாறி உருத்தெரியாதும் போய்

விடுகிறது. நீண்டகால மொழிகளின் வாழ்வில் இது எதிர்பார்க்கப்பட வேண்டியதே. ககரம் என்னும் வல்லொலி **(gurral/uelar)** ச,த,ந,ப,ம,வ என்னும் மெய்யொலிகளாக மாறும் என்றும் இக்ககர மெய்யொலிக் கேடு சொல்லின் முதலிலும் ஈற்றிலும் நிகழும் என்றும் சுமர்மொழி இலக்கணவாசிரியர் கூறியவற்றை முன்னர்க் காட்டினோம். மெய்யொலி மாற்றத்துக்குத்தக அதனுடன் ஒட்டியுள்ள உயிரொலியும் மாறும் என்பது மொழியியலாளர் கண்ட உண்மையாகும். பின்வரும் எடுத்துக்காட்டு இக்கோட்பாடுகளை விளக்கவுதவும்.

'கை' என்பதனைச் சுட்டும் சுமர் மொழிச் சொற்கள் **kat,gad,gid,id,da** என்பனவாகும். திராவிட மொழிகளில் **(DED 1683,2476)** பின்வரும் வடிவங்கள் உள. கை **(kai)**, கய் **(kay)**, கய்யி **(kayyi)**,கெய் **(key)**,சேயி **(Cēyi)**, கீ **(ki')**, கி **(ki)**, கிய்யூ **(kiyyu)**, கயு**(kaiu)**, கியூ**(kiu)**, கேயு**(kēju)**, கெக்கா **(khekkha)**, கெகெ**(qege)** என்னும் வடிவங்களும் தண்ட **(tanta)**, டண்ட**(danda)** என்னும் வடிவங்களும் காணப்படுகின்றன. சுமர் மொழியில் ககரம் தகரமாக **(d)** மாறிய போது மொழியிறுதித் தகரமெய் **(t)**கெட்டு **kar>ka>da** என வந்துள்ளது. அம்மொழியிலுள்ள **'daddu'** என்னும் மொழி **kat>dad** என முதலில் மாறிய பின்னரே ஈற்று **'d'** கெட்டதென்பதை திராவிடமொழி வடிவங்களாகிய தண்ட **(tanta,danda)** என்பது தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வடிவங்களில் மெல்லினமெய் 'ண்' புகுந்ததனால் **(tat,dad,tant,dand)** ஈற்று **t,d** பாதுகாக்கப் படுகின்றன. இக்குமரிமொழிக் குடும்ப மொழிகளில் பிறப்புக்காலச் சொல் பாதுகாக்கப்படவில்லை. அதனை மொழியியல் கோட்பாடு களுக்கு ஏற்ப அமைத்துக் காட்டும்போது அச்சொல் ***kag** என அமையும். இச்சொல்லீறு **g>t,d** மாற்றம் பெற்றுச் சுமர் மொழியிலும் **(kat,gad,gid,id),g>y** மாற்றம் பெற்று மெல்லொலியாக மாறி கய்,கெய் எனப் பெரும்பாலான திராவிட மொழிகளிலும், **g>kkh** என வலிதாக **khekka** குர் மொழியிலும் g>q என வலிதாக **Qeqe** என மால்டா மொழியிலும் வந்தமை காண்க. **kag** என்பதே கையைச் சுட்டும் மூல வடிவம் என்பன கை செய்யும் வினையைச் சுட்டும் வினைச் சொல் **sag** என சுமர் மொழியில் அமைந்திருப்பது காட்டுகின்றது. இதற்கு இணையான தமிழ்ச் சொல் 'செய்' என்பது. தெலுங்கு மொழியில் கை என்னும் பெயர்ச் சொல்லின் இணை

வடிவம் 'ceyi' என்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. *kag என்பது key,ki என வரும் எடுத்துக் காட்டுகளிலிருந்து அ> எ/இ ஆக மாற்றம் பெறும் பண்பு நோக்கத்தக்கது.

இதுபோன்றே தன்மையொருமையைச் சுட்டும் 'gan' என்பது தமிழில் யான்,நான் என்றும் கன்னடத்தில் ஆன்,நான் என்றும் துளு மொழியில் யானு,யேனு என்றும் பிற திராவிட மொழிகளில் ஆன்,ஏன் என்றும் வருவது காண்க. பிராதவி மொழியில் இது kan(obe) ஆகும். இவற்றிலிருந்து g கரமெய் வலிதாக k ஆகவும் மெலிதாக ய ஆகவும் வந்து ஈற்றில் k=0 கெட்டு விடுகிறது. மேலே காட்டிய இரு எடுத்துக் காட்டுக்களிலிருந்து சொன் முதல், ஈற்று மெய்கள் கெடுதல் காட்டப்பட்டுள்ளது. சொன்முதல் ககர மெய் (k,g̃,g) கெடும்போது சொல்லீற்று மெய்யிலும் பலவித மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது கீழே தரப்படும் எடுத்துக் காட்டுக்களிலிருந்து புலப்படும். சுமர் மொழிச் சொல்லும் பொருளும் ஆங்கில எழுத்துக்களிலும் தமிழ் மொழிச் சொல்லும் பொருளும் இருமொழிகளிலும் தரப்படுகின்றன. சுமர் மொழிச் சொற்களை முதலிற் கூறுவதிலிருந்து அம்மொழிச் சொற்களைத் தமிழின் தாய் மொழிச் சொற்களாக யாம் கருதுகின்றோமோ என எவரும் தப்பாகக் கருதக் கூடாது என அழுத்தந் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகிறோம். குமரிமொழியே இவ்விரண்டு மொழிகளினதும் தாய்மொழி. கி.மு.4000 வரை ஒன்றிலிருந்து மற்றது பிரிந்து சென்ற பின் இரண்டும் வெவ்வேறு சூழல்களில் வளர்ந்து வருபவை. மெசெப்பத்தேமியாவில் சுமர்மொழி சிறிது காலம் (கி.மு.2500-2000) செமித்துக்கு மொழியான 'அக்காதியன்' இன் செல்வாக்கிற்கேற்பச் சில தனித்துவமான ஒலிமாற்றங்களைப் பெற்று ஈற்றில் இறந்தே விட்டது. தனித்துவமான ஒலிமாற்றத்துக்கு எடுத்துக் காட்டாக முன்னிலை ஒருமையைச் சுட்டும் 'நீ' என்பதற்கு இணையாக g̃i,ni,li என வரும் மூன்று சொற்கள் உள்ளன. இவற்றுள் பண்டைய வடிமாகிய g̃i > ni என மாற்றம் பெற்றதென்பதும் பின் ni (நீ) >li (லீ)ஆக மாற்றம் பெற்றதென்பதும் அறியத்தக்கது. இவற்றுள் 'லீ' என்பது முன்னிலை ஒருமையாகத் திராவிட மொழிகளில் இல்லை. இது செமித்துக்கு மொழியின் செல்வாக்கினால் அம்மக்கள் நீ என்பதை லீ என உச்சரித்ததனால் ஏற்பட்டது. இதுபோன்றே விலங்காகிய 'நாய்' என்னும் தமிழ்ச் சொல் சுமர் மொழியில் nig என்றும் பின் lig,leka என்றும்

வருகின்றது. பாலிலிருந்து பெறப்படும் தமிழ்ச் சொல்லாகிய நெய் (ney) சுமர் மொழியில் ni என்றும் li என்றும் வருகின்றது. னகரம் லகரமாக மாறும் பண்பு பிற்காலத்திய சுமர் மொழிக்கு ஏற்பட்டதே தவிர பண்டைய சுமர் மொழிக்கு ஏற்படவில்லை என்பது உணரத்தக்கது. இவற்றிலிருந்து எடுத்துக் காட்டப்படும் உண்மையாவது மிகப்பழைய சுமர் மொழிச் சொற்களுக்கும் பண்டைத் தமிழ்ச் சொற்களுக்கும் உள்ள பிறப்பு நெறி அவற்றின் நெருங்கிய இன உறவைக் காட்டுகின்றது என்பது.

g̃ ır ox		காரி, காளை, எருது, ஏறு		
		g̃ ar>er(u)+tu =	எருது	
g̃ ır warroir:		காளை .'போர்வீரன்'		
g̃ ar demon >		**gal** அலகை **ko.karp.**		
		gal > al(a) + kai	'பேய்'	
g̃ ır	**land**	நாடு **g >n**	'நிலம்'	
g̃ ır	**canal**	கால்(+வாய்): காலுதல்: நீரோடுதல்		
g̃ ar :	**large jug:** கலம்		'கூசா'	
g̃ ar :	**bind:**	கட்டு	'வரிந்திறுக்கு'	
g̃ ır :	**build:**	கட்டு	'உருவாக்கு, அமை'	
g̃ ır:	**behold:** காண்		**g̃ >p**	பார்
g̃ ır :	**box**	**g̃ >p**	பெட்டி	
g̃ ır :	**collect**	**g̃ >c**	சேர், கற்றை	
g̃ ar : brightness: கரம்,			கதிர்	'ஒளி'
g̃ ır :	**end**	கடை,	இறுதி	**g̃ a>ī,i**
		கர் > இற்(உ)+தி :		இறுதி
		கர் > ஈற்(உ):	ஈறு 'முடிவு'	
g̃ ır : guard:		கா (காவல், காப்பு)	'பாதுகா'	
g̃ ır : cry:		ஆர், அர(ற்று):	**g̃** =0	'அழு'
g̃ ır : command: கட்டளை			**g̃ >c:** சட்டம்	

g̈ar : year: ஆண்டு. ஆடு > ஆண்டு
g̈ >y:யாண்டு .மெல்லினம்
புகாத நிலையில் 'ஆட்டை'
ka:edu.

g̈ar : overthrow ஏறி: g̈ a >e: கவிழ்

g̈ar : deaf செவிடு g̈ >c. Br.kar
kar kanning:to deafen

g̈ar : foundation: அடி g̈ =0 'அடித்தளம்'

g̈ar :be full: ஆர் g̈ =0 'நிறைவு'
கமுமு >g̈ al க ழ்(உ)+மு
நிறை g̈ a >ni.

இவ்விதி சுமரிலக்கண நூல்களில் விளக்கப்பட்டுள்ளது.

g̈ar : luxurious: கலி 'செழிப்பான'
செழி : g̈ >c

g̈ar : growing வளர் g̈ >வ 'முதிர்வுறு'

g̈ar :loan கடன் 'கடன் தொகை'

g̈ar : interest வட்டி g̈ >வ 'உறுமிகை'

g̈ ar :pluck out பறி g̈ >ப 'பிடுங்கு'

g̈ar : destroy அழி g̈ =0 'தகர்'

g̈ar : break தறி g̈ >த: அறு g̈ =0

g̈ar :bow down சாய் g̈ >c 'தலை தாழ்'

g̈ar : a ladle கரண்டி. 'அகப்பை'

g̈ar :terrible: வெரு g̈ >வ: அரள் g̈ =0

g̈ar : white: வெள்ளை g̈ > வ
நரை g̈ >ந
வால் g̈ >வ

g̃ar:	likeness	கதழ்வு 'ஒத்தவகை'	
g̃ar:	one	ஒன்று அஸ் g̃ =0	'முதல் எண்'
		ஆழ் g̃ =0	'ஒன்றுபடு'
g̃ ar:	hot,warm	கனல், கனி	'சூடு'
g̃ar:	liver:	ஈரல்: g̃ a>i <u>ma</u>:karu	
		கரு	'நடுப்பகுதி'
g̃ar :	midst:	நடு g̃ >n	'நடுப்பகுதி'
		இடைg̃ >i	இடைப்பகுதி'
g̃ar :	heavy:	கன், கூனம்	'பாரமிக்க'
g̃ar :	ravine,pit <u>Br</u>:ghar̄	கன்னம் 'மலையிடுக்கு'	
g̃ar :	miserable	கவல்	'துயர் மிகுந்த'
g̃ar :	sinking:	ஆழ்	g̃=0 'தாழ்'
g̃ar :	close of day:	கடை	'மாலை நேரம்'
g̃ar :	lie down:	கிட	'படு'
		<u>Br</u>:khāching	
g̃ar: <u>Br</u>.he	that one	அது	g̃ =0
g̃ar :	some special day comp. g̃ar		வெள்ளி 'வெள்ளை'
g̃ar:	mill-stone:	அறை	'எந்திரக் கல்'
g̃ ar :	deep furrow	காறு	'உழு சால்'
		g̃ >c	சால்
g̃ar :	to seek out:	நாடு	g̃ >n. தேடு'
g̃ar :	run	கடுகு	'விரைந்து செல்'
g̃ar :	limit,bounds:	காறு, கரை, கடை 'எல்லை'	

g̃ar :	**draw,write:**	வரை	**g̃ >v**
		எழுது	**g̃ a>e**
		ஈர்	**g̃ a>i**
gar :	**make,do**	செய்:	**g̃ >c** 'உண்டாக்கு'
		kol.kak	
gar :	**present,bestow:**	அருள்	**g̃** =0 'வழங்கு'
gar :	**establish:**	கட்டு	'நிலை நாட்டு'
gar :	**bind**	கட்டு	'வரிந்திருக்கு'
gar :be:		**iru:**	**ga>i** 'வாழ்'
gar / **gal**	**who,which:**	யார்	'எவர்'
gar	**eat:**	ஆர், கறி	g = 0
gar	**: protect:**	கடி, கா 'பாதுகா'	
gar / **kar**	**take:**	எடு	**ga>e** 'பற்று'
gar :	**shout,rejoice:**	ஆர்	g=0 களித்தல்
gar :	**destroy:**	அடு	g=0 'கொல்'
gar :	**utensil:**	கலம்	'பாத்திரம்'
gar :	**submit:**	அடங்கு	g=0 'கீழ்படி'
gar :	**be full:**	கழுமு	'நிறைதல்'
	g=0	ஆர்	
	g>c	சால்	
gar :	**be acceptable;**	அமைவு	g=0 'ஏற்றுக் கொள்ளத்தக்க'
	ga > ē	ஏற்பு	
gar :	**rest:**	ஆறு	g =0 'இளைப்பாறுகை'
		தரி	**g >t** 'தங்கு'

gar :	wrench away:	களை		'வலிந்து பறி'
gar :	break:	அறு	g=0	'நொறுக்கு'
gar :	lift up:	எடு	ga>e	'தூக்கு'
gar :	light:	கரம்		'வெளிச்சம், ஒளி'
gar :	throw down:	கவிழ்		'கீழே வீழ்த்து'
gar:	be appeased	ஆறு		g=0 'தணி'
gar:	heap up	அடுக்கு	g=0	'குவி'
gar:	wash	கழுவு	'அலம்பு'	'தூய்மையாக்கு'
gar:	sprinkle	சல்லு	g>c	'தெளி, தூவு'
gar:	place,set	இடு	ga>i	'வை'
gar:	brightness	கதிர்		'ஒளி'
		கரம்		
gar:	store house	கழஞ்சியம்		'சேமிப்பறை'
gar:	four	நால்	g>m	'நான்கு'
gar:	side	கடை		'பக்கம்'
		சார்	g>c	'அயல்'
		கரை		'எல்லை'
gar:	excrement	எரு	ga>e	'கழிவு'
gar:	wagon	காறை		'வண்டி'
		கால்		'சகடு'
		தேர்	g>t	'இரதம்'
gar,	exist	கவி		'நிலைபெறு'
		வாழ்	g>v	'வாழ்ந்திரு'
gar:	enclose	அடை	g=0	'அடைத்துவை'
gar:	grind	அரை	g=0	'நொறுக்கு'
		கடி		'பொடியாக்கு'
kar:	find	காண்		'பார்'

kol.kars

kar:	**nibble**	கறி	'அரைத்து மாவாக்கு'
		கடி	'பொடி படுத்து'
kar:	**port,market**	கடை	'அங்காடி, சந்தை'
kar:	**dyke,dam**	கட்டு	'செய்கரை'
		அணை **k**=0	
kar:	**entrance**	கடை	'வாயில்'
kar: / **kal**	**plunder**	கள்	'கொள்ளை, களவு'
kar:	**increase**	கதிர்	'பெருகு'
		அடரு **k**=0	'மிகுதியாகு'
kar:	**harm,ruin**	கேடு	'சீர்குலைவு'
kar:	**stretch out**	கழல்	'விரிவாக்கு'
kar:	**tread**	நடை **k>n**	'நடைபோடு'

To.nar

kar:	**shine**	கதிர்	'ஒளி'
kar:	**route**	கடவு	'வழி'
	k>n	நெறி	'பாதை'
	k=0	ஆறு	
	k>t	தாரி	
	k>t	தெரு	
	k>v	வழி	
	k>t	தடம்	
	k>n	மடவை	
kar:	**turn**	கடை	'வளைவு'
kar:	**moat,wall**	அழுவம்	**k**=0
		மதில்	**k>m**
		அரண்	**k**=0

kar: escape:	கர	'நழுவு' 'தப்பிச்செல்'
kar: pay	கட்டு	'பணஞ்செலுத்து'
Qar: bond:	கட்டு	'பிணைப்பு' 'தளை'
Qar: seize	கதுவு	'கைப்பற்று'
Qar: sword	கத்தி	'வாள்'
	<u>Br</u>.harra.	
Qar: run away.	கழல்	'விட்டு நீங்கு'
Qar: form,shape:	கரு	'உரு'
ĝab: stinking	**kaviccu**	'முடை நாற்றம்'
	kavul	'கவிச்சி'
	kam	'கமழ்'
ĝab : vegetable	கறி	'காய்கறி'
ĝab : assembly	கழகம்	'பேரவை, மன்றம்'
ĝ ab:destroy	சவட்டு ĝ >c	'நிலைகுலை'
ĝ ab:enemy:	தெவ் ĝ>t	'பகை'
	தெவ்வு ĝ>t	'பகை'
ĝ ab :enclosure:	காவல் அடைப்பு	
	காவு	
	காப்பு	
ĝab: a planet(venus)	கவி	'சுக்கிரன், வெள்ளி'
ĝab: present:	கப்பம்	'நன்கொடை'
ĝab: wages	கப்பு	'வேலைப்படி'
	<u>ka</u>.kambala	
ĝab: bar,bolt:	காப்பு	'தாழ், கோல்'
	காழ்	'பூட்டு'
ĝab:food:	கவளம்	'உணவு'
	அவி ĝ =0	'சோறு'

g̃ ab : cook,bake:	சமை	**g̃ >c**	'சமையல் செய்'
	அவி	g̃ =0	'சூட்டில் பதனிடு'
g̃ab : destroy:	கவிழ்		'நிலைகுலையச் செய்'
g̃ab : pour out:	கவிழ்		'கொட்டு, சொரி'
g̃ab : load	கட்டு		'சுமை'
	கற்றை		'திரள்'
g̃ab : shameful	கவிழ்		தலைகுனிவு
	எவ்வம்	**g̃ a>e**	
	தவக்கு	**g̃ >t**	
g̃ab : weak	சவு	**g̃ >c**	'ஊக்கம் குன்றிய'
	தவு	**g̃ >t**	'திட்ப மற்ற'
g̃ab : evil	கவ்வை 'தீது'		
wicked.	நவை	**g>n**	
	அவம்	**g**=0	
g̃ab : affliction	கவ்வை		'துன்பம்'
	எவ்வம்	**g̃ a>e**	
kab left side	இடம்	**ka>i**	இடப்பக்கம்
gaba			இடக்கை
	<u>Go</u>.dāvā		
gab: loose:	கழல்		'தளர்'
	<u>ko</u>.kave		
	அவிழ்		
gab: breast.	அம்மம் **g**=0		'முலை'
g̃ ab: shut	கட்டு		'சாத்து'
g̃ ab: a match	சமம்	**g>c**	'ஒத்திருக்கை'
g̃ a: shine	கதிர்		'ஒளி'
g̃ a: rod of authority	கழி		'செங்கோல்'
	காழ்		'கோல்'

kad; bind	கட்டு	'வரிந்திறுக்கு'
kad: pond	மடு	**k>m** 'குளம்'
	கயம்	'குட்டை'
kad:excavation	கல்லு	'தோண்டு அகழ்'
kad: / **ĝad** — **cloth**	ஆடை k=0	'துகில்'
	கந்தை 'துணி'	
ĝad / **kat** — **hand**	கை	'கை'
	தண்டு	**k>t** 'முன் கை'
ĝag (kak)	**g >s = 0**	
sag make;	செய்	
	ஆக்கு	'உண்டு பண்ணு'
	<u>kol</u>.kak	
ĝal: go: அலை,	செல் **ĝ**=0 :**ĝ>c** 'போ'	
	<u>sem</u>:ālaku	
ĝal: way:	கால்	'பாதை'
ĝal : pour out:	கால்	'பொழி, சொரி'
ĝal / **lal** / **al** — **net**	வலை **ĝ >v**	'மீன்வலை'
ĝal : divide:	கால்	'பகு'
ĝal: portion:	கலை	'பங்கு, கூறு'
ĝal : be strong:	கலி	'வலிமையான, பலமான'
ĝal : desire:	வேள்	**ĝ >v** 'விருப்பம்'
ĝal : vision:	காட்சி	'பார்வை'
ĝal : ruin:	கலை	'பாழ்நிலை'
	அழிவு	**ĝ** =0

ĝal:	**sickness:**	வலி	**ĝ >v** 'நோய்'
ĝal:	**open**	மலர்	**ĝ >m** 'விரி, திற'
ĝal		அலர்	**ĝ**=0
ĝal:	**bend**	வளை	**ĝ >v** 'சாய்'
ĝal:	**announce**	சால் சாற்று	**ĝ**>ட் 'தெரிவி'
ĝal:	**vulva**	அல்குல்	'பெண்டாற் கருவாய்'
ĝal **ĝal**	**womb**	கருப்பை	'சூற்பை'
ĝal:	**press out**	கசக்கு	'பிழி'
ĝal:	**abundance**	கழி	'மிகுதி'
kal:	**virgin**	கன்னி	'இளம் பெண்'
kal:	**servant:**	ஆள் **k**=0	'வேலையாள்'
kal:	**youth:**	காளை 'இளைஞன்'	
kal:	**guardian genious**	அலகை **k**=0	பேய்
gal:	**place:**	கால்	'இடம்'
gal:	**great**	கழி	'மிகல்'
gal:	**great one** **demon**	கழுது	'பேய்'
gal:	**flood:**	கலுழி	'ஊழி வெள்ளம்'
gal:	**width**	அ-கல்	'அகலமான'
gal;	**throne:**	கட்டில் 'தவிசு' பள்ளி	 **g>p** 'படுக்கை'
gal;	**leader**	தலைவன்	**g>t** 'முதல்வர்'
gal:	**pot**	கலம்	பானை
gal:	**goddess** **malik**	காளி	'கொற்றவை'

gal: woman: காரிகை 'பெண்டு'
gal: be full கழுமு 'நிறைவு'
gal: door: கதவு 'வாயில்'
gal: exist கல 'உயிர் வாழ்'
வாழ்
gal: dwell: வாழ் **g>v** 'நிலைபெறு'
gal: be firm: காழ் 'உறுதியாயிரு'
gal: strength: கலி 'வலிமை'
gal: beginning: எழுவாய் **ga>e** 'முதல்'
gal: guard கடி 'பாதுகா'
கா
அளி g=0
gal: destroy அழி g=0 'கொல்'
kill

Br.Khalling

gal: place களம் 'ஞாலம்'

Br.kal

Qal: demolish: அழி **Q** =0 கொல்
Qal: large: கடி 'பெரிய'
gal: lift up எழு **ga>e** 'தூக்கு'
gal: exit; கழி 'நீங்கு'
gal: dignified அழகு **g**=0 'விழுமம்'
beautiful எழில் **ga>e** 'அழகுடைய'
gal: powerful வல் **g>v** 'வலிமையுடைய'
gal: bolt காழ் 'பூட்டு'
gal: have: கல 'பெற்றிரு'

gal: storm	கால்		'புயல்'
gal: man:	காளை மனிதன் ஆள்		
gal: I	அல்	g=0	'யான்'
gal: be possible:	சால்	g>c	'முடியும்'
gal: to remain	அல்கு	g=0	'தங்கு'
gal: ponder:	கருது	'எண்ணு'	
kam / **am** — **ordinal Determ**	ஆம்	k=0	'ஆம்'
kam: soup	கஞ்சி		'கூழ்'
kam: earthen jar	கம்மல்		'குடம்'
kam: change:	கலிழ்		'மாற்றம்'
gam: suppress	கம்		'அடக்கு'
gam: red	செம்		'சிவப்பு'
gam: bow down:	கடி	'குனி'	'வணங்கு'
gam: submit	அடங்கு	g=0	'பணி'
gam: weak	சவு		'மெலி' 'தளர்'
pu(>o)-li:	பொளி	'பிளத்தல்'
ma-li:	மலி	'மிகுதல்,நிறைதல்'
ma-li:	மாலி	'கள்' 'ஞாயிறு'
mu-li:	முழி	'விழி'
mu-li:	முளி	'உலர்தல்,வறத்தல்'
mu-li:	முளி	'பொங்குதல்'
mū-li:	மூளி	'உறுப்புக்குறை'
mē-li:	மேழி	'கலப்பை'
mu(>o)-li:	மொழி	'சொல்லுதல்'
mu(>o)-li:	மொழி	'மணிக்கட்டு,கணு'
va-li:	வலி	'வன்மை'
va-li:	வலி	'சொல்லுதல்'
va-li:	வழி	'மார்க்கம்' 'முறைமை'
va-li:	வழி	'நிரம்பி வடிதல்'

va-li:	வழி	'சுவடு'
vā-li:	வாழி	'வாழ்க'
vi-li:	விழி	'கண்' 'மிண்டை'
vi-li:	விளி	'இறத்தல்,அழிதல்'
vi-li:	விளி	'அழைத்தல்,பாடுதல்'
ve-li:	வெளி	'புறம், ஆகாயம்'
vē-li:	வேலி	'மதில்,காவல்,அரண்'
a-li:	அலி	'ஆண்,பெண் அல்லாதது'
a-li:	அளி	'மது,வண்டு' 'கொடை'
a-li:	அழி	'நாசமாதல், கெடுத்தல்'
ā-li:	ஆழி	கட்டளை,வட்டம்,மோதிரம்'
i-li:	இழி	'இறங்குதல்' 'விழுதல்'
i-li:	இளி	'அவமதித்தல்' 'உரித்தல்'
e-li:	எளி	'எளிமை யடைதல்'
u(>o)-li:	ஒலி	'ஓசை' 'இடி'
u(>o)-li:	ஒலி	'விளக்குதல்'
u(>o)-li:	ஒளி	'வெளிச்சம்' 'மறைவு'
u(>o)-li:	ஒழி	'தீர்தல்,அழிதல்'

+lal

ka-lal:	கழல்	'நெகில்தல்' 'நீங்குதல்'
ta-lal:	தழல்	'நெருப்பு'
a-lal:	அழல்	'நெருப்பு' 'கோபம்'
u-lal:	உழல்	'சுழலுதல்,அசைதல்'
ni-lal:	நிழல்	'சாயை,ஒளி'
pu-lal:	புழல்	'உட்டொளை'

(2)சுமர் மொழியில் ர(ற) கர முதற் சொற்களின் வடிவமும் அவை உணர்த்தும் பொருள்களும்:

raĝ: அதிகரிப்பு,பெருவெள்ளம்,நிரம்பி வழி

rag: கடித்தல், பற்றுதல், பெண், மதுபானம், அதிகரிப்பு, முறிவு

ra: போ, உறுதியாயிரு, பிரகாசம், பெருவெள்ளம், பற்றுதல், எடுத்தல், வாழ், கொல்லு, இல்லை, உண்மையாகவே, அல்லது, திரும்பு, உடை, போர்செய், காயம், புத்திமதிபெறு, அடி, வருத்து, எறி, தகர்த்தெறி, தட்டு அழி, கொலை, பிரி, வேறாக்கு, படுத்துக்கிட, அரண்செய், எது, இடு, வை, கூறையாடு, பறி, உருவம் அமை, வழி, உள்ளே, மேல், கு.

rig: அதிகரிப்பு, அபகரி, எடு, பறி, சேர், இழப்பு, காற்றுவீச்சு, களவெடு, படுத்துக்கிட, இடு, பச்சைநிறம்

ri: போ, அபகரி, எடு, கு, பற, விரைந்து செல், ஓடிப்போ, தப்பிச் செல், காற்றுவீச்சு,பறி,களவெடு

எண்ணு, கவனஞ் செலுத்து, கருது, திட்டமிடு, முன்னுணர்வு, தகர்த்தெறி, குற்று, தானியத்தை இடி, துரத்து, செலுத்து,கற்பி,எதிர்த்து நில்.

rug: தோல்

ru: ஒன்று,கொடு,அர்ப்பணஞ் செய், ஓவியஞ் செதுக்கு, நறுக்கு,விரைந்து செல், எறி, நீள், புயற்காற்று, திரும்பு

இனி,தமிழிலுள்ள இணை நிலையடிச் சொற்களை எடுத்துக் கொள்வோம்.

+ rag

ka-rag:	கறங்கு,கரை	'ஒலி'
ka-rag:	கறங்கு	'சுழற்சி'
ka-rag:	கறக்கு	'நூன் முறுக்கேற்றுதல்'
ku-rag:	குரங்கு	'வளைவு'
ku-rag:	குரங்கு	'விலங்கு'

ku-rag:	குறங்கு	'தொடை'
ca-rag:	சரக்க	'விரைவாக'
ca-rag:	சரக்கு	'வியாபாரப்பண்டம்' 'பொன்'
ci-rag:	சிறகு	'இறகு' 'கதவின் இலை'
ta-rag:	தரகு	'2 படி கொண்ட ஓர் அளவு'
ti-rag:	திரக்கு	'கூட்டம்'
ti-rag:	திரக்கு	'சுருங்குதல்'
pa-rag:	பரக்கு	'அலைந்து திரிதல்'
pi-rag:	பிறக்கம்	'ஒளி'
pi-rag:	பிறங்கு,பிறக்கு	'விளங்கு,சிற'
ma-rag:	மறங்கு	'கலங்குதல்'
va-rag:	வாரகம்,வாரக்கம்	'முன்பணம்'
vi-rag:	விரகு	'உபாயம்,சாமர்த்தியம்'
vi-rag:	விறகு	'எரிக்குங்கட்டை'
a-rag:	அரக்கு	'தேய்த்தல்,அமுத்தல்'
a-rag:	அரக்கு	'செய்மெழுகு'
a-rag:	அரங்கு	'சபை' 'கருப்பம்'
i-rag:	இறங்கு,இறக்கு	'இழிதல்'
i-rag:	இறக்கு	'சரிவு'
i-rag:	இரங்கு	'பரிதபித்தல்,அழுதல்'
i-rag:	இறகு	'சிறகு,மயிற்பீலி'
u-rag:	உரக்க	'குரலோங்க'
u-rag:	உறங்கு	'நித்திரையாதல்'
	உறகு	'உறங்குதல்'

இவ்விணை நிலையடிச் சொற்களுள் இரண்டினைப் பற்றி விளக்குவாம்.

ka-rag என்பது சுமர் மொழியில் வரும் ஓர் இணைநிலையடிச் சொல். ka என்பது 'வாய்' (அங்கா-வாய் திறத்தல்) எனப் பொருள்படும். rag என்பது ஒலி,ஓசை,சத்தம் எனப் பொருள்படும். வாய்+ஒலி என்பது இணைநிலையாய் நிற்கும் போது வாயொலி எனப் பொருள்பட்டது. எனவே கறங்கு என்பது மெல்லின ங்-ஐத் தழுவிய போது கறகு > கறங்கு எனவும், தழுவாதபோது காறக் >க-றய் >கரை எனவும் தமிழில் வருகின்றது. காலப்போக்கில் வாய்ச்சத்தம் என்னும் பொருள் மங்கிச் சத்தம் என்பதை மட்டும் குறிப்பதாக வருகின்றது. இவ்விதமே இணைநிலையடிச் சொற்களின் முதனிலைகள் எல்லாம் தோற்றக் காலத்து அடிப்படைப் பொருளை வெளிப்படையாக உணர்த்த வேண்டிய தேவையில்லாது போய் விட்டது. ரகர றகர மெய்யொலிகள் இரண்டும் ஒரே சூழலிலிருந்து பிறந்து வெவ்வேறாக ஒலிப்பனவாயின என்பதும் இவ்வெடுத்துக் காட்டிலிருந்து புலப்படுகிறது.

இனி,பறவையின் இறகைச் சுட்டும் திராவிட மொழிச் சொற்களை எடுத்துக் கொள்வோம்.

DED 2133.இறகு

த: **cirai, ciraku, cirakar**

irai, iraku, irakar, irakkai

ம: **iraku, ciraku, கோ: rek**

க: **erake, eranke, rakke, rekke**

கொ: **rekke து: edunke, renke**

தெ: **eraka, rekka, rekka**

கொல: **redapa, reppa, rerepa**

நை: **rekka, reppa ப: rekka**

கோ: **reka**

DED.1174

க:**gari** து:**gari** தெ:**gari**

கொல்: **gar**

ம: **ekiṟu**

DED.2030

த: **cari** பக்கம்,இறகு

DED.3861

கோண்டி: **marel, maraki, mare**

குயி: **mara** குவி: **mara**

DED.2819

தோ: **tergy** கொ: **tereke**

DED.1651

கோ: **kerngl, kergl**

DED.454

த: **i,ir**

சுமர் மொழியில் இறகு என்பதைக் குறிக்கும் சொல் **a-gir, a-tir** என நிற்கின்றது. **a-gir** என்பதை விளக்கும் சுமர்மொழிப் புலவர்கள் இவ்வினைநிலைய்டிச் சொல் **side+growth** அதாவது பக்கம்+வளர்வது என்பதை உருவெழுத்திற் சுட்டி நிற்கின்றது என்பர். சுமர் மொழியிலும் திராவிட மொழிகளிலும் 'பக்கம்' என்பதைக் குறித்து நிற்கும் தனிநிலையடிச் சொல் **'gar'** என்பது. தமிழில் **gar>car** சார் என வரும். இக் **'gar'** என்னும் அடிச் சொல்லே சொற்களின் பிறப்புக் காலத்திலிருந்து பலபொருளொரு சொல்லாய் பக்கத்தையும் பக்கத்திலிருந்து கிளைப்பனவற்றையும் குறித்து நிற்கின்றது. பக்கத்தைச் சுட்டாது பக்கத்திலிருப்பதாகிய இறகு என்பதைக் குறிக்கும் ஒரு சொல் உண்டாக்கப்பட்ட பிற்காலத்தில் (கி.மு.2400 வரை) இரண்டு சொற்களை இணைத்து **a+gir** 'பக்கத்தில் வளர்வது' எனச் சுமர் மொழியிலும் **(gar>a) ekiṟu (a>e+gir)** என மலையாள மொழியிலும் சொற்கள்

ஆக்கப்பட்டன. மத்தியதிராவிட மொழிகளில் **gar** என்பது **mar(g>m)** என ஒலி மாற்றம் பெற்று **mare,mara** என ஆயிற்று.

இனி **ciṟaku, ciṟai** எனவும் **iṟaku, iṟai** எனவும் வரும் தமிழ்ச் சொற்களை எடுத்துக் கொள்ளலாம். இவை அனைத்தும் இணைநிலையடிச் சொற்கள். **ci-rag, i-rag** என இணைந்து வரும். **ci-rag>ci-rai, i-rag>i-ṟai** எனவும் அவை குறுகும். உண்மையில் **ci-ṟai** என்பது **ci-ṟay** எனவும் **i-ṟai** என்பது **i-ṟay** எனவும் பண்டைக் காலத் தமிழ் மொழியில் வழக்கிலிருந்தன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

(தொல்.எழு.56) என்னுஞ் சூத்திரத்தில் தொல்காப்பியனார் அய்=ஐ என்பதைக் காட்டியுள்ளார். இது தமிழ்மொழிச் சொற்களுக்குரிய தனிப்பண்பாகும். மலையாளம் முதலிய மொழிகளில் **ci-ṟai, i-ṟai** என்னும் வழக்குகள் இல்லாது **ci-ṟaku (ci-rag), i-ṟaku (i-rag)** என்னும் வழக்குகள் மட்டுமே உள்ளன.

இனி சிறகு,இறகு ஆகிய இணைநிலை மொழிகளில் முதலில் நிற்கும் **ci-(rag), i-(rag)** என்பன பண்டைய அடிச் சொற்களின் விகாரங்களாகும். **gar-rag** என்பதே முழுமையான இணைநிலையடிச் சொல். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட,ஒலி மாற்றங்களின் விளைவாக 'பக்கம்' என்பதைக் குறித்து நின்ற **gar** என்னுஞ் சொல் முற்பக்கம் நோக்கி ஒலிக்க உந்தப்பட **gar>gir** எனவும் பின்னர் **gir>ci** எனவும் **gir>ir>i** எனவும் மாற்றம் பெற்று **ci-rag, i-rag** என்ற சொற்கள் உருவாயின. இவை போன்றே இணைநிலையடிச் சொற்களின் முதனிலைகளெல்லாம் குறுக்கம் முதலிய மாற்றங்கள் பெற்ற அடிச் சொற்களென்க. ஏனைய திராவிட மொழிகளில் **i-rag** என்பதன் முதனிலை மேலுங்குறுகி **rek, reka, ṟakke, ṟekke** எனப் பல்வேறு வடிவங்கள் பெறலாயின. இங்ஙனம் சொற்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட அற்புதங்கள் மிகப் பலவாகும். அவற்றை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்தாம்.

<u>**+ rag > ray > rai**</u>

Ka-rag > Ka-ray > Ka-rai: கரை 'அழைத்தல்'
Ka-rag > Ka-ray > Ka-rai: கரை 'கரைந்து போதல்'

Ka-rag > Ka-ray > Ka-rai: கரை 'எல்லை,வரம்பு'

Ka-rag > Ka-ray > Ka-ṟai: கறை 'குற்றம்,நஞ்சு' 'குடியிறை'

Kā-rag > Kā-ray > Kā-rai: காரை 'காட்டுச் செடி'

Kā-rag > Kā-ray > Kā-rai: காரை 'ஆடை'

Kā-rag > Kā-ray > Kā-rai: காறை 'வண்டி'

Ku-rag > Ku-ray > Ku-rai: குரை 'ஒலி' பெருமை,பரப்பு'

Ku-rag > Ku-ray > Ku-rai: குறை 'சிறுகுதல்'

Ku-rag > Ku-ray > Ku-rai: குறை 'குற்றம்'

Ku-rag > Ku-ray > Ku-rai: கூறை 'ஆடை'

Kū(>ō)-rag > Kō-ray > Kō-rai: கோறை 'பழுது, துவாரம்'

Ci-rag > Ci-ray > Ci-rai: சிறை 'காவல்'

Ci-rag > Ci-ray > Ci-rai: சிறை 'அணை, வரம்பு, இடம், பக்கம்'

Cū-rag > Cū-ray > Cū-rai: சுரை 'சுரைக்கொடி'

Cū-rag > Cū-ray > Cū-rai: சூரை 'ஒரு செடி'

Cu-rag > Cu-ray > Cu-rai: சூறை 'சுழல் காற்று'

Cū-rag > Cū-ray > Cū-rai: சூறை 'கொள்ளை'

Cē-rag > Cē-ray > Cē-rai: சரை 'சாரைப்பாம்பு'

ta-rag > ta-ray > ta-rai: தரை 'நிலம்,பூமி'

ta-rag > ta-ray > ta-rai: தறை 'தரை' 'அடித்து இறுக்குதல்'

tā-rag > tā-ray > tā-rai: தாரை 'வரிசை,ஒழுங்கு' 'வழி'

tā-rag > tā-ray > tā-rai: தாரை 'கண்,கண்மணி'

ti-rag > ti-ray > ti-rai: திரை 'சுருங்குதல்' 'அலை'

ti-rag > ti-ray > ti-rai: திறை 'இறை,கப்பம்'

tu-rag > tu-ray > tu-rai: துறை 'இடம், வழி, பகுதி'

na-rag > na-ray > na-rai: நரை 'எருது' 'வெண்மை'

nā-rag > nā-ray > nā-rai: நாரை 'கொக்கு'

ni-rag > ni-ray > ni-rai: நிரை 'வரிசை,ஒழுங்கு'

ni-rag > ni-ray > ni-rai: நிறை 'நிரம்புதல், மிகுதல்'

ni-rag > ni-ray > ni-rai: நிறை 'தாளவகை, சுவரம்'

nu-rag > nu-ray > nu-rai: நுரை 'நீர்க்குமிழி'

pa-rag > pa-ray > pa-rai: பறை 'சொல்லுதல்'
'தேய்தல்' 'அழிதல்'

pa-rag > pa-ray > pa-rai: பறை 'முரசு' 'இறகு'

pa-rag > pa-ray > pa-rai: பறை 'வட்டம்'
'ஒருமுத்தலளவை'

pā-rag > pā-ray > pā-rai: பாரை 'கடப்பாரை'

pā-rag > pā-ray > pā-rai: பாரை 'எறிபடை'

pā-rag > pā-ray > pā-rai: பாறை 'கருங்கற்றிரள்'

pi-rag > pi-ray > pi-rai: பிறை 'இளஞ்சந்திரன்'

pu-rag > pu-ray > pu-rai: புரை 'ஒத்தல்' 'வீடு,
மாட்டுத்தொழு'

pu-rag > pu-ray > pu-rai: புரை 'பெருமையாதல்'

pu-rag > pu-ray > pu-rai: புரை 'குற்றம், பொய்,
களவு'

pi-rag > pi-ray > pi-rai: பிரை 'பாதி' 'உறைமோர்'

pu(>o)-rag > po-ray > po-rai: பொறை 'மலை,
பாரம், பூமி'

pū(>ō)-rag > pō-ray > pō-rai: போறை 'பொந்து'

ma-rag > ma-ray > ma-rai: மரை 'மான்வகை'

ma-rag > ma-ray > ma-rai:	மறை	'ஒளிந்து கொள்ளுதல்'
ma-rag > ma-ray > ma-rai:	மறை	'புகலிடம்'
mi-rag > mi-ray > mi-rai:	மிறை	'அச்சம், வருத்தம், குற்றம்'
mu-rag>mu-ray>mu-rai:	முறை	'அடைவு, நியமம்'
va-rag > va-ray > va-rai:	வரை	'எழுதுதல்'
va-rag > va-ray > va-rai:	வரை	'மலைச் சிகரம்'
va-rag > va-ray > va-rai:	வரை	'எல்லை,காலம்'
va-rag > va-ray > va-rai:	வறை	'பொரிக்கறி'
vi-rag > vi-ray > vi-rai:	விரை	'வேகமாதல்'
vi-rag > vi-ray > vi-rai:	விரை	'வாசனை'
vi-rag > vi-ray > vi-rai:	விறை	'நடுக்கம்'
a-rag > a-ray > a-rai:	அரை	'பாதி, இடை, தண்டு'
a-rag > a-ray > a-rai:	அரை	'தேய்த்தல்'
a-rag > a-ray > a-rai:	அறை	'அடி,வெட்டு'
a-rag > a-ray > a-rai:	அறை	'சொல்லுதல், ஒலித்தல்'
a-rag > a-ray > a-rai:	அறை	'உள்வீடு' 'வீடு' 'பாறை'
a-rag > a-ray > a-rai:	அறை	'அம்மி' 'சல்லி'
ā-rag > ā-ray > ā-rai:	ஆரை	'கோட்டை மதில்'
i-rag > i-ray > i-rai:	இரை	'ஒலித்தல்'
i-rag > i-ray > i-rai:	இரை	'உணவு'
i-rag > i-ray > i-rai:	இரை	'வீங்குதல்'
i-rag > i-ray > i-rai:	இறை	'உயரம்,தலை'

i-rag > i-ray > i-rai:	இறை	'கடவுள்,அரசன்'
i-rag > i-ray > i-rai:	இறை	'அரசிறை,கடமை'
u-rag > u-ray > u-rai:	உரை	'சொல்லுதல், ஒலித்தல், சொல்'
u-rag > u-ray > u-rai:	உரை	'தேய்த்தல்'
u-rag > u-ray > u-rai:	உறை	'பெருமை, நீளம் ஓர் அளவு'
u-rag > u-ray > u-rai:	உறை	'வசித்தல்'
u-rag > u-ray > u-rai:	உறை	'உதிர்தல்' 'அமுக்குதல்'
ū(>ō)-rag > ō-ray > ō-rai:	ஓரை	'குரவை'

+rag > ra

ka-rag > ka-ra	கர	'மறைத்தல்'
ka-rag > ka-ra	கற	'பால் கறத்தல்'
ka-rag > ka-ra	கற	'ஒலித்தல்'
ca-rag > ca-ra	சர	'விரைவாக'
ci-rag > ci-ra	சிற	'மிகுதல்,மகிழ்தல்'
cu-rag > cu-ra	சுர	'ஊறுதல்,நிறைதல்'
ti-rag > ti-ra	திற	'அடைப்பு நீக்குதல்'
tī-rag > tī-ra	தீர	'முற்றும்,மிக'
tu-rag > tu-ra	துர	'ஓட்டிச்செலுத்துதல்'
tu-rag > tu-ra	துர	'முயலுதல்'
tu-rag > tu-ra	துர	'போதல்'
tu-rag > tu-ra	துற	'கைவிடுதல்'
ne-rag > ne-ra	நெற	'பல்கடித்தல் குறிப்பெடுத்தல்'
ni-rag > ni-ra	நிர	'நிரம்புதல்'

ni-rag > ni-ra	நிற	'நிறம்பிடித்தல், முற்றுதல்'
pa-rag > pa-ra	பர	'பரவுதல்'
pa-rag > pa-ra	பற	'வேகமாகச் செல்லல்'
pa-rag > pa-ra	பற	'வருந்துதல்'
pu-rag > pu-ra	புர	'காத்தல்' 'கொடுத்தல்'
ma-rag > ma-ra	மற	'அயர்த்தல்'
va-rag > va-ra	வற	'காய்தல்'
vi-rag > vi-ra	விற	'செறிதல்'மிகுதல்'
ā-rag > ā-ra	ஆர	'மிக,நிறைய'
i-rag > i-ra	இர	'வேண்டுதல்'
i-rag > i-ra	இற	'கடத்தல்' 'மிகுதல்'
u-rag > u-ra	கூர்	'எடுப்பாதல்'

<u>+ rig > ri</u>

ka-ri:	கரி	'நஞ்சு'
ka-ri:	கரி	'சாட்சி'
ka-ri:	கறி	'மரக்கறி'
ka-ri:	கறி	'கடித்துத்தின்'
ka-ri:	காரி	'எருது'
ci-ri:	சிரி	'நகைத்தல்,மலர்தல்'
ku-ri:	குறி	'அடையாளம்'
ce-ṟi:	செறி	'திரட்டுதல்,பதித்தல்'
cē-ri:	சேரி	'ஊர்,தெரு'
ku(>o)-ri:	கொறி	'ஆடு'
ku(>o)-ri:	கொறி	'பொறுக்கி உண்'
ca-ri:	சரி	'நழுவுதல்,கீழேவிழுதல், சாதல்'

cā-ri:	சாரி	'பக்கம்'
cu-ri:	சுரி	'சுழிதல்' 'சுருளுதல்'
cu-ri:	சுரி	'துவாரம்'
cu-ri:	சுரி	'சுளித்தல்,சினத்தல்'
ce-ri:	செறி	'நெருங்குதல்,மிகுதல்'
cu(>o)-ri:	சொறி	'தினவு'
cu(>o)-ri:	சொரி	'பொழிதல்,உதிர்தல்'
cū(>ō)-ri:	சோரி	'இரத்தம்,மழை'
ñe-ri:	ஞெரி	'நெரிதல்,முறிதல்'
na-ri:	நரி	'வருத்துதல்,நொறுக்குதல்'
na-ri:	நரி	'ஒரு விலங்கு'
ne-ṟi:	நெறி	'வழி' 'வளைவு'
ta-ri:	தரி	'தாங்கு' 'நிலைபெறுதல்'
ta-ṟi:	தறி	'வெட்டுகை' 'தூண்'
ta-ri:	தாரி	'வழி முறைமை' 'உடைத்தாதல்'
ti-ri:	திரி	'அலைதல்,போதல்'
te-ri:	தெரி	'தோன்றுதல்,விளக்கமாதல்'
te-ṟi:	தெறி	'சிதறுகை' 'பிளத்தல்'
te-ṟi:	தெறி	'அறுதல்'
tē-ri:	தேரி	'மணற்றரை,மணற்குன்று'
nā-ri:	நாரி	'கள்,தேன்,பன்னாடை'
pa-ri:	பரி	'பாதுகாக்கை' 'சுமை' 'துலை'
pa-ri:	பரி	'அறுத்தல்' 'முறிதல்' 'அழிதல்'
pa-ri:	பரி	'பற்றுவைத்தல்,காதல் கொள்ளுதல்'

pa-ri:	பரி	‘வாங்கிக் கொள்ளுதல்,பெறுதல்’
pā-ri:	பாரி	‘காத்தல்’ பூமி,கட்டில்’
pa-ri:	பறி	‘ஓடிப்போதல், வெளிப்படுதல்’
pa-ri:	பறி	‘வலிய நீக்குதல், தோண்டுதல்’
pi-ri:	பிரி	‘கட்டவிழ்தல்’
pi-ri:	பிரி	‘பங்கிடுதல்’
pu-ri:	புரி	‘நகரம்’ ‘உடல்’
pu-ri:	புரி	‘விரும்புதல்,கொடுத்தல்’
pu(>o)-ri:	பொரி	‘வறுபடுதல்’ ‘தீய்தல்’
pu(>o)-ri:	பொரி	‘விரைவாகப் பேசுதல்’
pu(>o)-ri:	பொறி	‘எழுதுதல்’சித்திரித்தல்’
ma-ri:	மறி	‘ஆட்டின் இளமை’
ma-ri:	மறி	‘தடுத்தல்,திருப்புதல்’
mā-ri:	மாரி	‘நீர்,மழை’
mu-ri:	முரி	‘ஒடிதல்,தளர்தல்,தவறுதல்’
mu-ri:	மூரி	‘வலிமை’
mu-ri:	மூரி	‘எருது’
mū-ri:	மூரி	‘திமில்’
mū-ri:	மூரி	‘கிழம்’
mū-ri:	மூரி	‘முரண்,சோம்பல்’
mu-ri:	முறி	‘துண்டு,பாதி’
mu-ri:	முரி	‘துண்டு,சிதைவு,வளைவு’
mu-ri:	முறி	‘துணி’ ‘சீலை’
va-ri:	வரி	‘தீ’ ‘நிறம்’ ‘அழகு’
va-ri:	வரி	‘நெல்’

va-ri:	வரி	'எழுதுதல்,பூசுதல்'
va-ri:	வரி	'கட்டுதல்'
vā-ri:	வாரி	'மதிற்சுற்று'
vā-ri:	வாரி	'நீர்,வெள்ளம்'
vi-ri:	விரி	'பரத்தல், மலர்தல்'
vi-ri:	விரி	'அவிழ்தல்'
vi-ri:	விரி	'விரியன் பாம்பு'
ve-ri:	வெறி	'கள்' 'மதங்கொள்ளுதல்'
ve-ri:	வெறி	'வெறுமையாதல்'
ve-ri:	வெறி	'ஆடு'
a-ri:	அரி	'கள்' 'அறுத்தல்'
i-ri:	இரி	'ஓடுதல்' 'விலகுதல்'
i-ri:	இரி	'கெடுதல்'
u-ri:	உரி	'கழலுதல்'
u-ri:	உரி	'அரை நாழி' அளவு
u-ri:	உறி	'தொங்க விடும் உறி'
e-ri:	எரி	'நெருப்பு,பிரகாசம்'
e-ri:	எறி	'வீசியெறிதல்'
e-ri:	எறி	'வெட்டுதல், அறுத்தல், முறித்தல்'
e-ri:	எறி	'ஒளி வீசுதல்'
ē-ri:	ஏரி	'நீர்நிலை'
ū(>o)-ri:	ஓரி	'நரி', 'பிடர் மயிர்'

+ rug

ka-rug:	கருக்கு	'ஆயுதப் பற்கூர்'
ka-rug:	கருகு,கருக்கு	'கருகச் செய்தல்'

ka-rug:	கருக்கு	'புதுமை'
ka-rug:(>u)	கறுவு	'சினம்' 'மனவைரம்'
ci-rug:	சிறுகு, சிறுக்கு	'சிறுகச் செய்தல்'
ci-rug:	சிறுக்கு	'கோபித்தல்'
ki-rug:	கிறுங்கு	'அசைதல்'
ki-rug:	கிறுக்கு	'எழுதுதல்'
ku-rug:	குறுகு, குறுக்கு	'குறுகுதல், அணைதல்'
ca-rug:	சருக்கு, சறுக்கு	'சறுக்குதல்'
cu-rug:	சுருங்கு, சுருக்கு	'ஒடுங்குதல்'
cu-rug:	சுறுக்கு	'விரைவு'
ce-rug:	செருகு	'இடை நுழைத்தல்'
ce-rug:	செருக்கு	'அகந்தை, பெருமிதம்'
ne-rug:	நெருங்கு, நெருக்கு	'செறிதல்'
na-rug:	நருங்கு, நருக்கு	'நொறுங்குதல்'
ta-rug:	தறுகு	'தடைபடு' 'தவறு'
ti-rug:	திருகு, திருக்கு	'முறுக்குதல்'
na-rug:	நருங்கு	'வளர்ச்சி குறைதல்'
na-rug:	நறுக்கு	'வெட்டுதல்'
nu-rug:	நுறுங்கு, நுறுக்கு	'பொடியாக்குதல்'
pa-rug:	பருகு, பருக்கு	'குடித்தல்' 'உண்ணுதல்'
pe-rug:	பெருகு	'அளவுமிகுதல், நிறைதல்'
pe-rug:	பெருகு	'தயிர்'
pe-rug:	பெருக்கு	'வெள்ளம்'
pu(>o)-rug:	பொருக்கு	'உலரும் சேற்றின் ஏடு'
pe-rug:	பெறுக்கு	'பொறுக்குதல்'

ma-rug:	மருங்கு	'பக்கம்'
ma-rug:(+an)	மருகன்	'வழித்தோன்றல்'
ma-rug:	மறுகு	'தெரு,ஒழுங்கை'
ma-rug:	மறுகு	'திரிதல்,கலங்குதல்'
mu-rug:	முருங்கு,முருக்கு	'அழிதல்,முறிதல்'
mu-rug:	முருக்கு	'பலாசம்,ஒருமரம்'
mu-rug:	முருகு	'இளமை,அழகு,மணம்'
mu-rug:	முருகு	'தெய்வம்,வேள்வி'
mu-rug:	முருகு	'கள்,தேன்'
mu-rug:	முறுகு,முறுக்கு	'மிகுதல்,கடுமையாதல்'
mu-rug:	முறுகு	'திண்மை'
me-rug:	மெருகு	'பளபளப்பு'
va-rug:	வருக்கை	'வருக்கைப் பலா'
va-rug:	வறுகு	'பிறாண்டுதல்'
ve-rug:	வெருகு	'காட்டுப் பூனை'
a-rug:	அருகு,அருக்கு	'குறைதல்,சுருக்குதல்'
a-rug:	அருங்கு	'அருமை'
a-rug:	அருகு	'ஓரம்,பக்கம்,இடம்'
a-rug:	அருக்கு	'மனமின்மை காட்டுதல்'
i-rug:	இறுகு,இறுக்கு	'அழுந்தக் கட்டுதல்'
u-rug:	உருகு,உருக்கு	'வெப்பத்தால் இளகுதல்'
u-rug:	உறுக்கு	'அதட்டுதல்'
u-rug:	உறுக்கு	'தண்டித்தல்'
e-rug:	எருகு	'மாட்டின் மலம் கழிதல்'
e-rug:	எருக்கு	'வெட்டுதல், கொல்லுதல்'

+rug>ru

ka-ru:	கரு	'கருப்பம்'
ka-ru:	கரு	'அச்சுக் கரு'
ka-ru:	கரு	'நடு'
ka-ru:	கறு	'கருமையாதல்,முற்றுதல்'
ka-ru:	காறு	'கால அளவு'
kā-ru:	காறு	'உழவுக் கொழு'
kā-ru:	காறு	'காறற் சுவை'
ci-ru:	சிறு	'சிறிதாதல்'
ci-ru:	சிறு	'தடுத்தல்'
ki-ru:	கிறு	'ஒரு நிகழ்கால இடைநிலை'
ce-ru:	செறு	'கோபம்,வயல்,குளம்'
kī-ru:	கீறு	'கிழித்தல்'
kī-ru:	கீறு	'எழுதுதல்'
ku-ru:	குரு	'ஒளி'
ku-ru:	குரு	'புண்'
ku-ru:	குறு	'பறித்தல்'
ku-ru:	குறு	'ஒழித்தல்'
kū-ru:	கூறு	'பங்கு'
kū-ru:	கூறு	'சொல்லுதல்'
ce-ru:	செறு	'அடக்குதல்' 'அழித்தல்'
ce-ru:	செரு	'போர்'
ku(>o)-ru:	கொறு	'கோபங்காட்டுதல்'
kū(>ō)-ru:	கோரு	'வேண்டிக் கொள்ளுதல்'
kū(>ō)-ru:	கோரு	'விரும்புதல்'

cā-ru:	சாறு	'நழுவுதல்,வழுக்குதல்'
cā-ru:	சாறு	'சாறு' 'கள்'
cī-ru:	சீறு	'கோபித்தல்'
cu-ru:	சுறு	'நாற்றம்'
cū-ru:	சூறு	'சூழ்தல்'
cū(>ō)-ru:	சோறு	'உணவு' 'உள்ளீடு' 'முத்தி'
ñā-ru:	ஞாறு	'மணம் வீசுதல்'
ñā-ru:	ஞாறு	'தோன்றுதல்'
na-ru:	நறு	'நல்ல'
nā-ru:	நாறு	'மணத்தல்'
ne-ru:	நெறு	'ஓசைக்குறிப்பு'
ta-ru:	தரு	'மரம்' 'மரக்கலப்பாய் இறக்குதல்'
ta-ru:	தறு	'கட்டுதல்' 'இறுக உடுத்தல்'
tā-ru:	தாறு	'அங்குசம்' 'முட்கோல்'
tā-ru:	தாறு	'குலை'
tā-ru:	தாறு	'நூல் சுற்றுங் கருவி'
tu-ru:	துறு	'நெருக்கம்' 'உண்ணுகை'
tu-ru:	துரு	'இரும்புக் கறை,களிம்பு'
tū-ru:	தூறு	'பழிச் சொல்' 'தீங்கு'
tū-ru:	தூறு	'புதர்,குவியல்'
tū-ru:	தூறு	'தூவுதல், பரத்தல், கிளைத்தல்'
tū-ru:	தூரு	'மலங்கழித்தல்'
te-ru:	தெரு	'வீதி,வழி'
te-ru:	தெறு	'சுடுதல், கொல்லுதல், கொட்டுதல்'

te-ru:	தெறு	'நெரித்தல்,குவித்தல்'
te-ru:	தேறு	'தெளிதல்,செழித்தல்'
ni-ru:	நிறு	'தூக்குதல்,தீர்மானித்தல்'
ni-ru:	நீறு	'சுண்ணமாதல்'
nu-ru:	நுறு	'இடித்தல்,வெட்டுதல்'
nu-ru:	நூறு	'நூறு என்ற எண்'
nu(>o)-ru:	நொறு	'உடையுந்தன்மையதாதல்'
pa-ru:	பரு	'பெருத்தல்,கடல்,மலை'
pa-ru:	பாறு	'சிதறுதல்,அழிதல்'
pa-ru:	பாறு	'நிலைகெட்டு ஓடுதல்'
pa-ru:	பாறு	'பருந்து,கழுகு,மரக்கலம்'
pa-ru:	பாறு	'கடத்தல்,பொருதல்'
pi-ru:	பீறு	'கிழிதல்'
pi-ru:	பீறு	'குதம்'
pu-ru:	பூறு	'பீறு'
pe-ru:	பெரு	'பருத்தல்'
pe-ru:	பெறு	'அடைதல்,பிரசவித்தல்'
pu(>o)-ru:	பொரு	'உவமை,ஒப்பு'
pu(>o)-ru:	பொரு	'போர் செய்,தாக்கு'
ma-ru:	மறு	'குற்றம்,களங்கம்'
ma-ru:	மறு	'மற்ற' 'பிற'
ma-ru:	மறு	'இல்லையென்னுதல்,தடுத்தல்'
ma-ru:	மாறு	'வேறுபாடு' 'பகை'
mi-ru:	மீறு	'கடத்தல்,மேற்போதல்'
vi-ru:	வீறு	'வெற்றி'

mu-ru:	முறு	'முணுமுணுத்தல்'
va-ru:	வரு	'வருதல்'
va-ru:	வறு	'பொரியச் செய்தல்'
vā-ru:	வாரு	'அள்ளுதல்'
vā-ru:	வாரு	'யாழ் நரம்பைத் தடவுதல்'
ve-ru:	வெரு	'அச்சம்'
ve-ru:	வெறு	'அருவருத்தல்'
ve-ru:	வெறு	'மிகுதல்'
vē-ru:	வேறு	'பிறிது,பகைமை'
a-ru:	அரு	'அட்டை'
a-ru:	அறு	'தீர்தல்,இல்லாமற்போதல்'
ā-ru:	ஆறு	'வழி,பக்கம்,நதி,அறம்'
ā-ru:	ஆறு	'தணிதல்,அடங்குதல்'
i-ru:	இரு	'பெரிய,கரிய'
i-ru:	இரு	'நிலைபெறு' உட்கார்,சீவித்தல்'
i-ru:	இறு	'முறிதல்,முடிவுறுதல்'
i-ru:	இறு	'விடையிறுத்தல்' 'வினாதல்'
i-ru:	இறு	'தங்குதல்,தைத்தல்'
u-ru:	உரு	'வடிவு,உடல்'
u-ru:	உரு	'தோன்றுதல்,முளைத்தல்'
u-ru:	உரு	'மிகுதல்'
u-ru:	உரு	'இசை,இசைப்பாட்டு'
u-ru:	உறு	'மிக்க,நிறைந்த'
u-ru:	உறு	'இருத்தல்,படுதல்,ஒத்தல்'
ū-ru:	ஊறு	'உடம்பு' 'துன்பம்,கசிவு'

e-ru:	எரு	'உரம்,மலம்'
ē-ru:	ஏறு	'உயரம்,ஆண்,எருது'
ē-ru:	ஏறு	'மேலேறுதல்'
ē-ru:	ஏறு	'மிகுதல்,வளர்தல்'

(3) பிற இரு தனிநிலையடிச் சொற்களின் ஒட்டுக்கள்:

ka-ba, ka-bar என்னும் இணைநிலை அடிச்சொல் **ka**-வாய், **bar** திறத்தல் எனச் சுமர்மொழியில் பொருள்பட்டு வாய் திறந்து அல்லது பிளவுபட்டு நிற்கும் எல்லாப் பொருள்களையும் சுட்டும். தமிழில் இது கவர், கவடு, கவட்டை, கவலை, கவை, கவம், கவ்வு, கப்பு எனப் பல பொருள்களை உணர்த்தும் சொற்களாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வாய் திறந்து நிற்றல், அல்லது வாய் பிளவுபட்டு நிற்றல் எல்லாவற்றிலும் அடிப்படைப் பொருளாக நிற்கின்றது. கவர்-தல் என்னும் வினைச் சொல்லும் இவ்வடியினின்று பிறந்ததே. கப்பு என்பது பிளவுபட்ட வாயையுடையது. கவடு என்பது கால்களை அகலவைத்து நடத்தல்.

ka-da:பேசுதல், எனப் பொருள்படும். தமிழில் 'கதை' என வரும்.

ka-du: 'கத்து' அலறுதல் அல்லது குழறுதல் எனப் பொருள்படும். கா-வாய், து-செய்தல் எனத் தனித்தனி பொருள்பட்டு இணைந்து நிற்கும்போது வாயாற் செய்தலாகிய கத்துதலைச் சுட்டிற்று.

ka-li:'கலி' என்னும் இணைநிலையடிச் சொல் கா-வாய்,லி-சத்தம் எனப் பொருள்பட்டு 'வாய்ச்சத்தம்' என்பதைக் குறித்து நின்றது. காலப்போக்கில் முதனிலையாகிய **ka** என்னும் பொருள் மறைந்து போகவே **li**- சத்தம் என்னும் பொருளை மட்டுமே சுட்டி நிற்கின்றது.

ka-li:'கழுத்து' வாயடியில் நீண்டு நிற்பதென்பது இதன் பொருள். **tu**-து என்னும் பின்னொட்டைப் பெற்று **ka-li-tu>** கழுத்து என வரலாயிற்று.

ka-ne:'கனல்' என நின்று நெருப்பைச் சுட்டிற்று .நெ-ருப்பு என்பதன் முதனிலையாகிய **ne** என்பது **ka** என்பதனுடன் இணைந்து நின்று **ka-ne** 'கனல்' என ஆயிற்று.

ka-rad(>rag):'அரை' ககரமெய் கெட்டு **a-rag>a-rai** 'அரை' என நின்று உணவை வாயினுள் மென்று அரைத்தலைச் சுட்டி நிற்கும்.

ka-šе(>cu): 'கச்சு' கச்சுதல் என்னும் பழந்தமிழ்ச் சொல் வாயினுள் உணவைப் போட்டுக் கடித்து மெல்லுதல் எனப் பொருள்படும். கி.மு.3000க்கும் முற்பட்ட காலத்துச் சுமர்க் கல்வெட்டிற் காணப்படும் இவ்வினைநிலையடிச் சொல் கல்வெட்டிற் பொறிக்கப்பட்டிருக்கும் முறையும் ஓர் அற்புதமானது. இரண்டாவது சொல் முதலாவதன் பக்கத்தில் எழுதப்படாது முதலாவதாகிய **ka-** 'க' என்னும் உருவெழுத்தின் உள்ளே எழுதப்பட்டிருக்கிறது. சீன மொழியிற் போல் எழுத்தே சொல்லாக வழங்கிய காலத்து நடைமுறையே இது என ஆய்வாளர் கருதுகின்றனர். இம்மிகப் பழைய தமிழ்வினை நிலையடிச் சொல் ஏனைய திராவிட மொழிகளில் கொண்டுள்ள வடிவங்கள் பின்வருமாறு: **(DED 920)**

த: **kaccu** க: **kaccu, karcu**

து: **kaccuni** கொ: **kacc** ப: **kacc**

கோ: **kaskāna, kaccāna, kacinā**

குயி: **kasa (kasi-)** குவி: **kacali, kazzinai**

குர்: **khassna** மோ: **Qaswe**

இச்சொல்லிலிருந்து தெரிய வரும் சொற்பிறப்புப் பண்பாவது கி.மு.3000க்கும் முற்பட்ட காலத்திலேயே தனிநிலையடிச் சொற்களின் ஒலி தேய்ந்து இரண்டு சொற்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு அல்லது ஒட்டப்பட்டுப் பொருளுணர்த்தும் ஆற்றலைப் பெற்றன என்பதாகும். குடும்பப் பண்பின் தோற்றத்தைத் திட்டவட்டமான காலவரையறையின் அடிப்படையில் இங்கே காணலாம்.

g̃a-lam: 'களை' களைந்தெடுத்தல் நீக்குதல்,அழித்தல் என்ற பொருள்களில் வருகின்றது. **g̃a-lag> g̃a-lam, g̃a-lag> g̃a-lay> g̃a-lai:** களை.

g̃a-mun: கவுல், அமைவு, **agreement** என்னும் பொருள்களைச் சுட்டும் இவ்வினை நிலையடிச் சொல் தமிழில் இணக்கம், அங்கீகாரம், ஏற்றுக்கொள்ளல் என்னும் பொருள்களை

யுடையது ஈ **ar-agreeing, ga-agree** என்னும் இருசொற்களும் சுமர்மொழி இணைநிலையடிச் சொல்லின் முதன் மொழியாகும்.

ga-nam:சாணம் **cow-dung** 'கத்தம்' என்னும் பழந்தமிழ் வழக்கும் இப்பொருளில் பயின்று வருவது. **gar-excrement** என்ற சுமர் மொழிச் சொல்லும் **kad 'droppings, manure'** என்னும் பிராகுவி மொழிச் சொல்லும் கத்-தம் என்னும் தமிழ்ச் சொல்லின் முதன் மொழியோடு ஒப்பிடத்தக்கன.

gar-ra:கட்டு,கட்டுப்பாடு **economical, thrifty** என்னும் பொருள்களைச் சுட்டுவது. **gar, kar** என்னும் சொற்கள் கட்டுப்பாடாகச் செலவு செய்து சேமித்தல் **-to save up'** என்னும் பொருளைச் சுட்டி வரும் தனிநிலையடிச் சொற்களாம். சுமர் மொழிச் சொல்லின் **TT** இரட்டிப்பும் தமிழில்-ட்ட்-இரட்டிப்பும் குறிப்பிடத்தக்கன.

gar-za:கட்டளை **'Command of a king'** என்னும் பொருளிற் பயின்று வருகிறது.

gar-zu:அருள்: **Command of a communication (of god)** என்னும் பொருளிற் பயின்று வருகிறது. **argus** 'அருள்' என்னும் பிற்காலத்திய சுமர் மொழிச் சொல் இதனினின்றும் பிறந்ததாகக் கருதப்படும்.

gi-mar: கிணறு **'well'**

Kinda < ki-da: கிண்டு.**ki-da>kidda>kinda** என மெல்லொலி இடையீடு பெற்றது. கிண்டுதல் என்ற சொல் கழிகிண்டுதல், நிலத்தைக் கிண்டுதல் என்னும் பொருள்களில் இன்று பயன்படுத்தப்படுவதேனும் தோற்றக் காலத்தில் அடிமைகளினதும் குற்றவாளி களினதும் நெற்றியில் சிறு கத்தி கொண்டு வெட்டப்படும் சிறு துளையையே சுமர்மொழியிற் சுட்டிற்று. அதாவது சமுதாயத்தில் கீழ்நிலையை யுடையோர் என்பதைப் பிறருக்குக் காட்டிக் கொள்வதற்காக நெற்றியில் இழைக்கப்படும் காயமாகும். அடிமை வியாபாரம் பெருவழக்கில் இருந்த அக்காலத்தில் அடிமைகள் யார் என்பதைப் புறத்தே காட்டிக் கொடுப்பது இவ்வடையாளமாகும்.

Kud-da-ag-a: குத்தகை **kud** 'குத்' என்ற சொல் வரி,வாரம்,**tax, rent** என்ற பொருள்களையுடையது. **ag** என்பது 'சேர்த்தல்'.

சுமர் மொழியில் **galu nig kud-da-ag-a 'tax gatherer'** என்ற சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. **galu:**'ஆள்' வயலின் ஆண்டுக் குத்தகையாக இவ்வளவு கொடுக்கப்பட வேண்டுமென்பதைச் செயற்படுத்துவோனே குத்தகையைச் சேர்ப்பவன் எனப்படுகிறான். 'குத்தகை' என்னும் இவ்வழக்கு கி.மு.2500க்கு முற்பட்ட காலத்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

da-bin: 'தவிடு' Coarse barley flower bran, minute particle. தானியத்தின் உமிக்கு உள்ளேயிருக்கும் சத்துள்ள மாத்தூள்கள். பண்டைக்காலத்தில் போர்வீரர்கள் யுத்தமுனைக்குச் செல்லுங்காலத்தில் அவர்கள் வீடு திரும்பும் வரை தேவையான போது உணவாகப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்படும் படி அளவு எனக் குறிப்பிடும் சந்தர்ப்பத்தில் இச்சொல் சுமர்மொழியிற் பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்வீரர் பல நாட்களுக்கு உணவின்றியிராமல் தேவையேற்படும் போது உடனடியாக எவ்விடத்திலும் தயார் பண்ணக் கூடிய உணவு இதுவாகும்.

ma-addir: 'கட்டு மரம்' நீரில் மிதந்து செல்லும் படகு. இது மரக்கட்டைகளாலானது. **ma:boat:addir-kattai.** நீரில் மிதந்து செல்லும் கப்பல்,தோணி,படகு ஆகியன வெல்லாம் 'மா' என்ற சொல்லால் அழைக்கப்படும். **kattai>addir** என முதன் மெய்யாகிய ககரம் கெட்டு நின்றது.

ma-lag: மாலிமி **confidant, intimate friend** நெருங்கிய நண்பன்.

ma-lag̃: மாலுமி **boatman m̄a-** கப்பல், படகு, தோணி **lag̃ /lu g̃** செலுத்துதல் அதாவது மாலுமி என்பது கப்பலோட்டி எனப் பொருள்படும்.

nam-tar: அந்தகன் **fate-decider. nam** அடைப்பு, **sate;tar-** தறித்தல், வெட்டுதல், தீர்மானித்தல். அதாவது ஒவ்வொருவரதும் தலைவிதியை நிச்சயிப்பவன். சுமர் இலக்கியங்களில் அந்தகனாகிய இயமன் ஒரு பேய் வடிவினனாக வருணிக்கப்படுகிறான்.

na-giru: இது ஒரு செமித்திக்குச் சொல் என்றும் இதன் சுமர் வடிவம் **nimgir** எனவும் கூறப்பட்டுள்ளது. உண்மையில் இது மிகப்

பழைய சுமர் மொழிச் சொல். ஞாயிறு என்ற தமிழ்ச் சொல்லாகும். அரசன், இளவரசன், மேற்பார்வையாளன் என்ற பொருள்களிற் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ka-lam: களம் 'நாடு' கல்வெட்டுக்களுள் மிகப்பழைய தொன்றில் போர்க்களத்துக்குக் கொண்டு செல்லப்படும் சின்னம் ஒன்று இவ்விணைநிலையடிச் சொல்லின் பக்கலில் காட்டப் பட்டுள்ளது. இது குறித்து ஆய்வாளர் மயங்குவர். தமிழில் நாடு,நிலம்,வெளி என்பனவற்றைச் சுட்டி நின்றாலும் 'போர்க்களம்' என்பதே அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால் சுமர் மொழியில் இக்கருத்துச் சுட்டப்படாது போர்ச்சின்னம் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. அங்கு 'களம் என்ற சொல் 'சுமர் நாட்டை'க் குறித்து நிற்கும்.

kaš-dug: கடுகு 'விரைவாக' என்பது பொருள். முதனிலை அடிச் சொல்லின் ஈற்று மெய் கெட்டு (š=0) **kadug** என வந்தது. **sa-dug, u-dug** என்பன போன்று இது ஒரு கூட்டு வினைச் சொல் **(compound verb)** என விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. சுமர் மொழியிலும் பழந்தமிழிலும் வினைமுற்றுக்கும் எச்சத்துக்கு மிடையில் வேறுபாடிருக்கவில்லை. வினைச் சொல் காலங்காட்டவில்லை. எனவே முற்றுக்கும் எச்சத்துக்கும் வேறு வேறு வடிவங்கள் இருந்திருக்கவில்லை யென்பது ஈண்டு உணரத்தக்கது. **dug>du** எனக் குறுகி கடிது,சிறிது,பெரிது என்பனவற்றின் ஈற்றில் நிற்கும் 'து' என ஆயிற்று.

ĝi-li: செழி **'luxuriance'** இப்பொருளைச் சுட்டும் ஏனைய தமிழ்ச் சொற்கள் **ka-li** கலி, **o-li** ஒலி **poli** பொலி. கிலி என்பதன் மூலம் **ki-lag>ki-lar,** கிளர்+ச்சி என்பது இங்ஙனம் இணைநிலையடிச் சொற்களின் இரண்டாவது சொல்லாகிய **+lag** என்பதே **lar** எனவும் பின்னர் **li** எனவும் குறுகி வந்தமையை மொழியிலுள்ள எண்ணிறந்த சொற்கள் காட்டுகின்றன. **ĝ>c** ககர சகரப் பரிமாற்றம்.

ki-ta: கிட,கிடை,கீழ்ப்பக்கம்,அடி என்பன பொருள். **ki**=கீழ், **ta**-இருந்து அதாவது 'கீழேயிருந்து' என்பது மூலப் பொருளாய் கீழே கிடப்பதை உணர்த்திற்று.

ki-tag: கிடங்கு: 'தானிய அறை' **(store house)** என்பது

பொருள்.**ki-கீழே,tag:** சேர்த்து வைத்தல். நிலத்தின் கீழே பொருள்களைச் சேர்த்து வைப்பதற்காக அமைக்கப்பட்ட அறையே சுமர் மொழியில் **kitag** எனவும் தமிழில் **kiṭanku** எனவும் இணைநிலைச் சொற்களாற் சுட்டப்பட்டது.

gi-bil, ñekiri: நெருப்புக் கொள்ளி, நெருப்பு **(firebrand, torch)** என்னும் பொருள்களைச் சுட்டி நிற்கும். இச் சொல் **gi-bil** என்னும் இருசொற்களின் ஒட்டாகும். **gi-**நெருப்பு **bil-**விளக்கு **gi>ñe, kil>bil:** கில் என்பது கிழி என ஆயிற்று. வல்லெழுத்தாகிய ககர ஒலி ஞகர ஒலியாக மெலிந்து மாறும். ஞான்,யான்,நான் என்னும் தன்மை ஒருமைச் சொற்கள் **'gan'** என்னும் தன்மை ஒருமைச் சொல்லிலிருந்து பிறந்தமை வெளிப்படை.

ki-lib, ki-li: கிளை,திரள்,பெருந்தொகை,விருந்தினர் என்ற பொருள்களைச் சுட்டி நிற்கும். **ki-lag>ki-lig>ki-lib>ki-li** என குறுகி நின்றது.

ki-lim, kilim: கீரி(ப் பிள்ளை) **rig>rim>lim** என மாற்றம் பெற்றது.

ki-Še: கீழே **down, downward**

g̃ i-Še:கிழி: **'to rip to pieces'**

gi-rin: பிரி:பிரித்தல் **(division of a total)** என்னும் பொருளில் வரும். **g>p** சொற்களெல்லாம் தோற்றக் காலத்தில் ககர வல்லொலியை முதலொலியாகக் கொண்டிருந்தவை என்பது மேலே கூறப்பட்டது.

ku-li: கூளி(யர்),நண்பர்

gu-ud: குதி,கூத்து:குதித்தல்,ஆடுதல்,நடனமாடுதல்.

gu-du: குதம்,சூத்து **(anus)** பின் குண்டி.

gu-tab: குதப்பு.

gu-tar: கூந்தல்

kug-gi: உக்கம்:பொன். **kug** என்பதின் முதற்ககரமெய் கெட்டுவிட்டது.

ku-lag> g̃ul: குலவு:ஒளிவிடுதல் களித்தல், இன்பமுறுதல் என்னும்

பல பொருள்களை உணர்த்துகின்றது. 'குலவு' என்பதன் மூலப் பொருள் ஒளிவிடுதல், பிரகாசித்தல் என முகபாவத்தைச் சுட்டிப் பின்னர் அதனால் ஏற்பட்ட களிப்பையும் களியாட்டத்தையும் உணர்த்திற்று.

g̃u-ru: குறை,குறுகு:**inferior.**'தனது ஆற்றலிற் குறைவுபட்ட பாடகன்' என்ற பொருளில் சுமர்மொழியில் வருகின்றது.

kur-ku, kur-gil, kur-gi: குருகு குருகுப் பறவை.

ku-run: குருதி. இரத்தம் என்னும் பொருளது.

ku-run: குடுவை. பானை அல்லது வளைந்த கழுத்தையுடைய மட்குடம் என்பது பொருள்.

k>s(c): தாய் மொழியிலுள்ள ஒரு பகுதி ககர முதன் மொழிச் சொற்கள் சுமர் மொழியில் ககர முதன் மொழிச் சொற்களாயின. செமித்திக்கு மக்கள் சுமர் மொழியைப் பேசியதால் ஏற்பட்ட விளைவே இது என்பர் சுமர் மொழி ஆய்வாளர். அதாவது சொல்லை அடித் தொண்டையிலிருந்து உச்சரித்தால் ககர வல்லினம் பெறப்படும். சிறிது முன் தள்ளி இடை நா இடையண்ண ஒலியாக உச்சரிப்பின் ககர ஒலி பிறக்கும் என்பது மொழியியலாளர் கூற்று. கி.மு.3000 ஆம் ஆண்டளவில் சுமர் மொழியில் இப்பண்பு ஏற்பட்டு விட்டது என்பது கல்வெட்டு மொழி ஆய்வாளர் கூற்று. பெரும்பாலான திராவிட மொழிகளில் சுமர் மொழியிற் போல் ககரம் சகரமாக மாறவில்லை. அதுவும் வட திராவிட மொழிகளில் ககர ஒலியே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

sa-gar: சவறு,சவடு. **g>v.** குப்பை,கூளம்,தூசி,அழுக்கு என்னும் பொருள்களை உணர்த்தி வருகிறது.

Ša-gal: அகடு:வயிறு என்னும் பொருளது. முதன்மொழி Š கர மெய் கெட்டு **agal>akatu** என ஆயிற்று.அகரமாகிய உயிர் முதற் சொற்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதை இங்கு காணலாம்.

za-g̃a: 'அகல்' விட்டுப்போ, நீங்கு, ஓடு என்னும் பொருளது. **gal>ga** என்பது செல்,ஓடு என்னும் பொருளது. நீரின் ஓட்டம் காலுதல் எனத் தமிழிற் கூறப்படுகிறது.

za-lag: ‘அலங்கு’ ஒளி விடுதல், பிரகாசித்தல் என்னும் பொருளது. உயிர் முதன் மொழியின் தோற்றத்தை இங்குக் காண்க. z=0.

za-lag̃ : அளி : காற்று வீச்சு என்பது பொருள் **z=0. lag>li** எனச் சாதாரணமாகவே குறுகு ஒலிக்கும். முன்கூறிய **sa-gar>za-bar** என ஆயிற்று. தமிழில் ‘சவ்ளி’ என்ற சொல் சிறு பொருள்களை **(piece goods)** உணர்த்தும். தகர் >சகர் >சவர் >சவ்ளி எனப் படிமுறையில் அழகாக ஒலிமாற்றங்கள் பெற்றன.

Šа(g)-gar, Šagar, sa-mag: சாமம் என்பதற்கு பசி **(hunger)** பஞ்சம் **(famine)** என்னும் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிச் சொற்களை விளக்கும் சுமர் மொழியியலாளர் **KA x GAR** என விரித்துக் காட்டுவர். **ka** வாய் **gar**-செய்யப்படுவது, காட்டப்படுவது. சாமம் - **(sa-mag)** என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நேரான பிற திராவிடச் சொற்கள் **DED.2005.** பர்ஜி **cākol** தெலுங்கு **ākali.** எனவே **ka-gar** என்னும் இரு சொற்களால் இணைக்கப்பட்ட பண்டைய இணைநிலையடிச் சொல் பல்வேறு காலப் பகுதிகளில் பெற்ற ஒலிமாற்றம் அறியத்தக்கது. தெலுங்கு மொழியில் **ka-gar> Ša-gar> ākali** என மாற்றம் பெற்றமை அறியத்தக்கது. இதனாலும் ஆதியிலிருந்த **ka**(க) என்னும் உயிர் மெய்யிலிருந்து பிறந்ததே நி(அ)அ என்னும் உயிரொலி என்பது பெறப்படும்.

za-lum:‘சாலும்’ செய்ய முடியும்**(can)** என்ற பொருளில் வருவது. பேச்சு வழக்குச் சொல் எனக் கருதப்பட்டு வந்த இவ்இணைநிலையடிச் சொல்லின் தோற்றக் காலம் கி.மு.3000-2500க்கு இடைப்பட்ட காலமாகும்.

sa-bar, Šeg.bar, Šega:'wild goat' இதன் மூலச் சொல் தகர். ஆட்டுக் கிடா மாற்றமடைந்த பின்னைய சொல். செச்சை **Šega**-செச்சை: ஆட்டுக்கிடா. ‘செச்சை வடிவேலன்’ முருகனுக்குரிய பெயர்.

za-bar: சவளம்: ஈட்டி அல்லது வேல் என்னும் போர்க் கருவி. **'bearded to dart, lance or pike'**

za-bar: சவி: **bright, splendour** வெளிச்சம்,ஒளி. இரண்டாவது சொல் **bar>b(v)i,** எனக் குறுகி நிற்கின்றது.

za-bar: செம்பு: **copper.**மெல்லின(ம்) இடையீடு கன்னட மொழியில் **cambige** எனவும் கூறப்படுகிறது.

za-bar: சவறு,சவடு.குப்பை,கூளம்,தூசி,அழுக்கு என்னும் பொருளது.

sa-mag:<KA-gar:desire: காமர்,காமம்,அமர் என்னும் மூன்று சொற்கள் தமிழில் உள்ளன. இம்மூன்றும் ஒரே அடியினின்றும் பிறந்தன. பண்டைய மனிதன் தன் பசியின் அறிகுறியாகவும் விருப்பத்தின் அறிகுறியாகவும் தனது வாயையே காட்டினான் என்பது இச்சொற்பிறப்பு ஆய்விலின்றும் புலப்படுகிறது. எனவே 'அமர்' என்னும் இணைநிலைஅடிச் சொல்லின் மூலம் அ-மர் என்பதல்லவென்பதும் அது ka-gar என்னும் இணைநிலையடிச் சொல்லினின்றும் பிறந்த தென்பதும் தெளிவாகியுள்ளன.

za-lag: கழுவு.**cleanse, purify.** சுமர் மொழியில் 'ga' என்ற சொல்லின் பொருள்களுள் ஒன்று கழுவுதல் என்பதாகும். அது போலவே **lag̃,lug̃** என்ற சொற்களும் கழுவுதல் என்னும் பொருளன. ஒரே பொருளுடைய **ga+lag̃** என்ற இரண்டையும் இணைக்க **zalag** என்ற இணைநிலையடிச் சொல் பிறக்கின்றது. தமிழில் **ga+lug̃** என்ற இரண்டையும் இணைக்கக் கழுவு என வருகின்றது. ஆயின் கழுவுதல் என்னும் பொருளில் வரும் பிறிதொரு சொல்லான **DED.208.alampu** அலம்பு என்பதும் மலையாளச் சொல்லான **alakku-** அலக்கு என்பதும் **ga** உடன் **lag̃** என்பதனை இணைக்கவே **ga + lag̃ > alag̃ > alakku> alampu** அலம்பு என ஆயிற்று.

za-lag: தளுக்கு. பிரகாசித்தல்,ஒளி விடுதல். **bright, shine** என்னும் பொருளது **t>z.** கன்னட மொழியில் **talaku** தெலுங்கு மொழியில் **taluku** எனவும் **(DED.2449)** அழைக்கப்படும்.

za-lag: 'சல்லி' குறுங்கற்கள் என்பது பொருள். **lag>li** என மாறுவது சாதாரண ஒலி மாற்றம்.

sa-lam, salme: காளம். இருட்டு,கறுப்பு என்பன. இதன் பொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. k>s என்னும் ஒலி மாற்றம் ஒன்றுமே காணப்படுகிறது. மூலச் சொல்லாகிய காளம் என்பது தமிழிற் காணப்பட்ட ஒலி மாற்றம் பெற்ற **salam** என்பது சுமர் மொழியிற் காணப்படுகின்றது. காளம் என்னுஞ் சொல்லுடன் அதே பொருளில் வரும் காழ்,காழகம் என்னுஞ் சொற்களை

ஒப்பிடுக. இணைநிலையடிச் சொல்லின் மூலவடிவம் காழகம் **ka-lag** என்பது இப்போது தெளிவாகப் புலப்படுகின்றது. காழ் என்பது ஒரு தனிநிலையடிச் சொல்லாக இப்போ காட்சியளித்தாலும் பண்டைய இணைநிலையடிச் சொல்லாகிய **ka-lag** கா-ழக் (+அம்) என்பதன் குறுக்கமே என்பது தெரிகிறது. இது ஒரு சொற்பிறப்பு வரலாற்று அடிப்படையுண்மையாகும்.

si-lag: சிலை,இலகு,இலங்கு: ஒளிவிடுதல் பிரகாசித்தல் என்னும் பொருளது **si-lag > si-lay > si-lai:** சிலை என வரும். முதன்மொழி மெய்யாகிய **s** கெட்ட நிலையில் **i-lag** இலகு என்றும் மெல்லின இடையீட்டுடன் இலங்கு என்றும் தமிழில் வருகின்றது. **si** என்பது தனிநிலை அடிச் சொல்லன்று அதன் முன்னைய வடிவம் **ki** என்பதாகும். **ki>si:** இணைநிலையடிச் சொல் **kilag** என்பது . இது **ki-lar** எனவும் **k>v** விளங்கு,விளக்கு எனவும் மாற்றம் பெறுகிறது. விளங்குதல்-பிரகாசித்தல். எனவே சிலைத்தல், இலகுதல், இலங்குதல், கிளர்தல், விளங்குதல் என்பன வெல்லாம் ஒரே அடியிலிருந்து கிளைத்தெழுந்த தமிழ்ச் சொற்கள். இவை அனைத்துக்கும் மூலமாக அமைந்த இணைநிலை அடிச்சொல் **ka-lag > ka-lay > ka-lar** கலை-ஒளி என்ற சொல்லாகும்.

zu-rag̃ : குரை,குரல்.**sound, voice, to be noisy, bleating etc.**

zu-rag = ka-rag என விளக்கங் கொடுக்கப்பட்டுள்ளது. **ka**-வாய், **rag:** சத்தம். வாயாற் சத்தமிடுதல் என்பது பொருள். எனவே கரைதல் குரைத்தல் என்ற இரண்டு தமிழ்ச் சொற்களும் ஒரே மூலத்திலிருந்து பிறந்த சொற்களாகும்.

su-lug < su-lag: குலவு. இது ஒளி,பிரகாசம்,களிப்பு என்னும் பொருள்களை உணர்த்துகின்றது. முகத்தில் ஒளி தோன்றுதல் ஒருவர் சந்தோசமடைகிறார் என்பதன் அறிகுறியாகும் என விளக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சொல் மூல ஒலியாகிய ககரத்தைக் கொண்டுள்ளது சுமர் மொழியில் **k>s** ஒலி மாற்றம் நிகழ்கிறது.

Šu-mer(u): kumeru: இது துளு மொழியில் **kumēru** குமேரு எனவே உள்ளது. **k>Š** அடிப்படையான இணை நிலையடிச் சொல் **ku-maru** குமரி என்பது தமிழ்ச் சொல்லாகும். **mar>mer**

என்பது **a>e** ஒலிமாற்றம். இச்சொல் நாட்டின் பெயராகவும் அந்நாட்டு மக்கள் பேசிய மொழியின் பெயராகவும் சுமரிலக்கியங்களிற் பயின்று வருகிறது.

da-ri: சாரி,தறை,அறை. செலுத்துதல்,துரத்துதல் என்ற பொருள்களில் இச்சுமர் மொழிச் சொல் வருகின்றது. அப்பொருளைச் சுட்டும் தமிழ்ச் சொல் **cā-ri** துரத்துதல் **d>c** ஆயின் **ta-rai** தறை என்ற சொல்லும் அதனின்றும் பிறந்த அறை **(tarai>arai:c=o)** என்ற சொல்லும் வெளியே செலுத்துதல் என்னும் பொருளுக்குப் பதிலாக உள்ளே செலுத்துதல் **(drive in)** என்னும் பொருளைக் குறிக்கின்றன. துரத்துதல் என்னும் பொருளில் வரும் **ka-lag > ka-lay > ka-lai** கலை என்னும் சொல் மிகப் பழைய வடிவமாகும். ககர மெய் தகர மெய்யாக மாறிற்று.

da-gal:அகல்: **d=o**. அகலித்தல்,பரத்தல் என்னும் பொருள்களில் வருகின்றது. இரண்டு சொற்கள் இணைக்கப்பட்டபின் சொற்சுருக்கம் ஏற்படுவது நியதியாகும். முதன்மொழியின் முதன் மெய் கெடும் அல்லது இணைமொழியின் ஈற்று மெய் கெடும். இது ஒரு சொற்பிறப்பு வரலாற்று உண்மையாகும். இங்கு சொல் முதலாகிய தகர மெய் கெட 'அகல்' என நிற்கின்றது. **da**-பக்கம், **gal**-பெருக்கம். பக்கம் நோக்கி விரிதலாகும்.

dam-kar, dam-gar: merchant: வியாபாரி என்ற பொருளில் சுமர் மொழியில் பயின்று வருகிறது. **dam, sam** என்ற சொற்கள் பொருள்களை விலைபேசி வாங்குதல் **dam:**வாங்கு என்ற பொருளையும் **kar** என்பது வாங்குபவனாகிய கர்த்தாவையும் சுட்டுகின்றன. இதற்கு ஓரளவு பொருத்தமான தமிழ்ச் சொல் **amkati:** அங்காடி என்பது சந்தை அல்லது பொருள்களை வாங்கி விற்கும் இடம். சந்தையைக் குறிக்கும் 'அங்காடி' என்பது போல் வியாபாரியைக் குறிக்க 'அங்கார்' என்ற சொல் தமிழில் இருந்திருக்கலாம். **d=o** முதன்மொழி முதல் மெய்க்கேடு **dagal>akal** என்பது போலவாகும்.

tugini: துகில்.சிறந்த ஆடை என்பது இதன் பொருள். சுமர் மொழியில் **tu,tug** என்னும் இரு சொற்களும் சிறந்த ஆடை என்ற பொருளில் பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. மெல்லிய

நூலினால் அழகாக நூற்கப்பட்ட ஆடை (fine cloth) எனச் சுமர் மொழியில் விளக்கங் கொடுக்கப்பட்டது. tugini என்ற சொல்லின் ஈற்று இகரம் ஒலி நயத்திற்காக நிற்கின்றது. tu(g)-gil என இணைநிலைச் சொல்லாக அமையும் இச் சொல்லின் ஈற்று லகரம் னகரமாக மாறிற்றெனலாம். tug,dug என்ற சொற்களுக்கு 'தூய' 'தூய்மையான' என்ற பொருள் உண்டு. எனவே பரிசுத்தமான தூய ஆடை என்பது பொருளாகும்.

dim-gul: நங்கூரம். பாரசீக மொழியில் **langar** என்றும் ஆங்கில மொழியில் **anchor** எனவும் கூறப்படும் இச் சொல் இரண்டு சொற்களால் ஆயது. **nam** என்ற சுமர்மொழிச் சொல் **nam>dam>dim** என மாற்றம் பெற்றதுபோல் **gar,gur** என்னும் சொற்களின் ஈற்று ரகரம் லகரமாயிற்று மிகுதியை உணர்த்தும் 'கூர்' என்னும் சொல் 'பெரிய' என்ற பொருளிலும் 'நம்' என்பது 'நிறுத்துதல்' என்னும் பொருளிலும் பயின்று இணைந்து நின்றபோது 'பெரிய நிறுத்துதல்'என்னும் பொருளைச் சுட்டிற்று. பெரிய நிறுத்துதலைச் செய்யுங் கருவி நங்கூரம் எனப்பட்டது. வேகமாகச் செல்லும் கப்பலை நிற்பாட்ட பயன்படுத்தப்படுவது. மிகப் பழைய தாய நங்கூரம் என்னும் தமிழிணையடிச் சொல் வெவ்வேறு ஒலி மாற்றங்களுடன் உலகின் பல மொழிகளில் வழக்கிலிருந்து வருகின்றது. பண்டைத் தமிழரின் மரக்கல உபயோகத்தையும் வாணிபத்தையும் எடுத்து விளக்க உபயோகிக்கப்படும் சொல் இது.

dim-ma:தீர்மானம்: **judgement**. 'தீர்' என்னும் அடிச் சொல்லின் ஈற்று ரகர மெய் மகரமாக மாறிற்று. **r>m** இம்மாற்றம் சாதாரணமாக வருவது.

dim-gir > dingir: திங்கள்: **'the bright one'** என்பது சுமர் மொழிப் பொருள். தீம்-இனிய, பிரகாசிக்கின்ற கர் >**gir** கதிர்கள் : பிரகாசிக்கின்ற கதிர்கள் என்ற மூலப் பொருளையுடைய இச் சொல் சுமர் மொழியில் கடவுளையும், தமிழ் மொமியில் சந்திரனையும் உணர்த்திற்று. இளங்கோ தம் சிலப்பதிகாரத்தில் கடவுள் வணக்கம் கூறும் போது முதலில் 'திங்களைப் போற்றுதும்' எனக் கூறியுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. பாண்டி நாட்டுடன் இணைந்து தெற்கே பரந்திருந்த நிலப்பரப்பே குமரிநாடு என வரலாறுகள் கூறுகின்றன. எனவே குமரி

நாட்டிலிருந்து சென்று குடியேறிய தமிழர் தம் தெய்வமாகச் சந்திரனைக் கொண்டிருந்தனர், காலப்போக்கில் சந்திரன் என்ற பொருள் மங்கிக் 'கடவுள்' என்னும் பொருள் நிலைத்திருக்கலாயிற்று எனலாம்.

dim-gir > dingir: lady: நங்கை. நங்கூரம் என்பது திங்குள் என வழங்கப்படுவது போலவே நங்கை என்பது திங்கிர் எனச் சுமர் மொழியில் வழங்கப்பட்டது. சுமர் மொழியில் சந்திரனை சுட்டும் மிகப் பழைய சொல் **nanna** நன்னன் என்பது. எனவே நகர முதன் மொழிச் சொற்கள் தகர முதன் மொழிச் சொற்களாக மாற்றம் பெற்றன என்பது போதரும்.

nig-di: நீதி **'litigation'** நீதி கேட்டல் என்னும் பொருளில் 'வழக்குரைத்தல்' என்பதைச் சுமர் மொழியில் சுட்டுகின்றது. முதன்மொழி ஈற்று **'g'** கெட்டு **mig>di>ni-di** நீதி என வருகின்றது.

ni-gin: நிகர்,நிகம்: ஒளி,பிரகாசம் என்பன இதன் பொருள். எங்கும் போலவே **gar>gir>gin** என ஒலிமாற்றம் பெற்றது. எனவே தமிழ் மொழி நிகர் என்பது பழைய சொல்வடிவம் **ka x gar** என்பதுவே **ni-gin** என்பதன் மூலச் சொற்கள் எனச் சுமர் மொழியியலாளர் கூறுவர். அப்படியாயின் 'நிகர்' என்பதன் முன்னைய வடிவம் 'ககர்' என ஆயிருந்திருக்க வேண்டும்.

ni-gin: நகர்: வீடு,குடியிருப்பு என்பன இதன் பொருள். சங்கத்தமிழில் நகர் என்பதற்கு பட்டினம் என்னும் பொருளின்றி வீடு,குடியிருப்பு,மனை,அரண்மனை என்ற பொருள்கள் உண்டு. நகர் என்பதுவும் **ka x gar** என்பதுவே. **ka>na:** கல்,**gar:** செய்யப்படுவது. அதாவது கல்லாற் கட்டப்படுவது என்பது அடிப்படைப் பொருளாகும்.

ni-gin: நிகரம்:குவியல் என்பது பொருள். சுமர் மொழியில் குப்பை,கூளங்களாலாய குவியல்களைச் சுட்டுகின்றது.

ni-min<ni-gin: நிகரம். தொகை, சேர்க்கை, திரட்சி, கூட்டம், குவியல் என்னும் பொருள்களைக் குறித்து வருகின்றது. **g>m.**நிகின் >நிமின் எனச் சுமர் மொழியில் மாற்றம் பெற்ற போதும் நிகரம் என்பதன் 'கரம்' மாற்றமின்றி மூலச் சொல்லாகவே நிற்கின்றது.

ni-gin: திகிரி **turn,encircle, go round, turn round, surround** என்னும் பல பொருள்களைச் சுமர்மொழிச் சொல் சுட்டுகின்றது. தமிழில் வட்டமாகச் சுற்றுதலையும், சுற்றும் கருவியாகிய கல்லையும் திகிரி என்ற சொல் குறிக்கின்றது. தமிழில் நகர மெய் தகர மெய்யாக மாறிய போது 'கர்' என்பது 'கிர்' என மாறியுள்ளமை நோக்கத்தக்கது.

ni-gin: காய்ச்சல்: **fever. ni-gin** என்பதன் மூல வடிவமாகிய **ka-gar** என்பதுவே **ka**-காய் **gar-cal** என மாற்றம் பெற்றுள்ளது. **gar-cal** என்பது சாதாரணமான ஒலிமாற்றம் **g>c;r>d** திராவிட மொழியாகிய பிராகுவியில் **nigin** என்னும் சுமர்மொழிச் சொல்லுக்கும் காய்ச்சல் என்னும் தமிழ்ச் சொல்லுக்கும் பதிலாக **k̲hak̲har** என்னும் சொல்லே **fever, to get fever (BL.137)** என்னும் பொருளைக் குறித்து நிற்கின்றது. சுமர் மொழியியலார் தரும் **ka-gar** என்னும் அடிப்படை விளக்கம் சரியானதே என்பதை **k̲hak̲har** என்னும் பிராகுவி மொழிச் சொல் நிரூபிக்கின்றது. கோ மொழியில் இது **kasānā** எனப்படுகிறது. **k̲hak̲har, kasānā, kāyaccal** என்னும் திராவிட மொழிச் சொற்கள் **ka-gar** என்னும் மூல இணைநிலையடிச் சொல்லுடன் மிக ஒட்டி நிற்கையில் சுமர் மொழிச் சொல்லாகிய **ni-gin** என்பது திசை திரும்பி நிற்பது காணத்தக்கது. இவ்வித பல்வேறு காரணங்களினால் இந்திய மண்ணில் வாழும் திராவிட மொழிச் சொற்கள் தாய்மொழிச் சொற்களின் பண்பினைப் பெரிதும் பாதுகாத்து நிற்கையில் பிரிந்து சென்ற குமரிமொழியாகிய சுமர்மொழி புதிய சூழலில் செமித்திக்கு மக்களின் உச்சரிப்புச் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டுத் தேய்ந்து சிதைந்து இறந்து போகும் நிலையை எய்திற்று.

a-ba, a-bi, ebi, aka: என்பன யாவ(ர்),எவ(ர்) **whoever, who** என்னும் பொருள்களில் மனிதரைக் குறிக்கும் வினாவாக வருகின்றன.

a-na, a-ni, an, ene: என்பன என்ன? **what? which?** என்னும் பொருளில் பொருள்களைக் குறிக்கும் வினாவாக வருகின்றன.

a-ba, a-na என்னும் இணைநிலை அடிச் சொற்களுள் முதனிலையாக நிற்கும் **a** என்பது ஒரு 'வியப்பிடைச் சொல்' **(interjection)** என்றும் மனிதரைக் குறிக்கும் **na** என்பதும்

பொருள்களைக் குறிக்கும் **bā** என்பதும் ஒன்றனிடத்தில் மற்றது மாறி நிற்கின்றது என்றும் சுமர் மொழி இலக்கணவாசிரியர் கூறுவர். **a-ba** என்பது **cbi** என மாறியது போல் தமிழ் மொழி **ya**-வ(ர்) **(a-ba)** என்ற வினாவையும் எ-வ **(e-bi)** என்ற வினாவையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் திணைபால் காட்டும் ன்,ள்,ர் என்னும் அறிகுறிகள் சொற்களுடன் ஒட்டப்படாது வேறோரிடத்தில் நின்று பொருள் சுட்டின எனச் சுமர் மொழிச் சொல்வமைப்புக் காட்டுகின்றது. தமிழிலும் யாவ,எவ சொற்களே அக்காலத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும். இனி **a-na** என்பதிலுள்ள -**na** என்பது **that** (அது) என்பதைச் சுட்டும் என்பர் ஒருசாரார். அவர் கருத்துப்படி **a-na** என்பது **what? that** எனப் பொருள்படும். அகரம் எகரமாக **(a>e)** மிகப் பழைய காலத்திலேயே மாறிவிட்டதென்பதை **cbi,eni** என்னும் சுமர் மொழிச் சொற்கள் காட்டுகின்றன. **gar:who,which** யார்? என்ற சொல்லும் சுமர் மொழியில் உண்டு.

a-dağ: ஆதரி. **help, support.** தமிழிலுள்ள 'தரு' என்பதற்கு இணையான சுமர் மொழிச் சொல் **dag** (தர்க்) என்பது. எனவே 'ஆதரி' என்ற சொல் ஒருவருக்குக் கொடுத்துதவு எனப் பொருள்படும்.

ka-lag, kala, a-lad, a-lal, a-la: 'அலகை' பேய்.

ka-lag என்னும் இணைநிலையடிச் சொல்லின் முதனிலை மெய்யாகிய ககரம் கெட்டு **a-lag > alakai** என வந்தது. **a-lad** என்னும் சொல்லின் பண்பை விளக்கும் இலக்கணவாசிரியர் அது **ka-lag** என்பதற்குக் காலத்தால் மிகப் பிந்தியது என வரையறை செய்வர். பேயைக் குறிப்பதற்கு **gal-** கழுது, **gul**-கூளி என்ற சொற்களும் உண்டு.

a-lan: வலை.**net.** வலையைக் குறிப்பதற்கு **gal, lal, al** என்னும் மூன்று சொற்களும் உண்டு.

a-nir: அஞர்.**lamentation, distress.**

a-ra-zu(<ku): அடங்கு, **supplication** அடக்கம் வணக்கத்தின் அறிகுறியாகக் கூறப்பட்டுள்ளது. இம்மூன்று சொற்களில் **a-in** உள்ளே, **ra-to go-** போ, **ku-towards** நோக்கி உள்நோக்கிச் செல்வதே அடக்கம் என விளக்கங் கூறப்பட்டுள்ளது. அதாவது மனம் ஒருவழிப்படுதல் ஆகும்.

a-ri: அரி.பகைவன் **foe.**

a-rag: அறை.**store in a granary.** அடைத்துப் பாதுகாக்கும் தானியம் வைக்கும் இடம் 'அறை' எனப்பட்டது.

al-lu: அலவன்.நண்டு.**crab.**

al-tar: ஆள்நர். **conqueror.**

தமிழில் உள்ள பெயர்ச் சொற்களின் கர்த்தாவைச் சுட்டும் தர்,நர்,மர்,கர் ஆகியனவெல்லாம் **gar-** செய்பவனைச் சுட்டும் பழைய வழக்குகள் **gar>tar, nar, mar.**

al-gar:யாழ்க்கரணம். அந்தப்புரத்தில் இராசமாதேவி கையில் வைத்து இசைக்கும் இசைக் கருவியாகிய **al-gar** என விளக்கும் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டுள்ளது மணிமேகலையில் வரும் 'யாழ்க் கரணமும்' என்னும் அடிப்பகுதி நினைவு கூரத்தக்கது. **al** என்பது **gar** என்பதனுடன் இணைந்தும் தனித்தும் வருகின்றது என விளக்கங் கூறப்பட்டது. பிற்காலத்தில் இவ்விசைக் கருவி சுமர் நாட்டில் அழிந்து விட்டது என்பர் உரையாசிரியர்கள். **al-yār** யாழ் மொழி முதன் மெய் கெட்டு நிற்கின்றது.

e-gir: எதிர் : **backside, future. g>t.**எதிரே நிற்பது வருங்காலம். அது பின்பக்கமாக நிற்பது எனப்படுகிறது.

e-lim: ஏழகம் : **he-goat.**

e-la: வெள்ளம்: **flood, deluge.**

el-la: ஏளனம் : **despise, scold.**

id-i: இடி: **to shatter.**

id-i-pu 'they have shattered' என இறந்த கால வினைச் சொல்லாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் 'பு' என்பது இறந்த காலத்தைச் சுட்டும் இடைநிலையாக செய்து, செய்யா, செய்பு என்னும் வாய்பாட்டிற் கூறப்பட்டுள்ளது. 'இடிபு' என்னும் வினையெச்சமே கி.மு.2400-இல் வினைமுற்றாக வருவதை ஈண்டு நோக்கலாம்.

uk-kin: ஒக்கல்.**gathering, assembly, host.** 'நின் ஒக்கலொடு' என வரும் சங்க நூல் வழக்கு சுற்றத்தாரையும் கூட்டத்தாரையும் குறிக்கின்றது. தமிழில் உள்ள ஒகர ஒலி பண்டைய உகர

ஒலியினின்றும் பிறந்த தென்பதை **uk-kin>okkal** என்ற சொல்லாட்சி காட்டுகின்றது.

uš-an-ta: உயர்ந்த : **the upper side uš-side** (உழை): **an-upper** (மேல்): **ta-from the** (இருந்து) என விளக்கங் கொடுக்கப்பட்டுள்ளது.

uš-ki-ta: உட்கிடை. : **the lower side, uŠ-side** (உழை) : **ki-below** (கீழ்) **ta-from the** (இருந்து) கவிதைகளில் உட்கிடையாய்க் கிடக்கும் என்ற சொற்பிரயோகம் குறிப்புப் பொருளாய் அடியில் கிடப்பதைக் குறிக்கின்றதை உணரலாம்.

i-de-ku: at the moment, now.

இன்றைக்கு, இற்றைக்கு. **i-this**(இது), **de-day** (நாள்), **ku-towards** (உள்). இந்நாளுக்கு என்ற அடிப்படைப் பொருள் 'இந் நேரத்துக்கு' என்பதைச் சுட்டுகிறது. **d>r:** மெல்லின 'ன்' இடையிடுகின்றது. 'இன்றைக்கு' 'இற்றைக்கு' என்னும் சொற்களின் பிறப்பு மூன்று சொற்களின் இணைப்பு அல்லது ஒட்டு என்பதை எவருமே இன்று கற்பனை செய்ய முடியாதவாறு ஒட்டி நிற்கின்றது.

4. தமிழில் குறைநிலை அடிச்சொற்கள்

'குறைநிலை' என்பது அடிச் சொல்லின் மூவொலிகளுள் முதன் மெய்யோ, ஈற்று மெய்யோ அன்றி முதலும் ஈறுமாகிய இருமெய்களுமோ கெட்டு நிற்பதாகும். கம் என்பது ஆம் எனக் குறுகுவது முதற்குறை. குக் என்பது கூ எனக் குறுகுவது கடைக் குறை. கவ் என்பது ஆ,ஆன்,ஆவு எனக் குறுகும் போது ஆ எனப்படுவது மூன்றாவதாகிய முதல் கடைக் குறை. தமிழ்ச் சொற்களெல்லாம் அசைச் சொற்களாகத் தோன்றிய பண்டைக் காலத்தில் மூவொலிகளைக் கொண்டிருந்தன வென்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இந்தோ- ஐரோப்பிய மொழியியலார் கூட தம் மொழிகளின் அடிச் சொற்கள் மெய்+உயிர்+மெய் என்னும் மூவொலியின எனக் கட்டளைகள் வகுத்துள்ளனர்.[1]

தமிழ்மொழி ஏறக்குறைய 6000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால உலக வழக்குடையது எனக் கருதப்படுவதனால் இந்நீண்ட காலப்பகுதியில் சொற்களில் ஒலி மாற்றம் பரவலாக ஏற்படுவதும் சொற்கள் நாளடைவில் தேய்ந்து தேய்ந்து வருவதும் இயற்கையே. அன்றியும் கருத்தை உணர்த்த இரண்டு தனிநிலை அடிச் சொற்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு சொல்லின் பான்மையதாக ஆக்கப்பட்ட பின்னர் உச்சாரண விரைவு காரணமாகச் சொற்களின் ஒலியமைப்பில் சுருக்கம் ஏற்படுவது ஒரு மொழி வரலாற்று உண்மையாகும்.

முதற்குறை

தமிழில் உள்ள அது, ஆடு, ஆந்தை, ஆம் முதலிய உயிர்முதற் சொற்களெல்லாம் இவ்வகுப்பினுள் அடங்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இவ்வகையின. சொற்களின் தோற்றக் காலத்திலும் அதன் பின்னரும் 'அது' என்பதன் வடிவம் **gar(that one)** ஆகும். முதலொலியாகிய வல்லினம் கெட்டுப்போக அக்கேட்டுக்கு நிறைவு செய்யும் வகையில் **ar** என்பது தடித்த மெய்யொலியாகிய **at(u)** என்பதாயிற்று. ஆடு என்பதன் பிராகுவி மொழி வடிவம் **had (goat)** என்பது, **h** என்னும் முதன் மெய்யொலி கெடவே **ad** என்பது உகர ஈறு பெற்று ஆடு என வந்தது. ஒரே பறவையைச் சுட்டும் ஆந்தை, நத்து ஆகிய இரண்டு சொற்களும் **nam(owl)** என்பதினின்றும் பிறந்தனவாகச் சுமர் மொழி காட்டுகிறது. **nam** என்பதின் முதன் மெய்யாகிய **n** கெட்டவுடன் **am** என்பது நீட்டித்து ஆந்தை என்றாயிற்று. **n** கெடாத நிலையில் நம் என்பது நத்து என்றாயிற்று. ஒன்றாம் (ஒன்று+ஆம்), இரண்டாம் (இரண்டு+ஆம்) என்பன போன்ற எண்ணுப் பெயர்களில் தமிழில் வரும் 'ஆம்' என்ற சொல் சுமர் மொழியில் பழைய வழக்குகளில் **kam** எனவும் பின்னைய வழக்குகளில் **am** எனவும் வழங்கப்படுகிறது. **ka+lag** என்னும் இரு சொற்களை இணைத்த பின் வரும் **kalag** என்னும் சொல் உச்சாரண விரைவின் காரணமாகத் தமிழில் **kalag>alag-** அலகை எனத் தமிழில் வருகிறது. இவ்விரு சொற்களின் பொருள் 'பேய்' என்பதாகும். **kalag** என்பது சுமர் மொழியில் **alad** எனக் குறுகுகின்றது. **Alad** என்னும் குறிச் சொல்லைத் தம் நூலின் 280வது வடிவமாகக் கூறும் பார்டன் **(Bartan)** என்னும் சுமர் மொழிப் பேராசிரியர் தாம் 279 ஆகக் கூறிய **kalag** என்பதன் பிற்காலத்திய வடிவம் **(Apparently the sign is a late differentiation of No.279)** எனக் கூறுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

மேலும் முதற்குறைக்கு எடுத்துக்காட்டாக சுமர் மொழியிலிருந்தும் தமிழ் மொழியிலிருந்தும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குவாம். 'அன்' என்பது தமிழில் ஒன்றன் (ஒன்று+அன்), இரண்டன் (இரண்டு+அன்) முதலிய எண்ணுப் பெயர்களிற் பயின்று வருவது. இதற்கு இணையாகச் சுமர் மொழியில் **gan,tan,bani,an** என்னும் நான்கு சொற்கள் உள. இவ்வொற்றுமை [illegible] பழைய கல்வெட்டுக்களிற் பயின்று வருவது

gan என்பது. **gan>tan, gan>tan(i), gan>an:gan** என்பதன் முதன் மெய்யாகிய **g** கெட்டு **an** என வந்தது. இதுபோன்றே வலிமை, ஆற்றல் என்னும் பொருள்களைச் சுட்டும் முதற் குறையாகிய 'அள்' என்னும் சொல் தமிழ்ச் சொல்லாகும். இதன் இணைச் சொல்லாகத் தமிழில் வரும் ஏனைய சொற்கள் கல்(கலி),மல்,வல்,வள் என்பன கல் மிகப் பழைய சொல்லாகும் கல் >மல், கல்>வல், கல்>வள், வள் >அள் 'மல்லல் வளனே' (தொல்.சொல்.788) என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தையும் நோக்குக. அள் என்னும் முதற் குறையாகிய இச் சொல் கன்னடத்தில் **ala** எனவும் தெலுங்கில் **alavi** எனவும் வழங்கும்.

தமிழில் கூரன் எனவும் உச்சி எனவும் வழங்கப்படும் சொற்கள் 'நாய்' என்பதன் மறு பெயர்களாம். கூரன் என்பது மிகப் பழைய வழக்கு. சுமர் மொழியில் **kūran>ur** என மாறுகிறது. தமிழில் **kūran>ucci** என மாறுகிறது. இரண்டு மொழிகளிலும் முதற்குறை நிகழ்வதைக் காணலாம். **ur** என்னும் சுமர்மொழிக் குறிச் சொல்லின் கீழ்க் கொடுக்கப்பட்ட பொருள்களும் அவற்றைக் குறிக்கும் பிற சுமர்,தமிழ் வடிவங்களும் கீழே தரப்படுகின்றன.

		சுமர்	தமிழ்
all	**ur,**	**kur**	**kūr,uṟu**
hostility	**ur**	**kur,gur,sur**	**kūr**
fertility	**ur**	**kuŠ**	**koṟu**
hero	**ur**	**gud,gutu**	**kuḷi(yar)**
red	**ur**	**kurun**	**kuruti**
submission	**ur**	**gur**	

இவ்வெடுத்துக் காட்டுக்களிலிருந்து தெரிய வருவதாவது உர் என்ற சொல்லின் முதன் மெய்யாகிய ககரம் மிகப் பழைய காலத்திலேயே கெடத் தொடங்கி விட்டதென்பது. உகர உயிரின் முன் வரும் ககர மெய் கெட்டது போன்றே அகர உயிரின் முன் வரும் ககரமும் கெட்டது. 'செய்' என்பதன் பழைய வடிவம் **kag(k)** என்பது. இதனைத் திராவிட மொழிச் சொற்கள் விளக்கிக் காட்டும். **kag(k)** என்பதினின்று, பிறந்த சொல் **ak-** ஆக்கு என்பதாகும். இங்கு முதன் மெய்யாகிய ககரம் கெட்டு நிற்பதைக் காணலாம். இது

போன்றே சுமர் மொழியிலும் ‘செய்’ என்பதைச் சுட்ட **kak, gag, sag, ag, ak** என்னுஞ் சொற்கள் காணப்படுகின்றன. மொழி முதன் மெய்யாகிய ககரம் எவ்வாறு தேய்ந்து தேய்ந்து இறுதியில் கெட்டுவிட்டதென்பதை எடுத்துக்காட்டும்படி முறையான ஒலிகள் சுமர் மொழிச் சொற்களிற் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. **kak>gag>sag>ag** என்பன இம் மாறுதல்களைக் காட்டும். இதுபோலவே ‘நடு’ என்னும் பொருளைச் சுட்டும் ‘இடை’ என்னுந் தமிழ்ச் சொல்லுக்கு இணையாகச் சுமர் மொழியில் **kir,gir,sir,ir** என்னும் நான்கு சொற்கள் காணப்படுகின்றன. இவையும் ஒலித்தேய்வின் படிமுறை வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. **kir>gir>sir>ir** என மாறி ஈற்றில் மொழி முதற் ககரமெய் முற்றாகவே கெட்டு விடுகின்றது. இவற்றுடன் இடை என்பதைச் சுட்ட **gar** என்னுஞ் சொல்லும் காணப்படுகின்றது. இச் சொல் மூலவுயிராகிய அகரத்தைக் கொண்டுள்ளமையின் இது அடிப்படையான அசைச் சொல்லாகும். **gar** என்பது தமிழில் ‘நடு’ என ஒலி மாற்றம் பெறுகிறது. **g>n, gar** என்பதே **kir>gir>sir>ir** என மாற்றம் பெற்றது.

இங்ஙனம் தமிழில் உள்ள உயிர்முதற் சொற்களெல்லாம் மொழி முதல் வல்லின மெய்யாகிய ககரம் கெட்டு நின்ற சொற்கள் என்பது அழுத்தந்திருத்தமாக நிரூபிக்கக் கூடிய உண்மையென்பது ஈண்டு வலியுறுத்தப்பட்டுள்ளது. சுமர் மொழியிலுள்ள இருவகை வடிவங்களும் இக்கோட்பாட்டுக்குச் சான்றாக அமைகின்றன.

கடைக்குறை

தமிழிலுள்ள பண்டைய தனிநிலை அடிச் சொற்களின் மூன்றாவதாக நிற்கும் ஈற்றுமெய் கெட்டு நிற்றல் கடைக்குறை எனப்படும். அவையாவன:

கா, யா, சா, தா, நா, பா, மா, வா,

கை, தை, பை, மை, வை,

சீ, தீ, நீ, பீ, வீ, கோ, போ, மோ,

சே, மே, வே, கூ, தூ, நூ, மூ, பூ, பொ, நொ.

இவற்றுட் சில ஒன்றுக்கு மேற்பட்ட அடிச் சொல்லினின்று பிறந்தவை என்பது விளக்கப்படும்.

சுமர் மொழி வழக்கிலிருந்த கி.மு.4000-கி.மு.2000 ஆகிய கால எல்லையில் அம்மொழியில் வழக்குக்கு வந்த கடைக்குறை சொற்களெல்லாம் இலக்கணவாசிரியர்களாலும் ஆய்வாளர்களாலும் பட்டியல் செய்து விளக்கப்பட்டுள்ளன. அவற்றை முதலிற் காண்பது பொருத்தமாகும்.

எஸ்.என்.கிராமர் என்னும் சுமர் மொழிப் பேராசிரியர் பின்வருமாறு பட்டியல் செய்து காட்டுவர். [3]

(1) Dropping of the final sibilant (Š,s)

giŠ	**gi**		
guruŠ	**guru**	**ŠuŠ**	**Šu**
kuŠ	**ku**	**ŠuŠ**	**Šu**
suguŠ	**su g̃**	**ŠuŠ**	**Šu**
kaŠ	**ka**	**ŠeŠ**	**Še**
garaŠ	**gara**	**bis**	**bi**

(2) dropping of the final labial (b/p,m)

pab	**pa**	**urum**	**uru**
murub	**muru**	**sam**	**sa**
tub	**tu**	**gum**	**gu**
Šab	**Ša**	**dim**	**di**
dub	**du**	**gurum**	**gúr**
kilib	**kili**	**dilim**	**dili**
kiŠib	**kiŠi**	**gim**	**gi**
		kurum	**kuru**
mim	**mi**	**ganam**	**gana**

(3) dropping of the final liquid (l,r,n)

gil	**gi**	**gal**	**gà**
kul	**ku**	**lul**	**lu**

til	ti	sal	sá
bil	bi	dul	du
mal	mà	lal	la
lal	la	tun	tu
bul	bu	gún	gú
bur	bu	kan	ká
bar	ba	min	mi
Šar	Ša	gurun	guru
sur	su	gin	ge
gar	ga	ten	te
tur	tu	gurun	gur
Šar	Ša	nin	ni
gàr	ga	zagin	zagi
sun	su	dùn	du
unkin	unki	tùn	tu

(4) dropping of the final guttural:

su g̃	su	lag̃	la
dug̃	du	ug̃	u
nita g̃	nita	uta g̃	utu

இப்பட்டியலில் தனிநிலையடிச் சொற்களும் இணைநிலையடிச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் வகைக்கொன்றாக ஒவ்வோர் எடுத்துக்காட்டினை விளக்குவாம்.

aŠ, ka:கள் **strong drink, liquor** எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. மொழியிறுதி Š தமிழிலுள்ள ள்,ழ் என்பனவற்றின் தேய்ந்து போன ஒலி என்பதை **piŠ** பிள், **split open, kuŠ-** கொழு **be fat** என்ற சொற்களைக் கொண்டு அறியலாம். உண்மையில் இது

ka-lal என்னும் இணை நிலையடிச் சொல்லின் குறுக்கமாகும். **lal** என்பது தேன் **-honey** எனச் சுமர்மொழியிற் பொருள்படும். தேனும் ஒருவகை மதுவே. கலல் என்பது கள்ளு > கள் எனக் குறுகிற்று. தமிழில் இது **ka** கா எனக் கடைக்குறையாக வரவில்லை. அக்காலத்திய பேச்சு மொழியில் குறுகி வந்திருந்தால் அது அழிந்திருக்கும்.

ganam, gana: சாணம் **cow dung. g>c:** சுமர் மொழியிற் **gana** எனக் குறுகி நிற்பது போன்று பேச்சுத் தமிழிற் சாணி **cani** எனக் குறுகி நிற்கின்றது.

kul, ku: கூலம். தானியம்,விதை **corn, seed** என்பன இதன் பொருள். தமிழ் மொழியில் மிகப் பழைய இணைநிலையடிச் சொல் வடிவம் **kū-lag > kūlam.** கூலம் காணப்படுகிறது.

sug̃ ,su: சுறவம்,சுறவு,சுற,சுறா.**goat-fish,shark.** இதற்கு மாற்று வடிவமாகக் கல்வெட்டில் **sug̃ ur** எனவும் காணப்படுகிறது.

இனித் தமிழ் மொழியிலுள்ள கடைக்குறைச் சொற்களின் பழைய வடிவங்களை விளக்குவாம். இப்பழைய வடிவங்கள் ஏனைய திராவிட மொழிகளிலிருந்தும் சுமர் மொழியிலிருந்தும் காட்டப்படுகின்றன. இவற்றிற் காணப்படாத போது புனரமைக்கப்பட்ட சொல் * எனக் குறியிட்டுக் காட்டப்படுகின்றது. சில சொற்களின் பழைய வடிவம் தமிழிலேயே காணப்படுகின்றது.

கா < **kār,gār:** காவல் செய், பாதுகா என்ற பொருள்களை உணர்த்துவது. மொழியிறுதி ரகர மெய் கெட்டு நின்றது.

கா < **kān:** கான்;காடு,சோலை என்னும் பொருள்களில் வரும்.

கா < **kāg, kāv,** காவு:தோளில் வைத்துப் பொருள்களைச் சுமக்கும் காவுதடியைச் சுட்டும்.

யா < **gar,** கட்டு. யாத்தல்,யாப்பு என்னுஞ் சொற்களின் அடியாய் நிற்கும். கட்டுதல், ஒன்றாக இணைத்தல், பொருத்துதல் என்னும் பொருள்களைச் சுட்டி வரும். ககர மெய்யொலியின் நலிவே யகர ஒலி என்பது முன்னர் காட்டப்பட்டது. **gar 'who'** யார்? **gan 'I'** யான் என்னுஞ் சொற்களை நோக்குக. தமிழில் ‘யா’ என்பது மேலும் குறுகி ‘ஆ’ எனவும் வருவதை இலக்கியங்கள் காட்டும்.

சா < **kag, cag, cav, cā** எனக் குறுகி நின்றது. சா - இறத்தல் என்னும் பொருளது. சில திராவிட மொழிகள் ககர முதன் மொழியாகவே காணப்படுகின்றன.

தா, தரு <**tag̃ ,dag̃** என்னும் சுமர் மொழிச் சொற்கள் மூலவடிவங்கள். **tag**>தரு வென முதலிற் குறுகிப் பின்னர் தா என வந்தது.

நா <**nag:** நாக்கு:**tongue** நாவினாற் செய்யப்படும் தொழில் **nag** எனச் சுமர் மொழியிலும் **nakku 'sip'** எனத் தமிழிலும் வருகின்றது. நாக்கு என்பது 'நா'வின் மறுபெயருமாகும்.

பா < **pār:** பாண், பாட்டு என்னுஞ் சொற்களின் அடியாய் நிற்பது. பாட்டு என்பது 'பரந்து செல்லும் ஓசை' எனப் பொருள்படும். ரகர மெய் ணகர மெய்யாக மாற்றம் பெற்று பார் > பாண் என வந்து பாடல் என்னும் பொருளைத் தந்தது. **bar 'ancient'** என்னும் சுமர் மொழிச் சொல் 'பண்டு' எனவும் **g̃ar.kar 'to see'** என்னுஞ் சுமர் மொழிச் சொற்கள் 'காண்' எனவும் தமிழில் வருவது காண்க. சொல்லின் ஈற்று ரகர மெய் கெட்டுப் 'பா' என வந்து **du** என்னும் சொல்லுடன் இணைக்கப்பட்டு **pā-du**>பாட்டு **'song'** என வந்தது. **li-du** என்னுஞ் சுமர் மொழிச் சொல் **'song, hymn, melody'** என்ற பொருள்களிலும் **ka-du**, தரது என்பது **'instructions'** என்ற பொருளிலும் வருவது காண்க. **pār>pā+du**= பாடு **'sing'** எனவும் வரும்.

மா < **māg: animal** .கொலாமி மொழியில் **mag** என்றேயிருக்கிறது.

மா < **māg,māv: mango.** மாமரம்

மா <**māl <mār<kār: black:** கறுப்பு

மா < **mag:** 'பெரிய' வடமொழிச் சொல் எனக் கருதப்பட்டு வந்த 'மகா' என்பதன் மூலமும் இதுவே. சுமர் மொழியில் **mag** என்பது பெரிய, உயரமான, அகன்ற, வலிய எனப்படும் பல பொருள்களில் வரும் சொல்.

வா, வரு <**gá-nu 'come'**

ga-nu என்னும் இச்சுமர் மொழிச் சொல்லின் முன்னைய வடிவம் **ga-ru** என்பதாகும். **ga-ru>va-ru** 'வரு' என **g>v** ஒலிமாற்றம் பெற்றது. வருனிவர்னிவா எனக் குறுகி வந்தது.

கை, தை, பை, மை, வை என வரும் ஐகார ஈற்றுச் சொற்கள்

உண்மையில் கய் (kay),தய் (tay), பய்(pay), மய்(may), வய்(vay) என்பனவே. இவற்றைச் சந்திக்கரம் அல்லது கூட்டெழுத்தாக எழுதும் முறை தொல்காப்பியர் காலத்துக்குச் சிறிது முன்னதாகத் தொடங்கியிருக்க வேண்டும். இக்காரணத்தால் இவற்றைக் கடைக்குறைச் சொற்கள் எனக் கூறுவது தவறு. இவை கடை மெலிவுச் சொற்களாகும். மொழியிறுதி g அல்லது T மெலிவடைந்து y என நின்ற சொற்களே இவை.

கய்(கை): < kag:கோட்டா,கன்னடம் முதலிய மொழிகளில் kay என்றும் குர் மொழியில் <u>kh</u>ekkha என்றும் மோல்ரா மொழியில் qeqe என்றும் எழுதப்பட்டு வரும் சொற்கள் kag என்பதன் மெலிவும் (g>y), அழுத்தமும் (g>kkh) பெற்றவையாகும். சுமர் மொழியில் kat என்னும் gad என்றும் வரும். இவையும் g கர மெய் t,d ஆக மாறியதாகும்.

கய்(கை)<kag, கைப்ப-கையால் அலங்கரித்தல், உடுத்தல், செய்தல்.

கய்(கை)<kag,kaya, கயர்த்தல் என்னும் பொருளது . ka, kay <u>Go</u>.kehke.

தய் (தை) <tag, teg- தொடுத்தல்,நூற்றல்,தைத்தல் என்னும் பொருளது. சுமர் மொழியிலும் தோடா மொழியிலும் teg என்ற வடிவம் காணப்படுகிறது. tag>teg.

பய்(பை)<bar,உறை,கையுறை,பெட்டி என்னும் பொருள்களில் வரும். சுமர் மொழி வடிவம் bir என்பதாகும்.bar>bir.

மய்(மை)<mar<kar,கருமை என்பது மூலப்பொருள். பூசும் மை, எழுதும் மை என்பன கருநிறமுடைமையின் அவற்றின் பெயருமாகும்.

மய்(மை)<mar:மலடு,கருமை என்னும் பொருள்களில் வரும்.

வய்(வை)<bar<gar: இடுதல்,போடுதல் என்னும் பொருள்களைச் சுட்டும். கன்டை மொழியில் bay என வரும். மூலச் சொல் சுமர் மொழியில் இடுதல் என்னும் பொருளில் வரும் gar என்பது. இது இடு,இரு என்னும் வடிவங்களையும் தமிழிற் கொள்ளும். ga>i என்பது ஒரு அடிப்படையான ஒலிமாற்றச் சித்தாந்தமாகும்.

இனி சே, மே, வே, சீ, தீ, நீ, பீ, வீ என்னுங் கடைக் குறைச் சொற்களை எடுத்துக் கொள்வோம். தமிழில் பின்னுயிர்களாகிய அ,ஆ(back vowels) முன்னுயிர்களாகிய இ,ஈ,எ,ஏ (front vowels) ஆக மாறுகின்றன. இவ்வுயிர் மாற்றத்தின் விளைவாக வேறு பல ஒலி மாற்றங்களும் நிகழ்கின்றன. அவற்றின் விளைவே இச்சொற்கள்.

சே<cem<gam. சிவப்பு நிறம். **gam** என்பது சிவப்பு நிறத்தைச் சுட்டும் சுமர் மொழிச் சொல். **g>c** ஆக மாறும் போது a>e ஆக மாறுகிறது. பின் அது 'ஏ' ஆக நீண்டு சே என நிற்கின்றது.

சே< **g̃ar,** எருத்து மாடு. சே உழுதது என்னும் வசனத்தைப் பார்க்குக. **g̃ar** என்னும் சுமர்மொழி காரி என்னுந் தமிழ்ச் சொல்லின் இணைச் சொல்லாகும். **g̃ a>e,e** ஆக மாறும் போர் **ar** என்பது எரு(த்து), ஏறு என மாறிற்று. **g̃ >c** ஆகும் போது சொல்லிறுதி ரகர மெய் கெட 'சே' என ஆயிற்று.

சே<gar: கட்(டில்), படுக்கை, சேர்க்கை என்னும் பொருள்களைச் சுட்டும். இது சுமர் மொழியில் நட் **(nad<gar)** எனவும் வருகின்றது. **gar>gir** என மாறி கிட என்ற சொல்லாயிற்று. கிடக்கை -படுக்கை, கட்டில். ப்திகி என்பது ஈறு கெட்டு **gi>ce** என ஆயிற்று.

மே<மேல், மேலுள்ளது, உயரமானது என்னும் பொருள்களில் வரும். இது **gar>mar>mir** என வந்து ஈற்று ரகர மெய் கெடாத நிலையில் மிசை எனவும் கெட்ட நிலையில் மீ,மே எனவும் வரும். மிர்>மேல் எனவும் வரும்.

வே<bar 'burning of fire' என்னும் சுமர் மொழிச் சொல்லின் விகாரமாகும். இது அம்மொழியில் **bar>bil,bi**என ஆகின்றது. **bil** என்பது தமிழில் விளக்கு என்றும் **bi** என்பது வே என்றும் ஆகின்றது. **bar** என்பதன் மூலச் சொல் **g̃ad,gar** எனச் சுமர் மொழியில் உள்ளன. இது தமிழில் கனல் என வரும்.

சீ <சீழ். புண்ணிலிருந்து வடியும் திரவம். இது கோட்டா மொழியில் **kiv** எனவும் கன்னட மொழியில் **ki,kivu,kimu** எனவும் பிராகுவி மொழியில் **kish** எனவும் பெயர் பெறும்.

தீ <de:fire, நெருப்பு. இதற்கு இணையான சொற்கள் **Ta.kiccu,**

ko.tic, To.tit. சுமர் மொழிச் சொல் de என்பதாகும். இவற்றின் வேர்ச்சொல் ĝad 'brightness,fire' என்னும் பொருள்களில் வரும் சுமர் மொழிச் சொல்லாகும். ĝad>gid,gi č,ti č எனவும் மாற்றம் பெற்றுத் தமிழில் kiccu என்றும் கோட்டா மொழியில் tic எனவும் வந்தது.

தீ<kar:bad,evil: கெட்ட,கேடு kar>ketta>tettu>tī கோண்டா மொழியில் karitāna என உள்ள சொல்லின் அடி kar. இது ketta,kētu என பல திராவிட மொழிகளில் மாற்றம் பெற்று துளு மொழியில் keṭṭa,heṭṭu,tettu என்று வருகிறது.

நீ<nig:abandan,leave,seperate,reject: நீங்கு,நீக்கு என்பன nig என்னும் அடியினின்றும் பிறந்தவை. ஈறு கெட்ட போது nig>nī என வருகிறது.

நீ< ĝi< ĝir< ĝar: நீ என்பது முன்னிலை ஒருமை இடப் பெயர். சுமர் மொழி 'நீ' என்பதன் வரன்முறையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அம்மொழியில் ĝe,ĝi என்பன வற்றிற்கு 'this' 'இது' என்ற பொருளும் ne,ni என்பனவற்றிற்கு this,you,thou 'இது',நீ,நீர்' என்ற பொருளும் உண்டு. ni from ngi என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.[4] ĝi என்பது ĝar என்பதன் விகாரம் என்பது யாவரும் அறிந்ததே ĝar> ir என மாறிய பின் ஈற்று r கெட்டது. முன்னிலைச் சுட்டுப் பெயரும் முன்னிலை இடப் பெயரும் ĝi என்னும் ஒரே மூலத்தினின்றும் பிறந்த உண்மை இங்கு தெளிவாகிறது.

பீ<pig. excrement: மலம்,அழுக்கு. kur.pik,maer:piku Te.piyi எனவே வேர்ச் சொல் pig என்பதும் கடை குறைந்து pi என வந்ததென்பதும் புலனாகும்.

வீ<vig,perish: கெடுதல்,அழிதல் Ta.vikku, ka.bigu Te.vigu. ஈற்று மெய் கெட்டு நின்றது. முதன் மெய் கெட்டு நின்ற போது ika, இக-விட்டு நீங்குதல் என்ற பொருளில் வரும்.

இனி கூ,தூ,நூ,பூ,மூ என்ற சொற்களையும் கோ, போ, மோ, பொ, நொ என்ற குறைநிலையடிச் சொற்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றுள் ஒ,ஓ இறுதிச் சொற்கள் யாவும் உ,ஊ மாற்றம் பெற்ற சொற்கள் என்பது முன்னர்க் காட்டினோம். தமிழில் ஒ,ஓ என்னும் உயிரொலிகள் பிற்காலத்தில் தோன்றியவையாகும்.

கூ<kūg: இச் சொல் கூவு எனவும் வரும். பெரும்பாலான திராவிட மொழிகளில் kug என்னும் அடி பாதுகாக்கப்பட்டுள்ளது. Te.kuka Nk.kug கூப்பிடுதல், அழைத்தல், கூவுதல் என்னும் பொருள்களை இச் சொல் சுட்டும்.

தூ<kuŠ, ǵug,gug என்னும் மூன்று சொற்களும் மனிதனினதும் விலங்குகளினதும் உடல்,தசை,தோல் ஆகியவற்றைச் சுட்டி வரும் எனச் சுமர் மொழியில் விளக்கங் கூறப்பட்டுள்ளது. அம்மொழியில் uzu என்ற சொல்லும் தசையைச் சுட்டும். kuŠ>uzu. kuŠ>sun எனவும் சுமர் மொழியில் வரும். sun> ஊன்,உள எனத் தமிழில் முதற்குறையாயும் கடைக் குறையாயும் வரும். gug என்பது தமிழில் 'தூவு' என வரும். தூவு-தூ 'தசை' நூ'nu' என்பதும் தசையைச் சுட்டும் சுமர் மொழியாகும்.

தூ<dug<gug<kuk.சுமர் மொழியில் இம்மூன்று சொற்களும், தூய,பரிசுத்தமான,புதிய,நல்ல என்னும் பொருள்களிற் பயின்று வரும். தமிழில் துய்ய,தூய,தூ என்ற சொற்கள் இதே பொருள்களில் வரும்.

தூ <தூவி <tug: இறகு என்னும் பொருளைச் சுட்டி வரும். g>v.

நூ <நூவு <nug: sesamum: எள் Go.nung.

பூ <pūv <pūg:பூ,மலர்.

kuwi:pūnga;puyu:kui:pūju.

மூ < mūr > mutu, mutir: to become old: முதுமையடைதல். mūr>ūr: to become old முதுமையடைதல். ரகர மெய் தகரமாக மாறுவதை kur>kutirai என்பதிலிருந்து அறிக.

மூ < mur. மூன்று. ka.muru Tu.muji Te.mudu Br.musi. சுமர் மொழியில் muŠ என்பதே மூன்றைக் குறிக்கும் சொல். மொழியீற்று Tமெய் பல்வேறு ஒலி மாற்றங்களைப் பெற்றுள்ளதை இது காட்டுகின்றது. r ஒலி கடைக்குறையாய் மூ என வந்தது.

பொ < bur; புரை,புழை.cavity,hole. மொழியீற்று ரகர மெய் கெட்டு u>o ஆயிற்று. பொ என்பது ஓட்டையாக்கல், துளையிடுதல் எனவும் பெயர்ச் சொல்லாக துளை, புரை, புழை எனவும் வரும். பொய்,பொகு என்பன இதே பொருளில் bur என்பதினின்று பிறந்த சொற்களாகும்.

நொ <nūr>நுண். சிறிய,சிறியது என்பது இதன் பொருள். மலையாளம் கன்னடம் தெலுங்கு மொழிகளில் nur>nusi ஆகவரும். பிற்காலத்தில் மொழியீற்று T கெட nu>no என உகரம் ஒகரமாயிற்று.

கோ < கோர் < kūr: ஒன்றாகத் தொடுத்தல் நுழைத்தல் என்னும் பொருளது. kūr>nūl, நூல் என்றும் kur>nuṛai, நுழை என்றும் ககரம் நகரமாய் ஒலி மாற்றம் பெறும். கட்பா மொழியில் இச்சொல் kuruṭ என நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கோ <கோன் < kun: மன்னன்,தலைவன் என்னும் பொருளது. சுமர் மொழியில் ku,gu,gun என்னும் மூன்று சொற்களும் இப்பொருளை உணர்த்துவன.

போ <போகு <pug: போதல்,செல்லுதல்,நுழைதல் என்னும் பொருளது.

நோ <நோகு <nug: to feel pain. ache, suffer என்னும் பொருள்களை உணர்த்தி வரும். தமிழில் வரும் நோய், நோவு, நொசி என்ற சொற்களும் n=0 ஆகி உயங்கு,உயவு உயா என வரும் சொற்களும் nug என்னும் அடிச் சொல்லினின்றும் பிறந்தன. குர் மொழியில் nunjnā மோல்ரா மொழியில் nunje எனவும் இது வரும்.

மோ <முக <mug: சுமத்தல், தாங்குதல் என்னும் பொருளது. mug̃ என்னும் சுமர் மொழிச் சொல் முடி, உச்சி, தலை எனப் பெயர்ச் சொல்லாயும் அவற்றில் தாங்குவனவற்றைக் குறிக்கும் போது வினைச் சொல்லாயும் வரும்.

முதற்குறையும் கடைக்குறையுமாய சொற்கள்

சொல்லின் முதலில் நிற்கும் மெய்யும் ஈற்றில் நிற்கும் மெய்யும் கெட நடுவில் நிற்கும் உயிர் விகாரமின்றியும் விகாரமாயும் வருவன இவ்வகுப்புள் அடங்கும். இத்தகைய சொற்களின் எண்ணிக்கை தமிழில் மிகக் குறைவாகவும் சுமர் மொழியில் மிக அதிகமாகவும் உள்ளன. 'அ' என்னும் தனி எழுத்தே சொல்லாக நின்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பொருள்களைச் சுமர் மொழியில் உணர்த்தி வரும். இது போன்றே அம் மொழியில் 'உ' என்பதும் உணர்த்தும். அகரத்தை மட்டும் இங்கு எடுத்துக்காட்டாக விளக்குவாம்.

a, ĝar:	**not**	'இல்லை'
a, ĝar:	**water**	'நீர்'
a,ĝ ar,kar:	**shining**	'ஒளி வீசு'
a,ĝar:	**beget**	'ஈன்றெடு,பெறு'
a,ĝ ar, gar;	**bind, tie**	'கட்டு'
a,ĝar, gar:	**throw down**	'எறி'
a,ĝar:	**lament**	'அழு,வருந்து'
a,ĝar:	**grow luxuriantly**	'செழித்து வளர்'
a,ĝat, gad:	**scepter**	'செங்கோல்'
a,ĝa,gar:	**rest**	'ஆறுதல் எடு'
a,ĝa, gar:	**give, present**	'கொடு'
a, al, gal:	**be high**	'உயரப் போ'
a,e, gar:	**side**	'பக்கம்'
a, gal:	**mankind**	'மனித இனம்'
a, ga,gan,	**I**	'யான்'

இங்ஙனம் சுமர் மொழியில் எண்ணிறந்த சொற்கள் உருக்குலைந்து ஓரெழுத்து மொழியாக மாறியபின் அம்மொழி பொருளுணர்த்தும் ஆற்றலை இழந்து விட்டது. சொற்கள் படிமுறையாக எவ்வாறு தேய்ந்து வந்தன என்பதை **gar>ga>a: test gal>al>a: be high** என்னும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் அறியலாம். இனித் தமிழிலுள்ள முதற் குறையும் கடைக்குறையுமாய சொற்களைக் காண்போம்.

அ< **gar, that, that one: gar** என்பதன் முதன் மெய் கெட **ar>atu** எனவும் தமிழில் வரும். சுமர் மொழியில் வரும் பிற சொற்கள் **ka,ba** என்பன. **gar>ka>ba** என வரும். பிராகுவி மொழியில் **kā,hē** என்பன **that, that one** எனச் சுட்டி வரும். இக் கருத்தை அறியாதார் பிராகுவி மொழியில் **hē** என்பது தூர இடத்தைச் சுட்டும் ஏ என்பதன் விகாரம் என்பர்.[5] உண்மை அதுவன்று. **ĝar>** அ எனத் தமிழிலும்**ĝ ar>kā>hē>e** எனப் பிராகுவி

மொழியிலும் வருவதே உண்மையாகும். சுமர் மொழியில் gar,e,a என்பன பக்கம், அயல் என்ற பொருள்களைச் சுட்டுதல் காண்க. ḡar>kā>ā எனச் சுட்டு நெடிலாக வருதலும் குறிப்பிடத்தக்கது. சில திராவிட மொழிகளில் 'ஆ' என்பதே சுட்டு. குறில், நெடில் என வகுக்கப்படாத காலத்தில் ḡar என எருத்துமாட்டைக் குறிக்கும் சுமர் மொழிச் சொல் kharas எனக் குறிலாகப் பிராகுவி மொழியிலும் gāro,kāri என நெடிலாக முறையே குயி,தமிழ் மொழிகளிலும் வருதல் காண்க.

ஆ< ḡar 'to come to existence' தோன்றுதல் 'ஆகு' எனவும் இது வரும்.

ஆ< ḡar 'to make, create' 'ஆக்கு'

ஆ<yā< ḡar, ḡar,kad 'கட்டுதல்' பிணைத்தல் என்னும் பொருள்களில் வரும். ḡar>gā என்பதே தமிழில் யா என வந்து பின் யகர மெய் கெட 'ஆ' என நிற்கின்றது. யாப்பு, யாத்தல் என்னுஞ் சொற்கள் பெரு வழக்கு.

இ<ki,gi,ge,ne,ni,Ši<gar'இது' இவற்றுள் Ši என்பதற்கு this,that ஆகிய இரு பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளமை கொண்டு ḡar ஆகிய ஒரே மூலத்திலிருந்து கிளைத்தவையே இவை என்பது பெறப்படும்.

ஈ <nim:fly,bee: இலையான்,வண்டு. கொலாமி,ஹநகி ஆகிய மொழிகளில் இச்சொல் ninga எனவும் தெலுங்கில் iga எனவும் காணப்படுகிறது. முதற்குறை கடைக்குறையாய்த் தமிழில் வரும்.

ஈ ≤sig: எளியோர்க்குக் கொடுத்தலைச் சுட்டும். கன்னடத்தில் i,isu எனவும் கொலாமி, நைகி, பர்சி, கட்பா ஆகிய மொழிகளில் si- எனவும் குவி மொழியில் hinai எனவும் காணப்படுகிறது. (DED2138). sig என்பதில் மொழி முதல் s கெட ig>iku எனவும் கொடுத்தலைச் சுட்டி வரும்.

ஈ,ஈர் <gir<gar: இறகு,சிறகு,சிறை 'wing'. gar > gir > ciṟ > iṟ > i எனப் படிமுறையில் தேய்ந்து காணப்படும்.

உ<ug(u): over,above என்னும் பொருள்களைச் சுட்டும் ugu என்னும் சொல்லினின்று பிறந்ததாகும். இதன் தமிழ் வடிவம் 'ஊங்கு' yonder. கிட்டிய பொருளுக்கும் மிகத் தூரத்திலுள்ள

பொருளுக்கும் இடையிலான பொருளைச் சுட்டி வரும் முதலும் கடையும் குறையாகிய சொல்லாகும். சுமர் மொழியில் பிற்காலத்தில் **tul,ul** என ஒலிமாற்றம் பெற்று **'that','yonder'** என்னும் பொருளில் வரும்.

ஊ <தூ,தசை,இறைச்சி,உடலம் என்ற பொருள்களை உணர்த்தி வரும். ஊன் என்பதும் அதே பொருளது. சுமர் மொழியில் வரும் **kuŠ>sun>su** என்பன தசையை உணர்த்தும் சொற்கள். தமிழில் இது **kuŠ>sun>** ஊன் >ஊ எனப் படி முறையே தேய்ந்து வருகிறது.

ஏ<**g̃a<g̃an:increase, abundance:** அதிகம்,நிறைவு என்னும் பொருள்களில் வரும். **g̃ a,ga,ka** என்பன **i,ī,e,ē** ஆக மாறுவன என்னும் வாய்ப்பாடு முன்னர் விளக்கப்பட்டது.

ஒ<**ur,gur: appropriate,agree,be suited, resemble.** ஒன்றுதல், ஒத்தல் என்னும் பொருள்களைச் சுட்டி வரும்.

உ>ஒ ஆதல் பிற்கால வழக்காகும். சுமர் மொழியில் ஒகர,ஓகார ஒலிகள் இல்லை.

ஓ<**kuŠ,kud:** நீரோட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக இடப்படும் பலகையை 'ஓ' என்னும் இச்சொல் குறிக்கும். மலையாள மொழியில் **ōku,ōvu** என்பன வெள்ளக் கால்வாயையும் **ōtti** என்பது கால்வாய் மூலம் நீர் திறந்து விடப்படுவதையும் சுட்டும். மூலச் சொற்களாகிய **kuŠ,kud** என்பன தடுத்தலையும்,தடை செய்தலையும் மட்டும் சுட்டும்.

இங்ஙனம் முதற்குறையும் கடைக்குறையுமாய் உயிராகிய ஓரெழுத்து மட்டில் தமிழில் நின்று வழங்கும் சொற்கள் மிகச் சிலவாகும்.

குறிப்புக்கள்

1.Winfred P.Lehman-Proto-Indo European Phonology, Austin, 1955. P.17.

2.George A.Baston-The Origin and Development of Babylonian Writing, Leipzig, 1913.p.145.

3.S.N.Kramer-'Studies in Sumarian Phonetics, Archiv Orientalni, Vol.VIII.No.1, May 1936.p.19-20.

4.C.J.Ball-Chinese and Sumerian, Oxford University Press, 1913. A Sign List. Fig.65,51.

5.Sir Denys Bray- The Brahui Language. Part III Etymological Vocabulary, Delhi. 1934. p.134.

5. தமிழில் உயிர் முதற் சொற்களின் பிறப்பு நெறி

தமிழில் உள்ள உயிர் முதற் சொற்களெல்லாம் பிறப்புக் காலத்தில் மெய்+உயிர்+மெய் (CvC)ச் சொற்களாகவே தோற்றமெடுத்தனவென்றும் காலப்போக்கில் சொன் முதன் மெய் கெட உயிர்+மெய்ச் சொற்களாக மாறின என்றும் முன்னர் கூறப்பட்டது. எடுத்துக்காட்டாக தமிழில் உள்ள அளி 'பாதுகா' என்னுஞ் சொல்லை எடுத்துக் கொள்ளலாம். இப்பொருளில் வரும் பிற தமிழ்ச் சொல் காப்பு,காவல் என்பனவற்றின் அடிச் சொல்லான 'கா' என்பது. சுமர் மொழியில் இப்பொருளைச் சுட்டுஞ் சொற்கள் gar,gar,gal,al என்பன. இவற்றுள் al என்பதே தமிழில் உள்ள அளி என்பதன் நேர்ச் சொல்லாகும். வரலாற்று முறையில் ஆராயின் gar>gar>gal>al எனச் சொற்கள் படிமுறை வளர்ச்சியில் மாற்றம் பெற்று வரும். இவற்றுள் g̃ar என்பது சொற்கள் தோன்றிய ஆரம்ப கால கட்டத்தில் தோன்றிய சொல் என்பது அறிஞர் கருத்து. g̃ar என்பது 361 ஆம் எண் இடப்பட்ட சொற்குறி. பண்பை உணர்த்தும் சொற்குறிகள் தோன்றுவதற்கு மிக முற்பட்ட காலத்தில் திடப் பொருள்களைக் குறிக்கும் இது (சொற்குறி) தோன்றிற்று என்று பேராசிரியர் பர்ட்டன் (Barton) கூறுவர். g̃ar என்னும் இதே சொற்குறி சுட்டும் பிறிதொரு பொருள் அ,அது என்னும் வடிவங்களிற்றோன்றும் சுட்டாகும். gar,ka,ba என்பன சுமர் மொழிச் சுட்டுக்களாகும். g̃ar>ka எனவும் பிற்காலத்தில் ka>ba

எனவும் மாற்றம் பெற்று வந்தன. ka என்பது ககர மெய் கெட்டுத் தமிழில் அ என வந்தது. திராவிட மொழிகளில் ஒன்றான பிராகுவி மொழியில் ka என்பதே அகரச் சுட்டின் இடத்தை வகிக்கின்றது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் தமிழில் வரும் அ,இ,உ,எ ஆகிய குறிலும் நெடிலுமாய சொற்கள் மிகப் பழைய காலத்தில் ககர மெய் முதற் சொற்களாகவே இருந்தன என்பது பெறப்படும். இவ்விதியின்படியே 'அளி' என்ற சொல்லின் முன்னோடியான கா என்பதும் கார் (ĝar) இன் மாற்றம் பெற்ற குறைச் சொல்லாகும்.

இனி உயிர்முதற் சொற்களும் அவற்றின் பிறப்பு முன்னோடிகளான சுமர் மொழிச் சொற்களும் பட்டியல் செய்து தரப்பட்டுள்ளன. முதலிற் கூறப்படுவது தமிழ்ச் சொல். அதனருகே சுமர் மொழிச் சொல்லும் அதற்குக் கொடுக்கப்பட்ட பொருளும் ஆங்கிலத்திற் கொடுக்கப் பட்டுள்ளன. இங்குக் கூறப்படும் தமிழ்ச் சொற்கள் பிற்காலத்திய தமிழிலக்கியங்களிற் காணப்படுபவை.

எனவே அவை தோற்றக்காலத்துச் சொற்களினின்றும் சிறிது ஒலிமாற்றம் பெற்ற சொற்களாக அமையலாம். எடுத்துக்காட்டாக Šag> அகணி என்ற சொற்களை நோக்குக. Šag என்பது முதன் மெய் கெட்ட நிலையில் ag எனவே வரும். இங்கு வரும் அகணி அதனினின்றும் வளர்ச்சி பெற்ற வடிவமாகும்.

அ :	**ĝar,ka,ba:**	**that, that one.**
அ,அது :	**ge, gid, a, ak.**	**Sign of the genetive case.**
அகடு:	**Šag.**	**interior.**
அகடு:	**Šag, Ša-gal:**	**belly, stomach, interior.**
அகணி:	**Šag:**	**inside,interior.**
அகம்:	**Šag, zag,**	**in, inside.**
அகம்,சகம்:	**Šag.**	**earth.**
அகல்:	**ĝar.**	**earth.**
அகல்,அகழி:	**sakan, Šakar:**	**earthen vessel.**
அகல்,ஆல்:	**ĝar:**	**a large jug.**

அகல்,	**dagul:**	**be wide, extensive.**
அகலுள்:	**sag.**	**greatness.**
அகலுள்	**sag:**	**land, earth.**
அகவு:	**ag,makas:**	**call,cry,summon.**
அகளம்:	**Šagan.**	**fat jar.**
அகி,நாகம்:	**nag**	**lead.**
அகை:	**sag:**	**to sprout.**
அகை:	**sag.**	**behigh, to rise.**
அகை:	**g̃sa g̃za :**	**to burn, roast.**
அகை:	**Ša-gig:**	**to ache, suffer.**
அக்கிரம்:	**sag:**	**tip, that which is first.**
அக்கிரம்:	**Šag-kal:**	**preeminent.**
அங்காடி:	**dam-kar:**	**merchant, market.**
அசை:	**g̃ar**	**fasten.**
அசை:	**gaŠ**	**fether,harness.**
அடி:	**gar**	**foundation.**
அடு:	**g̃ar,gar,kad:**	**bind,tie.**
அடு:	**gar:**	**bestow.**
அடுக்கு:	**gar**	**heap up**
அடை:	**kar,**	**receive,get.**
அடை	**gar,mar(**மறை**)**	**enclose,shut in.**
அடை	**gar:**	**cake, food.**
அடை:	**g̃ar,gar:**	**bind,tie.**
அட்டு:	**gar:**	**place,put.**
அணை,கட்டு:**kar:**		**dam,dyke.**

அணை,அணவு,அணுகு,	gana:	approach.
அணை,அண்டு,	gana:	supporter.
அதக்கு,அரை,	gar:	to grind.
அது.	g̃ar:	that one.
அந்து.	kas:	a destructive insect.
அந்தகன்,	nam-tar:	fate,destiny.
அமை,	gar:	be settled.
அமைப்பு,	nam:	fate.
அம்பலி,கஞ்சி:	kam,	soup.
அம்மே:	am-me,geme,gem:	handmaid.
அயர்,	aga,gag:	to do, perform.
அரசன்:	dara, Šar:	king.
அரண்:	Qar:	moat,wall.
அரி,	g̃ar:	ring.
அரி,நறவு,	gaŠ:	liquor.
அரி	gan(<gar)	harvest.
அரி,	na-rig̃:	to purify (lit. na-diri :evil,rig̃ :to remove)
அருகு.	gar:	side,nearness.
அருகு	g̃ar:	boundary,limit.
அருகு,	kaŠ:	disappear.
அருள்,	g̃ar:	command.
அருள்,	gar:	bestow.
அரை,	gar:	crush.
அரை,	gar:	to grind.

அரை,	maŠ:	half.
அலகை,	kalag:	demon.
அலம்பு,	gar:	wash.
அலர்,மலர்,	gal:	open.
அலவு,	gar:	sprinkle.
அலை,	g̃al,	go,wander.
அல்,	gal:	I
அல்கு,	gal:	to remain.
அல்குல்,	gal-la:	vulva.
அவம் நவை,	g̃ab:	evil,wicked.
அவி நவை,	g̃ab:	destiny,kill.
அவி,அவிழ்,	g̃ab:	food.
அவி,அவை,சமை,	g̃ab,	to boil,cook.
அவிர்,	nab:	bright.
அவிழ்,	gab:	to become loose.
அழகு,எழில்,	kalag,gal:	beautiful.
அழல்,	gana:	inflame.
அழல்,	gar,kar:	brightness.
அழி:	gal:	destroy.
அழி அடு,	gaŠ:	destroy.
அழு,	tal,tar:	howl,shout,cry.
அழுக்கு ,	gar:	excrement.
அழை,	kaŠ:	to say,speak.
அளி,	g̃ar,gar,gal,al,	guard,ptotect.
அறு,நறுக்கு,	gar:	break,ruin.

அறு,	gar:	settle,determine.
அறு,	tar,	enquire,decision.
அறுவை,	dara:	garment.
அறை அம்மி,	g̃ar:	mill-stone.
அன்,	gan,an :	Ordinal determinative.
அன்னை,	an,nanna,ninni:	lady.
அனுப்பு,	gen,gin:	send.
அனைத்து,	g̃an,gan,	abundance.
ஆ,ஆகு,	gar:	exist.
ஆகம்,	Šag:	heart.
ஆக்கு,	kak,gag:	do,perform.
ஆண்,	g̃ar:	male,warrior.
ஆந்தை,நத்து,	nam:	owl.
ஆம்,	kam,am:	Ordinal determinative.
ஆம்,	gam,am:	indeed.
ஆர்,	gar:	eat.
ஆர்,	gar:	be full,fill
ஆர்,ஆரவாரி,	gar:	shout.
ஆர்,யார்,	gar:	who.
ஆராய்,	g̃ar:	behold,inspect.
ஆழ்,அகழ்,	kad,	excavation.
ஆள்,	gal:	man.
ஆறு,நெறி,	kar:	route.
ஆறு,	g̃ar,ara:	road.
ஆறு,	gar:	rest.

ஆற்று,	gar:	be appeased.
இ,இது,	ki, g̃i, g̃e,i:	this
இகு,	sig:	give.
இகும்,	sig thou:	In Tamil poetic expletive of 2nd person.
இஞ்சி,	gin:	wall.
இடம்,இடது,	kab,gab,	left,left side.
இடி,	gidi:	tribulation,ache.
இடு,	gar:	place,set.
இடு,	sid:	give.
இடை,	kir,gir,sir,ir:	midst,middle.
இடை,	gaba:	middle.
இணை,	gin:	double.
இரவு,இரா,	gig:	night,dark.
இரு,	gar:	be.
இரு,ஈர்,	min:	two:double.
இருள்,	gig:	darkness.
இரை,	gar:	food.
இரை,	ka-rag̃:	to sound,roar.
இரை,	gir:	cry out.
இலகு,இலங்கு,	si-lag:	shine,splendour.
இவர்,	gi-bis:	to mount,ride.
இழி,	kiri:	to lower.
இழு,	gid:	drag,draw,pull.
இழுகு,	g̃i:	to smear.

இழுக்கு:	gil,il:	forget.
இழுதை,	gidim:	ghost,devil.
இறகு,சிறகு,ஈர்,ஈ,	gir:	wing.
இறு,	gar:	settle,pay.
இறுதி,ஈறு,	g̃ar:	be at an end.
இறை,	gir:	pour out water.
இறைஞ்சு,	nir:	supplication.
இன்,இனி,	gin:	sweet.
ஈ,இகு,	sig:	to give.
ஈரல்,	g̃ar:	liver.
ஈறு,	g̃ar:	be at an end.
உக்கம்,	kug-gi:	gold.
உகிர்,	sug̃ub:	finger nail.
உச்சி,	mug:	top.
உடன்,கூட:		with,together with.
உட்கார்,	dur-gar:	sitdown.
உடை,	gum(<gur):	garment.
உண்,	kur,kuŠ,	eat,food.
உண்டி,	kuŠ:	fodder.
உதை,உந்து குதை:		to discharge,propel.
உப்பு,	mun:	salt,acid.
உயர்,	sug:	be high.
உயர்,	sug̃:	to leave off, vanish.
உரன்,உரம்,	kur,kuŠ:	strength.
உரி,உழக்கு,	sur:	a measure.

உரி,	gur:	to shear, peel.
உரு,	sug:	appearance, beauty.
உரு,	sur:	furious, be angry.
உருள்,குருள், சுருள்,	sug̃ur:	to roll,curl.
உருள்,	sur:	spin,weave.
உழு,	ur,uru,sur:	deep furrow, to plough
உழுவை,	ur-bar:	tiger.
உள்,	kuŠ:	in.
உளுக்கா	குளிர்:	to sit
ஊ,ஊன்:	su,kuŠ:	flesh,body.
ஊடு,	muru:	middle.
ஊழ்,	ur,sun,kuŠ:	be old.
ஊழி,	g̃uŠ, g̃ul:	devastation,annihilation.
ஊன்று,	ur-ru,sug:	to fix, plant.
எச்சம்,எச்சில்,	gar:	excrement.
எட்ட,	gid:	far off:be distant.
எட்டம்,நீடு,	gid:	belong,length.
எடார்,	gir:	desert.
எடு,	gar:	take.
எடு,	gar:	liftup.
எரி,	gir,sirim:	burn.
எரு,	gar:	excrement.
எருது,ஏறு,காரி,	g̃ar:	ox.
எலும்பு,	gir:	bone.

எழு,	gal:	lift up.
எழுது,வரை,	g̃ar,ge;	write.
எற்று,	gir:	pour out water.
ஏணை,	gin:	firmness.
ஏதும்,	gar:	anything.
ஏறு,	g̃ar:	ox.
ஏற்றார்,	gir:	enemies.
ஒக்க,	uk-kin<gug-gin:	totality,all.
ஒக்கல்,	uk-kin<gug-gin:	gathering,assembly.
ஒழி,	gul:	cease.
ஒளி,	g̃ud,ul:	be bright,shine.
ஒற்று,	sur:	to squeeze, press out.
ஓடு,	kud:	to run.
ஓதம்,	kud:	flood.

ஒலிமாற்ற இலக்கணக் குறிப்புக்கள்

(1)பெரும்பாலான உயிர் முதற் சொற்கள் மொழி முதற் ககர மெய் கேட்டின் பெறுபேறாகத் தோன்றியவை என்பதை மேலே உள்ள சொற்பட்டியல் காட்டுகிறது.

Kam >அம்	gan> அன்
gal > அளி	gal > அழி
gal > அல்	gab >அவி
gar > அருள்	gana >அணை

(2) கெட்டுப் போகாத மொழி முதற் ககர மெய் எ ஏ அல்லது இ,ஈ அக மாற்றம் பெற்றது.

g̃ar > எருது,ஏறு	g̃ar > எரு
gal > எழு	gar > எழுது

gar > எடு	**gar** > ஏதும்
gar > இரை	**gar** > இரு
gar > இடு	**gaba** > இடை
g̃ar > ஈறு	**kab,gab** > இடம்,இடது

ga(r) என்பதன் அகர உயிர் முன்நோக்கி ஒலிக்கப்பட்ட போது அது முதலில் **ge** எனவும் பின்னர் **gi** எனவும் மாறிற்று. பின்னர் ஒரு காலத்தில் இம் மொழி முதல் g கெட்டுப் போக எ,இ என்பன சொன் முதல் உயிராக நின்றன. மிகப் பழைய காலத்தில் நிகழ்ந்த இவ்வொலி மாற்றத்தின் காரணமாக தமிழில் உள்ள இ,ஈ,எ,ஏ ஆகியவற்றை முதலிற் கொண்ட சொற்களெல்லாம் பிறந்தன. இம்மாற்றத்தை வரன் முறையாக விளக்கிக் காட்டுவதற்கேற்ற சொற்கள் மிகப் பழைய காலத்தில் அழிந்து போயின. சுமர் மொழிச் சொற்களின் துணை கொண்டே இவற்றின் பிறப்பு வரலாற்றை இன்று அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக இங்கு ஒரு சொல்லின் வரலாற்றை விரித்து விளக்குவோம்.

தமிழில் இடப்பக்கம் அல்லது இடதுகையை உணர்த்தும் சொல் இடம் அல்லது இடது என்பதாகும். இதன் பிறப்பு விசித்திரமானது. இது **gab** என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. சுமர் மொழியில் இது இடப்பக்கம் அல்லது இடதுகையை **(left or left side)** சுட்டுகிறது. **gab>** இடம். **gar** என்பது சுமர் மொழியில் பக்கத்தை உணர்த்துஞ் சொல். **gar>gab** ஆக மாறி இடது பக்கம் அல்லது இடது கையைச் சுட்டிற்று. **gar>** சார் 'பக்கம்' எனத் தமிழில் மாற்றம் பெற்ற போதும் இடது கையைச் சுட்ட அவ்வித மாற்றத்தைப் பெறவில்லை. திராவிட மொழிகளில் **gab** என்ற சொல் இன்று காணப்படவில்லை. அது **gab>dab** என மாறி விட்டது. இவ்வுண்மையைச் சுமர் மொழி இலக்கண ஆசிரியரும் திராவிட அகராதிகாரரும் தெளிவாகக் குறிப்பிடுவர். அவற்றை அப்படியே இங்குத் தருவாம்.

CS.53. பண்டைய உரு எழுத்தையும் விளக்கத்தையும் உடன் தந்துள்ளது.



gab,gub(=dab,dub)

the left hand (g=d).D.116.

DED.381 <u>Ta</u>:itai, itam: left side.

<u>Ma</u>. itam, etam. left side. <u>Ko</u>.er id.

<u>Ka</u>.eda <u>Kod</u>.edate <u>Tu</u>.eda,yada.

<u>Te</u>.edama left,left hand: da,da

left. <u>Kol</u>.edam <u>Nk</u>.dava 'left'

<u>Pa</u>.debri <u>Ga</u>.debri <u>Go</u>.dāvā

<u>Kui</u>.deba,deba <u>Kuwi</u>.tebri,tebri

The words in Turner.S.U.debre may be from Dr.

இவ்விளக்கத்தின்படி **gab>dab** ஒலிமாற்றத்தை சுமர்மொழியும் மத்திய இந்தியாவில் நைகி மொழி பேசும் இடத்திலிருந்து வடக்கேயுள்ள நிலப்பரப்பில் பேசப்படும் மொழிகளும் பெற்றுள்ளன. **gar(b)>er>itam/edam** ஒலிமாற்றத்தை நைகி மொழி பேசும் இடத்திற்குத் தெற்கேயுள்ள தென் இந்திய மாநில மொழிகள் பெற்றுள்ளன. புவியியல் அடிப்படையில் இவ்வொலி மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதால் மக்களும் இருபெரும் பிரிவுகளாக வாழ்ந்து வந்தனரா என்பது ஆராயத்தக்கது.

(3) **g̃ ar>šag>**அகம்,அகடு,அகல். ஒலிமாற்ற நெறி முறையில் உயிர் முதற் சொற்கள் **gar** என்பதிலிருந்து நேராகவும் **gar** என்பது மாறிய **šag** என்பதிலிருந்து வரன் முறையாகவும் மாற்றம் பெற்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது. ஓர் எடுத்துக்காட்டு மூலம் இதனை விளக்குவாம். சுமர் மொழியில் **g̃ar 'heart,midst'** என்ற பொருள்களிலும் **šag 'heart, centre'** என்ற பொருள்களிலும் வருகின்றது**g̃ ar>šag** தமிழ் தவிர்ந்த ஏனைய பல திராவிட மொழிகளில் **gar** என்பது **DED1070 <u>Ma</u>.karal.lungo and heart <u>Ko</u>.karl 'heart' <u>Ka</u>.karul <u>kod</u>.kari <u>Tu</u>.karalu** ஆக வருகின்றது. ஆயின் தமிழில் **g̃ ar**இலிருந்து மாற்றம் பெற்ற **šag>** என்பதே **šag>**

ஆகம் **'heart', šag>** அகம் **'inside'** அகணி **'inside, interior'** அகடு **'interior, middle'** என வருவது குறிப்பிடத்தக்கது.

(4) இரு வேறு ஒலி மாற்றக் கோட்பாடுகளுக்கமைய **kalag** என்பதிலிருந்து அழகு,எழில் என்னும் ஒருபொருட் சொற்கள் பிறந்துள்ளமை நோக்கத்தக்கது.

k=0	**kalag >** அழகு
ka>e	**kalag > eril**
	"

(5) அகல் **< dagal 'be wide,extensive'. da-gal** என்பது ஒரு இணைநிலை அடிச் சொல்லாகும். இதில் **da<dad 'side,broad,expanse'**என்ற பொருள்களில் வருவது. தட்டு **'side'**தடம் **broad,expanse** என்ற பொருள்களில் தமிழில் பயின்று வருவது. சுமர் மொழியில் **daddu 'side'** என்பது ஒரு வாய்பாடாகக் கொள்ளப்பட்டு வருகிறது. **gal 'broad, expanse'. dad + gal** என்பதில் நிலை மொழியீற்று **d** மெய் கெட **dagal 'side expansion'** என்ற பொருளை நேரே உணர்த்தி வருவது கண்டு இன்புறற்பாலது. **gar 'side'** என்னும் மூலச் சொல்லினின்றே **dad** அல்லது தட என்ற சொல் பிறந்தது. தடந்தோள்-விசாலமான தோள்.

(6) அரி **<nariĝ 'to purify'.** இங்கு **nariĝ** என்பதும் ஒரு இணைநிலையடிச் சொல். **na(m)-riĝ** இதில் முதனிலையாகிய **nam** என்பது தமிழில் **navai** நவை குற்றம்,அழுக்கு,கேடு என்ற பொருள்களில் வரும். **riĝ'to remove'** 'களைதல்' **nam riĝ** என்பதில் முதன் மொழி ஈறு கெட்டு **na rig to remove impurities** என வரும். இது முதலும் **(n)**,ஈறும்(**ĝ**) கெட்டு **ari**'அரி' எனச் சுருங்கி விடுகிறது. 'நார் அரி நறவு' என்னும் சங்க இலக்கியச் சொற்றொடர் 'அழுக்குகளை நீக்கிப் பண்ணாடையின் மேல் வடித்தெடுத்த கள்' என்னும் பொருளைச் சுட்டி வருகின்றது. வினையிலிருந்து இறக்கிய கள்ளு முட்டியினுள் தூசு, துரும்பு, பூச்சி என்பன உறையுமாகலின் கள்ளைக் குடிப்பதற்குப் பதஞ் செய்வதற்காக வடித்துத் தூய்மைப் படுத்துவர். 'அரி' என்ற சொல்லின் வரன் முறையை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவாறு அதன்

பிறப்பு நெறி அமைந்திருக்கிறது. இக்கருத்தானன்றே தொல்காப்பியரும் விழிப்பத் தோன்றா எனச் சொற்பிறப்பைச் சுட்டிக் காட்டினார்.

(7) கஞ்சி,இஞ்சி என்ற சொற்களில் 'சி' என்னும் பின்னொட்டு பிற்காலத்திற் சேர்க்கப்பட்டமை காணக் கூடியதா யிருக்கிறது.

kam	**'soup' + ci > kañci**	கஞ்சி
gin	**'wall' + ci > ginci >inci**	இஞ்சி

(8) ஒளி **'be bright,shine'** என்ற பொருளில் வரும் தமிழ்ச் சொல் **ul** 'உல்' என்பதினின்றும் பிறந்தது. **u>o. ul** என்பது **g̃ud** என்பதினின்றும் பிறந்தது என சுமர் இலக்கணவாசிரியர் கூறுவர். **gud>ul>oli** 'ஒளி' என ஒளி என்பதன் வரன்முறைப் பிறப்பு வரலாற்றைக் காட்டலாம். இங்ஙனமே தமிழில் வரும் எல்லா ஒகர ஓகார முதன் மொழிச் சொற்களும் உகரத்தின் விகாரம் என்பதும் இவ் உகரம் **ku,g̃u,gu** என்பவற்றிலிருந்து பிறந்தது என்பதும் ஒலிமாற்றச் சட்ட விதிகளாகும்.

(9) ஒக்கல் என்பது சங்க காலத்து ஆற்றுப்படை நூல்களில் மிகுதியாகப் பயின்று வருஞ் சொல்லாகும். நீர் உமது ஒக்கலொடு மன்னனின் அவைக் களத்துக்கு வருகுவிர் எனப் பாணர் பாணரை விளித்துக் கூறுவர். இங்கு 'ஒக்கல்' என்பது சுற்றத்தினர் அடங்கிய பெரிய கூட்டத்தினரைச் சுட்டும். **uk-kin** என்பது ஓர் இணைநிலையடிச் சொல். **uk,ug,ugu 'people'** 'மக்கள்' **kin** 'கிளை' 'கூட்டம்' எனவே மக்கள் கூட்டம் என்பதே அடிப்படைப் பொருளாகும். மக்கள் தொகுதி எதனையும் **uk-kin>** ஒக்கல் என்ற சொல் சுட்டும்.

(10) உக்கம் 'பொன்' என்பதும் ஓர் இணைநிலையடிச் சொல். இது **kug-gi** என்ற இரண்டு சொற்களின் இணைப்பி னின்றும் பிறந்தது. முதன் மொழிக் ககர மெய் கெட **kug-gi> ug-gi** என நின்று தமிழில் உக்-கம் >உக்கம் என வந்தது. இதுவும் ஒரு பழந்தமிழ்ச் சொல்லாகும். இரண்டாவதாகிய **gi** என்பதன் துணையின்றி **kug** என்பது தனித்து நின்றும் பொன் என்னும் பொருளில் வழங்கும். தமிழில் 'கூழ்' என்பது பொன்னைச் சுட்டும் பெயர்களில் ஒன்று. **kug>** கூழ்.

(11)மேலே காட்டிய உக்கம்,ஒக்கல் ஆகிய சொற்களில்

மொழியிடைக் ககரமெய் இரட்டித்து வருவதன் காரணம் தெளிவாகிறது. அவை இணைநிலையடிச் சொற்கள். இருவேறு சொற்களில் உள்ள இரண்டு ககர மெய்கள் ஒன்றாகச் சேர்ந்த பின் அவை இரட்டித்து நிற்பனபோற் காட்சியளிக்கின்றன. **uk-kin, kug-gi** உண்மையில் இரட்டிப்பு என்பது அங்கில்லை. இரு சொற்களின் ஈறும் முதலுமே ஒரு சொல்நிலையில் அங்ஙனம் காட்சியளிக்கின்றன. இங்ஙனமே பல தமிழ்ச் சொற்களின் பிறப்பு நிலையை உணராத இலக்கணவாசிரியர் இவ்வித சொற்களில் மெய் இரட்டித்து நிற்கின்றதென மயங்குவர். மெய் இரட்டித்து நிற்பதற்கு எடுத்துக்காட்டு: **<u>kur</u> kukk. head. <u>Malt</u> kuku head. <u>Ta</u>.ukkam 'head'.**

(12)பெரும்பாலான தமிழ்ச் சொற்களின் முதன் மெய் கெடும்போது ஈற்று மெய்யாகிய ரகரம் (**r**) ற,ல,ழ,த,ண,ட் முதலிய பல மெய்களாக மாற்றம் பெறுகிறது. **kur**>உண். **kar, g̃ar** > காண் முதலிய சொற்களில் ரகரம் ணகரமாக மாறுகிறது. **gana**> அணை, அணவு, அணுகு, **gin**> இணை **gin**> ஏணை என்பனவற்றில் னகரம் ணகரமாக மாறுகிறது. **gar**>அதக்கு, **g̃ar** > அது என்பனவற்றில் ரகரம் தகரமாக மாறுகின்றது. இது போன்றே **kur** >குதிரை என ஆகின்றது. **gar** >இடு, **kir,ir**> இடை, **gir**> எடார், **gar**> எடு ஆகிய சொற்களில் ரகரம் டகரமாக ஆகின்றது. **g̃ar**> எழுது, **ur,ur**> உழு, **kiri** > இழி என்பனவற்றில் ரகரம் ழகரமாக ஆகின்றது. **kar** >ஆறு, **g̃ar,ara**> ஆறு, **gar**> ஆறு, **gir**> இறகு, **gar**> இறு, **g̃ ar**> இறுதி, ஈறு, **gir**>இறை, **g̃ar**> ஏறு,**gir**> எற்று என்பனவற்றில் ரகரம் றகரமாக மாறுகின்றது. **gar** > அலம்பு, **gar** > அலவு, **gir** >எலும்பு ஆகிய சொற்களில் ரகரம் லகரமாக மாறுகின்றது.

(13) தமிழில் உழுவை 'புலி' என்பது ஓர் இணை நிலையடிச் சொல்லாகும். **ur-bar** என்னும் இரண்டு சொற்களின் ஒட்டு இது. **ur** என்பது புலால் உண்ணும் விலங்குகளைப் பொதுவாகக் குறிக்குஞ் சொல். விசேடமாக நாயைக் குறிக்கும். **bar** என்பது 'வரி' அல்லது 'கோடு'. எனவே **ur-bar** என்ற இரண்டும் இணைந்த நிலையில் 'வரி விலங்கு' **ti-ger** என்பதைச் சுட்டும். புணர்ச்சி நிலையில் **ur-bar**> உழுவை என ஆகின்றது. **ur,uru**> உழு என நிற்றல் காண்க.

bar என்பது வய்(வை) என மாறும். எனவே **ur-bar>** உழுவை 'வரிப்புலி' எனப் பிறப்பெடுக்கும்.

(14)அங்காடி 'சந்தை,வியாபாரத்தலம்' என்பது **dam-kar** என்னும் இணைநிலையடிச் சொல்லினின்றும் பிறந்ததாகும். **dam** என்பது 'வாங்குதல்' அதாவது பொருளை விலை கொடுத்துப் பெறுதல். **kar** என்பது பொருளை வாங்கும் கர்த்தாவை குறிக்கும். எனவே **dam-kar 'merchant'** எனச் சுமர் மொழி குறிக்கும். ஆயின் தமிழில் அது வாங்குவோனைக் கருதாது வாங்கும் இடத்தைக் கருதுகிறது. **dam-kar** என்னும் இணைநிலையடிச் சொல்லின் மொழி முதல் **'d'** கெட்டு அங்கார் > அங்காடி என வந்தது.

(15)'அகவு'தல் அழைத்தல். **call,cry,summon.** இதற்கு இணையாகச் சுமர் மொழியில் **makas,ag** என்னும் இரு சொற்கள் உள. முன்னையதன் முதலும் ஈறு கெட்டு **makas>aka-vu** எனத் தமிழிலும் முதலும், ஈறும், ஈற்றயலும் கெட்டு **ag** எனச் சுமர் மொழியிலும் ஒலி மாற்றங்கள் நிகழ்ந்தன. எனவே அகவு என்பது நீண்ட ஒரு சொல்லின் குறுக்கமாகும்.

(16) அந்தகன் **nam-tar:** இதுவும் ஓர் இணைநிலையடிச் சொல். இது இயமனைச் சுட்டும். இயமன் என்ற சொல் அங்கில்லை. இது வடமொழிச் சொல். **nam-fate** 'அமைப்பு' **tar-decider.** தீர்மானிப்பவன். எனவே ஒவ்வொரு மனிதனின் தலைவிதியைத் தீர்மானிப்பவன் என்பதே **nam-tar** என்பதன் நேர்ப்பொருள். **nam>** அம் (அமைப்பு), **tar** >தகன். அம்+தகன் >அந்தகன். அமைப்பு **-fate,destiny** என்ற சொல் மிகப் பழைய காலத்திலிருந்து தமிழில் வழக்கிலிருந்து வருகிறது. ஆரிய நாகரிகமும் புராண வரலாறுகளும் தமிழ்நாட்டில் நுழைவதன் முன் பெருவழக்காக இருந்தது 'அமைப்பு' என்னும் இச்சொல்லாகும்.

(17) உட்கார்,உளுக்கா என்ற இரண்டு சொல்லும் தமிழில் 'கீழே இருத்தலைச்' சுட்டும். இவை **dur-gar 'sit down'** என்னும் இணைநிலையடிச் சொல்லினின்றும் பிறந்தவை. **dur-to sit, gar 'do'** செய் அதாவது இருத்தலைச் செய்தல் எனப் பொருள்படும். **dur, gar** என்ற இரண்டும் இணைந்த பின்

முதன் மொழி முன் மெய் கெட்டு **dur-gar>ur-gar** உட்கார் என வந்தது. ஈற்று ரகர மெய் கெட்டு உட்கா > உளுக்கா என ஆயிற்று.

உயிர் முதற்றமிழ்ச் சொற்களும் அவற்றுக்கு இணையான உயிர் முதற் சுமர் மொழிச் சொற்களும்

சுமர் மொழி வழக்கிலிருந்த கி.மு.2000 வரையுமான காலப் பகுதியில் தோன்றிய உயிர் முதற் சொற்களும் பொருளும் அவற்றுக்கிணையான தமிழ்ச் சொற்களும் இப்பகுதியில் பட்டியல் செய்து காட்டப்படுகின்றன. இத்தமிழ்ச் சொற்கள் சுமர் மொழியில் உயிர் முதற் சொற்கள் தோன்றிய காலத்தின் முன்னர் பின்னர் தோன்றினவா என்பதை இன்று அறுதியிட்டுக் கூறிக் கொள்ள முடியாது. சுமர் மொழியில் உயிர் எழுத்துக்கள் நான்கனுக்கும் தனித்தனி வரிவடிவம் தோன்றிய காலம் கி.மு.2800க்குப் பின்பு எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இக்கால எல்லைக்கு முன் உயிர் முதற் சொற்கள் தோன்றியிருக்க முடியாது. மெய்+ உயிர்+ மெய் என்னும் மூவொலியுடன் கூடிய அசைச் சொற்கள் மட்டும் வழக்கிலிருந்ததாகக் கருதுவதற்கு அக்காலச் செங்கல் வெட்டுக்கள் ஆதாரமாகின்றன. நீலமேகத்தைக் கிழித்துக் கொண்டு சந்திரன் வெளி வருவது போல் அசைச் சொல்லின் முதன் மெய்யாகிய ககர ஒலியை அப்புறப்படுத்தி விட்டு இரண்டாவதாக நின்று உயிர் முதன்மை பெற்றுத் தோன்றுதலை சொற் பிறப்பு வரலாறு காட்டுகின்றது.

அகணி	**agar**	**meadow**
அகம்	**ag,aka**	**to love**
அகம், ஆகம்	**agan**	**breast**
அகம்	**aka**	**I**
அகம்	**aka**	**place**
அகம்	**aka**	**land,earth**
அகம்	**aka**	**field**
அகல்	**aka**	**a measure of capacity**
அகவு	**ag**	**to call, cry**

அகவு	aka	be long, lengthen out
அகழ்	a-šag	tank,ditch(water + heart)
அகழ்	egi	dig,excavation
அடர்	ag	hem in,press down
அத்தன்	ad-da	father
அத்திரி	anšu	ass
அப்பன்	ab-ba	father
அம்	am,nam. em(=ag)	
	abstract prefix/suffix	
அம்மா	ama	mother
அம்மை	am,an	heaven
அமர்	amaš	wall
அமை	ama	a reed
அய்(ஐ)	ia(=ai)	five
அயர்	aga	to do, perform
அயா,அயர்	anir	sighing, be weary
அரவம்	ara	sound
அராம்	a-ral	the underworld
அரி	ar	be bright, light
அரி	ara,ari,e-rim	foe,enemy
அருள்	ar$\tilde{g}$us	sympathy,favour
அலகை	alad,kalag	demon
அலவன்	al-lu	crab
அலை	el	wander,roam
அழி	ari	ruin

அள்	al	strength
அள	aga	to measure out
அளி	ari	protect
அளி	al,gal	'guard'
அன்	an,gan, ordinal determinative	
அன்னை	an,nanna	lady
அ,ஆன்	ab	cow
ஆக்கு	ag, ak	to do, to make
ஆக்கம்	aka	possession, wealth
ஆக	aka	be whole, complete
ஆகம்	agan	breast
ஆகரி	ag,ag-ga,agi,aka: send	
ஆக	aka	because
ஆகா	aka	verily
ஆசை	aš	desire, wish
ஆம்	am	indeed, yes
ஆம்	am,kam,	Ordinal determinative
ஆம்	ama	wild ox/cow
ஆய்	ag	mother
ஆர்	ara	to howl
ஆள்	ag	to use
ஆள்	al	to conquer
ஆள்நர்	al-tar	conqueror
ஆறு	ara	route
ஆறு	ara	way of living

ஆறு	ara	plan,design
ஆறு	aš	six
இஞ்சி	in-gar, iz-zi, i-zi:	wall
இட்டு<இடு. id.		beginning with
இடி	id-i, to shatter, butt, id-i-pu 'shattered'	
இடி	ib	be angry
இடை	idi	earth
இடை	ir,gir	midst
இணர்	il	flame
இதோ!	idi	object of attention;
		ie.calling a person's attention
இந்து	itu	the moon
இம்	im	speed
இமிர்	im	to flow, wind
இயல்	ir,er	to go
இருதயம்	ir-ti	breast, ir-ti id-i-pu
		'my breast they have shattered'
இருள்	idim<gid:	darken,dark
இல்	in	house
இலை	i-lu	door-sill
இவரி	ib	fight,battle
இழி	igi,idi	be low, to lower
இழு	il	to draw, il-du-du
		'they have drawn'
இழுக்கு	il, gil	forget

இழுது	i	ointment
இழுதை	idim<gidim	devil.
இளை	idim	weak
இற்றைக்கு	i-de-ku	'at the moment' to this day. Lit from this day.
இறை	irreš,ereš	lord,lady
இன்று	in-nu-u	'There is not'
இன்னா	in-na	flax,insult
இன்னும்	in-ga	further more
ஈங்கு	ir	here
உக்கல்	u,ussadu	side
உக்கிரம்	uk	vehement
உக	ud	rejoice
உகம்	uku,	the earth, world
உகிர்	umbin	finger-nail
உகுதல்	u-gu-de	'to be lost'
உச்சி	uš	be high
உச்சி	ur	peak
உச்சி,கூரன்	ur	dog
உசு	ug̃u,u-šu	worm
உஞ்சு	ur-ku	dog
உட்கிடை	uš-ki-ta	'the lower side'
உட்கு	ul	fear
உட்கு	ur	shame
உண்டு,உறு	u-tu:	to exist, to give birth to.

உதள்	u-du	sheep, lamb
உதோ!	u-dug	to wonder at
உந்து	ussa	to drive
உப்பால்	ub	neighbourhood
உம்	u	and
உம்பர்	umbara:	high, elevated place.
உமரி	ua [illegible]	a swamp, marsh.
உமிழ்	ug, ug̃u:	saliva, to spit
உயர்	u	high
உயர்ந்த	uš-an-ta	'the upper side' uš-side.
உரன்,உரம்	ug̃:	strength
உரி	ur	to shear
உருக்கு	urudu	'anything melted'
உரை	uru	smear
உலகம்	ul	sky, heaven
உலர்	ud(=lag̃)	to dry up
உலாவு	ul	to wander
உலாவு	ul	over flow
உழல்	u-lal	'wanting strength' to lose condition or status
உழவன்	uru.	husband man
உழி	uš	side
உழி	ud	when
உழு	uru	to plough
உழுவை	ur-bar	leopard

உளு,உசு	ug̃u,u-šu	worm
உற்சாகம்	ur-šag	'to cheer the spirit'
உறங்கு	ur	sleep
உறு	ur	all,numerous
உறு	ug̃u	multitude
உறுதி	u-ru,	document, positive declaration.
ஊங்கு	ugu	over,above
ஊதை	u-da	storm
ஊதை,சூறை	ur,uru	whirlwind
ஊழ்	ur	to grow old
ஊழியன்	ūr,uru:	slave,servent
ஊர்	u	mount,ride
ஊர்	ur,uru	city
ஊர்	ur	go,advance
உளன்று	ur,uru	to plant
எடார்	edin	plain desert
எடு	er,ir	to take
எதிர்	edin,egir:	back,backpart
எரி	en	in straw
எருத்தம்	erutum,	back(of the neck)
எல்	el	be bright
எல்லா	al-lu	all
எவன்	ebi,abi,aba,aka:	who?
எழு	e	to ascend

எறி	eš	throw down
என்	e(=ka)	speak
என்,என்ன	ene,ani,ana:	What?
என்று,என	-e-se:	particle suffixed to a direct quotation
என்றா	en:	unto, together with
என,என்று	en,enma:	as many as.
ஏ	e	be great, increase
ஏந்தல்	en	king
ஏந்து	en,em	to rise high
ஏவு	ib	speak,command
ஏல்	el	carry
ஏழகம்	elim	he-goat, ram
ஏளனம்,ஏளிதம்	el-la	disgrace
ஏன்	an,ana:	what? why?
ஒக்க	uk-kin:	all
ஒக்கல்	uk-kin:	assembly,host,relative
ஒரு,ஓர்	ur,uru	one
ஒரு,ஓர்	ušu, ušum:	one
ஒருக்கு	uraš:	gathering,bring to gether
ஒல்லு	ul	be fit,appropriate
ஒலி	uš	spell
ஒளி	ul	splendour,shine
ஒற்று	uru	to press, suppress
ஒள்	ur,uru	cohabit

ஒலிமாற்ற இலக்கணக் குறிப்புக்கள்

(1) தமிழ்மொழியில் ஆரம்ப காலத்து முதல் வரிசையில் தோன்றிய சொற்களுள் ஒரு பகுதியினவாக மாற்றமடைந்த இச் சொற்களைக் கருதலாம். இவற்றின் தோற்றக் காலத்து வடிவம் வேறு, எடுத்துக்காட்டாக ஸ்ரீ **ud,ul 'shine, splendour' (B7786.M5782) S.337** என்னும் குறிச் சொல்லைக் கூறும் போது ஸ்ரீ**ud** என்பதும் அதனினின்று பிறந்த **ul** என்பதும் உடன் கூறப்பட்டமை நோக்கத்தக்கது. தமிழில் **ul**>ஒளியாக வருகின்றது. ஸ்ரீ**ud** என்னும் மூலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் கால வெள்ளத்துள் மறைந்து விட்டது. இதுபோன்றே மக்களின் முக்கிய கருத்துக்களை உணர்த்தத் தோன்றிய பண்டைக் காலத்துச் சொற்களனைத்தும் நீண்ட தம் வாழ்க்கைக் காலத்தில் உயிர் முதற் சொற்களாக உருமாறின. இது போன்றே எவன் **ebi,abi,aba,aka who?** என்னுஞ் சொல்லையும் எடுத்துக் கொள்ளலாம். தோற்றக் காலத்தில் 'யார்' என்பதைச் சுட்ட எழுந்த **gar** என்னுஞ் சொல்லே பின் முதன் மெய் கெட **ar>aka** மாறிய பின் **aka>aba>abi>ebi** எனச் சுமர் மொழியிலும் எவன் எனத் தமிழிலும் உருமாற்றம் பெற்றது. சுமர் மொழியில் இதன் மாற்றுவடிவம் **name** என்பது.

(2) தமிழில் உள்ள என்ன? என்னும் வினாவுக்கு இணையான சுமர் மொழிச் சொற்கள் **ene,ani,ana,an** என்னும் நான்கு சொற்களாகும். 'அ' என்னும் தமிழ்ச் சுட்டுக்கு இணையான சுமர் மொழி **na'that'** என்பதிலிருந்து **a-na** என்னும் வினா பிறந்ததென்றும் அ >எ விகாரமாகி அன்ன > என்ன என ஆயிற்றென்றும் சுமர் மொழி இலக்கணம் கூறும். எனவே 'என்ன' என்பது ஓர் இணை நிலையடிச் சொல்லாகும். இதன் மூலவடிவம் **karna>a-na** என்பது.

(3) **kur** என்பது குறிஞ்சி,குன்றம் என்னும் மலையை உணர்த்தும் சுமர் மொழிச் சொல்லாகும். இது மலையுச்சியையும் சுட்டி வரும். **kur>mu**ஸ்ரீஎன ஒலிமாற்றம் பெற்று மலையுச்சியையே சுட்டி வரும். இதற்கு இணையான தமிழ்ச் சொல் முடி 'உச்சி' **kur>ur** என மொழி முதற் ககர மெய் கெட்டு வரும் போதும் மலையுச்சியையே சுட்டி வரும். **ur**> உச்சி எனத் தமிழில் உயிர்முதற் சொல்லாய் வரும். ககரமெய் கெடாது **kur** என

நின்று தமிழில் **kutumi** 'குடுமி' என வந்து உச்சி என்ற பொருளைச் சுட்டும்.

இதுபோன்றே நாயைச் சுட்டி வரும் கூரன், உச்சி என்ற தமிழ்ச் சொற்களுக்கு இணையான சுமர் மொழிச் சொல் **ur** என்பது. ககர முதன் மொழியாகிய **kūran** என்னும் மூலவடிவச் சொல் தமிழில் பாதுகாக்கப்பட்டுள்ளது. சுமர் மொழியில் இவ்வடிவத்தைக் கண்டு கொள்ளவில்லை. அங்குள்ள **ur-ku** என்னும் நாயைச் சுட்டும் சொல் ககர சகர ஒலி மாற்றம் பெற்று **ur-ku>ur-cu>uñcu** எனத் தமிழில் மாற்றம் பெறுகிறது. நாயின் மொழி வரலாறு இது மட்டுமன்று. **nay** என்னும் தமிழ்ச் சொல் ஏனைய திராவிட மொழிகளில் **(DED 3022) nai, nay, nayi, nahka, nete** முதலிய சொற்களால் குறிக்கப்படுகிறது. மிகப் பழைய சுமர் மொழிச் செங்கல் வெட்டுக்களில் **nig, nik** என்னுஞ் சொற்கள் பெண் நாயைச் **(female+dog)** சுட்டி வரும் எனக் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்துச் சுமர் மொழியில் (கி.மு.2300-2000) **n>l** ஆக ஒலி மாற்றம் பெற்று **nig>lig>liki>li** என வழங்கிற்று. **liki** என்பதிலிருந்து பிறந்ததே நாயைச் சுட்டும் ஆங்கிலச் சொல்லாகிய **lekha** என்பது. இங்ஙனம் தமிழ்நாட்டில் பிறந்த **nay** என்னுஞ் சொல் பயணஞ் செய்து பாபிலோனியாவில் **nig** என ஒலிமாற்றம் பெற்று பின் செமித்திக்கு மக்களால் **lig,liki,li** என லகர ஒலியாக மாறி உருவந் திரிந்து பின் ஐரோப்பா முழுவதும் பயணஞ் செய்து ஆங்கில நாட்டுக்குப் போய் **lekha** என முற்றும் உருவம் திரிந்து விட்டது. எனவே பிறப்புக் காலத்தில் பெண் நாயைச் சுட்ட எழுதப்பட்டும் **(female+dog)** பேசப்பட்டும் வந்த 'நாய்' என்னுஞ் சொல் காலப்போக்கில் நாயின் பொதுப்பெயராக வழங்கப்படலாயிற்று.

(4) உயர்ந்த, உட்கிடை என்னும் இரு தமிழ்ச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. இவை ஒவ்வொன்றும் தோற்றக் காலத்தில் மும்மூன்று சொற்களின் இணைப்பு என்பதை சுமர் மொழிக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

uš-an-ta	**'the upper side'**
uš-ki-ta	**'the lower side'**

இவற்றின் பொருள் **uš-side,** பக்கம். தமிழில் இது உழி என வழங்கும். **an-upper'** 'மேல்' வான் என்னும் தமிழ்ச் சொல்லின் விகாரம். **ta 'from'** இருந்து. 'மேல் பக்கத்திலிருந்து' என்பது நேர்ப் பொருள். **ušanta** எனப் பேச்சு வழக்கில் இன்றும் நிலவி வருஞ் சொல் **ušanta>uyarnta** என ஒலிமாற்றம் பெற்று இலக்கிய வழக்குச் சொல்லாயிற்று. **uš-ki-ta** என்ற சொல்லின் **ki** என்பது **'lower'** கீழ் என்பதைச் சுட்டி 'கீழ்ப் பக்கத்திலிருந்து' என்ற நேர்ப் பொருளைத் தந்தது. **uš-ki-ta>utkitai** என ஒலிமாற்றம் பெற்று 'அடிப் பக்கத்திலிருந்து' எனவே உள்ளே மறைந்திருப்பது என்ற பொருளில் வழக்கு பெற்று விட்டது. இலக்கியஞ் செய்யும் புலவோரால் 'கவிதையின் உட்பொருளாய் மறைந்து கிடப்பதை உணர்த்த' என்னுஞ் சந்தர்ப்பத்தில் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும்.

(5)உகுதல் **u-gu-de 'to be lost'** என்னும் சொல்லும் பிறப்பு நிலையில் மும்மொழிகளாலானது. **u,gu,de** என்பன அச் சொற்கள் தமிழில் **uku** உகு **-to be shed** எனவும் கன்னடத்தில் **ugu-to become loose, be shed, let loose** எனவும் பொருள் கொள்ளப்படும் **(DED.480).** ஒலியமைப்பிலும் பொருளுணர்த் துதலிலும் கன்னடம் மூலத்துடன் மிக ஒட்டி நிற்பதை அவதானிக்கலாம்.

(6)இல்லை என்னும் பொருளை உணர்த்தும் 'இன்று' என்ற சொல்லும் பிறப்பு நிலையில் **in-nu-u** என்னும் மும்மொழிகளால் ஆயது என்பதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

(7)'இற்றைக்கு' என்னும் தமிழ்ச் சொல் இன்றிலிருந்து என்னும் பொருளை உணர்த்தி வருவது. சுமர்க் கல்வெட்டில் இது **i-de-ku 'at the moment, to this day. Lit.from this day'** என வருகின்றது. **i-this, de-day ku 'towards'** என விளக்கம் கூறப்பட்டுள்ளது.

(8)உழல் என்னும் தமிழ்ச் சொல்லும் ஓர் இணை நிலைச் சொல்லாகும். இது **u-lal** என வரும். **u<ur<kur 'strength. Lal.to lose'**அதாவது வலிமை இழத்தல். இதன் காரணமாக உழலுதல் நிகழும்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

6. தொல்காப்பியங் காட்டும் பழந்தமிழ்ச் சொற்பிறப்பு நெறி

இன்று தமிழில் உள்ள நூல்களுட் காலத்தால் முந்தியதாகக் கருதப்படுவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். இந்நூல் எக்காலத்து எழுந்தது என யாரும் அறுதியிட்டுக் கூறிற்றிலர். கி.மு.மூன்றாம் நூற்றாண்டு வரை இந்நூல் எழுந்திருக்கக் கூடும் எனப் பலராற் கருதப்படுகிறது. ஆயினும் தொல்காப்பியங் கூறும் சொன்மரபு,பொருள்மரபு என்பன தொல்காப்பியர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுந்த இலக்கண இலக்கிய நூல்களின் அடிப்படையில் கூறப்படுகின்றன என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

நீட்டம் வேண்டின் அவ்வளவுடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (தொல்.எழு.6)

என்னுஞ் சூத்திரத்தில் 'என்மனார் புலவர்' என்பதனால் தம் முன்னோர் கூற்றைத் தழுவிக் கொள்ளுகிறார். நூன் முழுவதிலும் என்மனார், என்ப முதலிய சொற்களின் மூலம் முன்னோர் கூறிய மறையைத் தாம் ஏற்றுக் கொள்வதாகக் காட்டுகிறார். ஆயினும் முன்னோரின் பெயர்,காலம்,நூல் என்பனவற்றின் விளக்கங்கள் எவ்விடத்திலாவது கூறப்படவில்லை. முற்பட்ட காலத்துச் சில நூல்கள் உரையாசிரியர்களாற் பெயர் குறிக்கப்படுவனவாயினும் அவை யாவும் இன்று அழிந்தொழிந்தன எனவே கொள்ளப்படுகிறது.

இவ்வியலில் கி.மு.ஈராயிரத்துக்கு முற்பட்ட காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்ச் சொற்கள் சிலவற்றிற்குத் தொல்காப்பியர் கூறும் இலக்கண விளக்கங்கள் ஆராயப்படுகின்றன. அச்சொற்களின் பிறப்பு நெறி தெரியுமிடத்து அவையும் கூறப்படும். இங்கு விளக்கப்படும் சொற்கள் அனைத்தும் சுமர்மொழிச் செங்கல் வெட்டுக்களிற் காணப்படுபவையாகும்.

<u>திணை</u>:

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே

(தொல்.சொல்.1)

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

(தொல்.பொரு.1)

என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களிற் பயின்று வரும் 'திணை' என்னுஞ் சொல்லுக்குப் பொருள் கூறிய உரையாசிரியர்கள் சாதி,ஒழுக்கம்,வாழ்க்கை முதலிய பல விளக்கங்களைத் தந்துள்ளனர். இவற்றுள் 'வாழ்க்கை' என்பதே சரியான பொருள் என்பதைச் சொற்பிறப்பு வரலாறு காட்டுகின்றது. மக்களின் வாழ்க்கை உயர்திணை என்றும் மக்களல்லாத ஏனைய ஐவகை உயிரினங்களின் வாழ்க்கை அல்திணை எனவும் கூறப்படும். அவரலபிற என்பதனால் மக்களல்லாத பிற உயிருள்ளனவே சுட்டப்படும் 'இனி உயிரில்லனவும் அடக்கிக் கொள்ளப்படும்' என உரை கூறியதன் காரணம் உலகத்து வழக்கிலுள்ள எல்லாச் சொற்களையும் இலக்கணத்தின் பாற்படுத்திக் காட்டுதற்காம். எனவே உயிரில்லாப் பொருள்களுக்கு வாழ்க்கை இன்மையின் அவை அல்திணையில் அடங்காவாயினும் அவற்றையும் சேர்த்துக் கொள்க எனத் தழுவிக் கொண்டது உலக வழக்குக்கும் இலக்கண வழக்குக்கும் உள்ள வேறுபாட்டாலென்க.

திணை என்பது சுமர் மொழியில் சுட்டும் பொருளையும் அச் சொற்பிறப்பு வரலாற்றையும் இனிக் காண்போம்.

tin: life (B 9853) <u>balatu</u> s.425
ti,til: live (B1697) <u>balátie</u> s.76

gal, mal: be (B2238) <u>bašu</u> s.87

bal, institute for gal,mal (s6.205)

gar, be (B11957) <u>bašu</u> s.532

இவற்றுள் tin என்பது தமிழ் 'திணை' என்பதன் இணைச் சொல்லாகும். இதன் பொருள் 'life' செமித்திக்கு மொழியில் இதன் பொருள் balatie 'வாழ்க்கை' எனப்படுகிறது. தின் என்பது தில் என்பதினின்றும் பிறந்து இரு சொற்களும் balatu 'வாழ்க்கை' என்னும் ஒரே பொருளைச் சுட்டி வருகின்றன. இச் சொற்களின் பழைய மூலமாய் அமைவது gar. இது தமிழில் gar>iru 'to be' என மாறிற்று. gar>gal என ஒலிமாற்றம் பெற்று அதே பொருளைச் சுட்டி வருகின்றது. gal என்பதன் இணையான தமிழ்ச் சொல் கலி-தோன்றுதல், செழித்தல், வளருதல் என்னும் பொருளது. gal>mal>bal என ஒலிமாற்றம் பெறுகிறது. mal = மன்,மன்னுதல் 'நிலைத்து வாழுதல்' bal= வாழ், வாழ்தல், வாழ்க்கை. இங்ஙனம் திணை என்பது உட்பட gar என்னும் மூலத்திலிருந்து கிளைத்த சொற்கள் அத்தனையும் உயிருள்ள பொருள்களின் நிலைபேற்றினையும் வளர்ச்சியையும் சுட்டி வருகின்றன. வாழ்க்கை என்பது அறிவுடைய மனிதப் பிறவிக்கு மட்டுமே கூறப்படுகின்றது. ஏனைய ஐவறிவுயிர்களின் வாழ்க்கையென்பது அவற்றின் வளர்ச்சியாகும்.

தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி

இது கடவுளைச் சுட்டி வரும் பெயர்களைக் குறிக்கின்றது.

தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே

(தொல்.சொல் 4,3-4)

திணை பால் காட்டும் விகுதிகளைப் பெறாத உயர் திணைப் பெயர்களுள் கடவுட் பெயர்களும் அடங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. உ.ம். இறை. இது அக்காலத்தில் திணைபால் காட்டும் அன்,இ என்பன சேர்த்து இறை+அன்=இறைவன், இறை+இ=இறைவி எனக் கூறும் வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

சுமர் மொழியில் உள்ள irreš,ereš என்பன 'இறை' என்பதன் இணைப் பெயர்கள். இவற்றிற்கு Lord,Lady எனப் பொருள்

கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு சொல்லே ஆண் கடவுளையும் பெண்கடவுளையும் சுட்டிற்று என்பது. சுமர் மொழியில் இது கடவுட் பெயர்களுக்கு மட்டுமல்லாது எல்லாப் பெயர்,வினைச் சொற்களுக்கும் பொருந்தும். அம்மொழி வழக்கிலிருந்த காலத்தில் சொற்களில் திணை,பால்,காலம் காட்டும் விகுதிகளும் இடை நிலைகளும் இணைக்கப்படவில்லை. கி.மு.3500 வரையான காலப்பகுதிக்கு உரியதென மதிப்பிடப்படும் செம்னெட் நசாரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மிகப் பழைய சுமர் மொழிக் சல்வெட்டுக்களில் காணப்பட்ட மொழியில் பிற்காலத்திய வினைச் சொல் வடிவநிலை ஆரம்பமாகவில்லையெனக் கூறப்பட்டுள்ளது. பிற்காலச் சொல் வடிவங்களுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் வசன உறுப்புக்களைக் கவனிக்கலாம். [ ]-ia, **il-du-du ir-ti idi-pu lib-bi un-ni-šu.** இது பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **My--- they have drawn my breast, they have shattered my heart weakened.** இவ்வசனத்தில் வரும் **il-du-du**=இழுத்து **idi-pu**='இடித்து' எனத் தமிழ்வினை எச்ச வடிவங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன வேனும் வினை முற்றாகவே 'இழுத்தார்கள்' 'இடித்தார்கள்' என மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவ்வித வினைவடிவம் தவிர வேறு வினைவடிவங்கள் அம்மொழியில் இல்லை.

> **செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**
> **செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென**
> **அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி**
>
> (தொல்.சொல்.31)

என வரும் தொல்காப்பியச் சூத்திரத்தில் கூறப்பட்ட வினையெச்ச வடிவங்களுள் இரண்டு இவ்வசனத்தில் வருகின்றன. அவை **il-du-du>**இழுத்து, **id-i-pu>**இடித்து. இவை முறையே செய்-து, செய்-பு என்னும் வாய்பாட்டனவாய் து,பு விகுதி கொள்கின்றன. ஏறக்குறைய கி.மு.2300 வரை எழுதப்பட்ட சுமேரிய சமய இலக்கியங்கள் **(Sumerian Liturgical texts.p.195)** என்னும் நூலில் இவ்வசனம் வருகின்றது. இழுத்து,இடிபு என்னும் தமிழ் வினையெச்ச வடிவங்களே அக்காலத்தில் எச்சமாகவும் முற்றாகவும் பயன்படுத்தப்பட்டன என்பதை இங்கு தெளிவாகக் காண்கிறோம். இது மலையாள மொழியின் வினைச் சொற் பண்பாகும். எனவே தமிழ்மொழி தேய்ந்து மலையாளமானது எனக்

கூறுவார் கூற்றுப் பொருந்தாது. கி.மு.2300இல் சுமர் மொழி காட்டும் வினைச் சொல் வடிவத்தை மலையாள வினைச் சொல் காட்டுகின்றமையின் தமிழ்மொழியின் பண்டைய நிலையே மலையாளங்காட்டும் நிலையாகும் என்பது தெளிவாகிறது.

இவ்வாய்வின் அடிப்படையில் தமிழ்ச் சொற்களின் வளர்ச்சியை மூன்று பெருங் காலங் கட்டங்களுள் அடக்கிக் கூறலாம்.

(1) கி.மு.3500க்கு முற்பட்ட அசைச் சொற்காலம். இக்காலப் பகுதியில் வழக்கிலிருந்த அசைச் சொற்கள் மெய்+ உயிர் + மெய் என்னும் மூவொலிகளாலமைந்தவை. சொற்களை ஒன்றோடொன்று சேர்த்துக் கூறும் நிலையில் அவா நிலை, தகுதி, அண்மை என்னும் வாய்பாட்டின் ஒன்றன் மூலம் பொருள் உணர்த்தப்பட்டது.

(2) கி.மு.3500-கி.மு.1500 வரையான காலப் பகுதி. இக்காலப் பகுதியில் பெயர் வினையாகிய இரு வகைச் சொற்கள் பொருள் வேறுபடுத்தப்பட்டன.

> **சொல்லெனப் படுப பெயரே வினை என்று**
> **ஆயிரண்டென்ப அறிந்திசி னோரே**
>
> (தொல்.சொல்.பெய.4)

என்னும் தொல்காப்பியர் கூற்றுக்கிணங்கச் சொற்கள் இருவகைப் பகுப்புள் அடங்கின. மூவகை ஒலிச் சொற்களின் ஒரொலி தேய்ந்து சில சொற்கள் ஈரொலிச் சொற்களாயின. பின்னர் ஒரொலிச் சொல்லாகவும் மாறின. மாறிய இச்சொற்கள் பிற சொற்களின் பின்னர் வைக்கப்பட்டு அவற்றின் பொருளைச் சிறிது மாற்ற உதவின. எடுத்துக்காட்டாக ஒன்றைக் கூறலாம். தமிழில் 6-ஆம் வேற்றுமை உருபு அது,ஆது,அ என நன்னூல் கூறுகின்றது. தொல்காப்பியம் ஆறாகுவதே, அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி (தொல்.வேற்.18) என்ற சூத்திரத்தில் 'அது' என்பதனை எடுத்துக் கூறுகின்றது. அது என்பது ĝar என்னும் சொல்லின் முதன் மெய் கெட்டதனாற் பிறந்த சொல் gar>ar>at(u) என்பது முன்னர் விளக்கப்பட்டது. ĝar என்பது 'that one' 'அது' என்னும் பொருளது. கந்தனது புத்தகம் என்னும் போது 'அது' என்பது 'that one' of Kantan என்பதையே வெளிப்படையாகச் சுட்டுகின்றது.

அது என்பதன் மூலவுயிர் நீண்டு ஆது எனவும், ஈற்று மெய்யும் உயிரும் கெட்டு 'அ' எனவும் வரலாற்று ரீதியில் பிறப்பெய்தின.

சுமர் மொழியில் a,ak என்னும் இரண்டும் ஆறாம் வேற்றுமை உருபுகள். ĝar>aka என மாறும் என்பது முன்னைய இயலில் விளக்கப்பட்டது. aka என்பதன் ஈற்று உயிர்கெட்டு ak எனவும், பின்னர் ஈற்று மெய்யாகிய k கெட்டு a எனவும் மாற்றம் பெற்று ஆறாம் வேற்றுமைக்குரிய பெயர்ச் சொல்லின் பொருளை மாற்றமடையச் செய்கின்றன. இவ்விரு மொழிகளிலும் 'அ' என்பதே உருபாய் நிலைத்து நிற்பதாயிற்று. இங்ஙனமே தமிழிலுள்ள திணை, பால்,காலம் காட்டும் விகுதிகளும், வேற்றுமை உருபுகளும் பிற இடைச் சொற்களும் மூவொலி அசைச் சொற்களினின்றும் பிறந்து வளர்ந்தன. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார் முதலிய திணை,பால் காட்டும் விகுதிகளெல்லாம் மூவொலி அசைச் சொற்களினின்றே பிறந்தன. எடுத்துக்காட்டாக 'அன்' என்பது gan என்னும் மனிதனைச் சுட்டும் பெயர்ச் சொல்லினின்றும் (gan>an), பெண்பாலைச் சுட்டும் 'அள்' என்பது பெண்ணைச் சுட்டும் பெயர்ச் சொல்லாகிய gal(gal>al) என்பதினின்றும் பிறந்து திணை,பால் காட்டும் விகுதிகளாயின என்பது பெறப்படும்.

(3) கி.மு.1500க்குப் பிற்பட்ட காலம். இக் காலப் பகுதியின் தொடக்கத்தில் மதுரை உள்ளிட்ட பாண்டி நாட்டுப் பகுதியில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ்மொழிச் சொற்கள் தூய்மை செய்யப்பட்டுச் செந்தமிழ் வடிவம் பெற்றன எனக் கருதக் கிடக்கின்றது. தற்காலத் தமிழின் ஆரம்பநிலையை நாம் இங்கே காணலாம். தமிழ்ச் சொற்களின் ஒலிவடிவம், வரிவடிவம் என்பன இலக்கண வரையறை செய்யப்பட்டுப் புனரமைக்கப்பட்டன. புனரமைக்கப்பட்ட செந்தமிழின் இலக்கணத்தையே தொல்காப்பியரும் அவர் முன்னோரும் இலக்கண நூல்களிற் கூறினர். கருத்தை உணர்த்துதற்கு வேண்டாத அளவுக்குத் திணை பால் காட்டும் விகுதிகள் பெயர்ச் சொல்லோடும் வினைச் சொல்லோடும் பின் இணைக்கப்பட்டன. திணை பால் காட்டாத பெயர் வினைகளுடன் இவை சேர்க்கப்பட்ட போது தமிழ் மொழியில் ஓரளவு செயற்கைப் பண்பு தாவலாயிற்று. 'அ' என்னும் சுட்டுடன் 'அன்' என்னும் உயர் திணை ஆண்பால் விகுதியைக்

கட்டி 'அவன் வந்து' என்று கூறினால் மட்டும் பொருள் புலப்படும். இதை விடுத்து 'வந்து' என்னும் வினைச் சொல்லுக்கும் 'அன்' விகுதியைச் சேர்த்து அவன் வந்தான் எனக் கூறுவது அறவே வேண்டப்படாதது. இவ்விதம் பல்வேறு செயற்கை முறைகளைச் சொல்லாக்கத்திற் றழுவிக் கொண்ட அக்காலச் செந்தமிழ்ப் புலவோரின் போக்கினால் தமிழ் கூறும் நிலப்பரப்பு வடவேங்கடந் தென்குமரி ஆயிடையாக மிகச் சுருங்கவே, பாண்டி நாட்டுக்கு அப்பாலுள்ள பரந்த பாரத நாட்டில் அன்று பேசப்பட்டு வந்த தமிழ் மொழி மாற்றங்களைத் தழுவிக் கொள்ள முடியாமையினால் காலப்போக்கில் பல்வேறு திராவிட மொழிகளாகச் சிதைவுறலாயிற்று.

செந்தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல் காப்பியருமே பழமையையும் புதுமையையும் தழுவிக் கொள்ள வேண்டியதாயிற்று. எடுத்துக்காட்டாக உயர் திணைத் தன்மை ஒருமை பன்மை விகுதிகளைக் காட்டலாம்.

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

(தொல்.சொல்.வினை.6)

அவை தாம்
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே

(தொல்.சொல்.வினை.5)

இச்சூத்திரங்களில் இருவகையான விகுதிகள் தன்மை ஒருமை பன்மைக்குக் காட்டப்பட்டுள்ளன. கு,டு,து,று என்பன தன்மை ஒருமைக்கும் கும்,டும்,தும்,றும் என்பன தன்மைப் பன்மைக்கும் கூறப்படுவன. இவை பழந்தமிழ்ச் சொன்முடிபுகளாகும். என்,ஏன்,அல் என்பன தன்மை ஒருமைக்கும் அம்,ஆம்,எம்,ஏம் என்பன தன்மைப் பன்மைக்கும் கூறப்படுவன

புதுத் தமிழ்ச் சொன் முடிவுகளாகும். காலப் போக்கில் இப் பழந்தமிழ்ச் சொன்முடிபுகள் வழக்கிழந்து போயின.

எண் இடைச் சொற்கள்

தொல்காப்பியர் காலத்தில் வழக்கிலிருந்த எண்ணைக் குறிக்கும் இடைச் சொற்களாக உம், என, என்று, ஏ, ஒடு என்பன கூறப்படுகின்றன.

உம்மை எண்ணும் என என் எண்ணும்
தம் வயின் தொகுதி கடப்பாடிலவே.
எண்ணேகாரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக் குறித்தியலும் என்மனார் புலவர்
என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்று வழி யுடைய எண்ணினுட் பிரிந்தே.

(தொல்.சொல்.இடை 39,40,46)

தொல்காப்பியர் கூறும் எண்ணுப் பொருளைக் காட்டும் இச் சொற்களனைத்தும் கி.மு.2000 க்கு முற்பட்ட காலத்தவை என்பதைச் சுமர் மொழி காட்டுகின்றது. அங்கு ‘உம்’ என்பது உ (u) எனக் காணப்படுகின்றது என்பதைப் பின்வரும் வசனத்திலிருந்து காண்க.

zan-me-ni ama-ni <u>u</u> gin-sin

'his mother <u>and</u> his sister' (CT.III I-p.53)

தமிழ் ‘உம்’ சுமர் ‘உ’ என்பனவற்றின் மூல வடிவம். முழுமை,நிறைவு **(full)** என்பனவற்றைச் சுட்டும் **kur,gur,ku** என்பன ஆக வேண்டும் எனக் கருதக் கிடக்கிறது.

ஏகார எண்ணிடைச் சொல் சுமர் மொழியில் அதன் பழைய வடிவமாகிய **ge(and)** என்பதாகவே காணப் படுகிறது. முதன் மெய் கெட தமிழில் ஏ என நிற்கின்றது.

lal ia-nun-na-<u>ge</u> ni-kur-ne

'honey <u>and</u> butter they eat' (SGp.173)

தமிழில் உள்ள எண்ணைச் சுட்டும் இடைநிலைகளான என,என்று என்பன சுமர் மொழியில் **en,enna** எனக்

காணப்படுகின்றன. இவை முறையே **ene,erine** எனவும் சில கல்வெட்டுக்களிற் குறிக்கப்படுகின்றன. இவற்றின் பொருள் **'in as much as'**எனப்படுகின்றது.

'ஒடு' என்னும் தமிழ் எண்ணிடைச் சொல்லின் சுமர் வடிவம் **'ud'** என்பதாகும். முதலில் இது உடன் நிகழ் காலத்தைச் **(conjunction of time)** சுட்டிற்று. கூட என்னும் தமிழ்ச் சொல்லினின்றும் பிறந்த 'உடன்' என்னும் இடைச் சொல்லின் விகாரமே 'ஒடு' என்னும் எண்ணிடைச் சொல்லாகும்.

உம்மை தொக்க எனா என் கிளவியும்
ஆ ஈறாகிய என்று என் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணு வழிப்பட்டன
(தொல்.சொல்.இடை 41)

என்னுஞ் சூத்திரத்தில் எண்ணு வழிப்பட்டன எனக் கூறப்படும் எனா,என்றா ஆகிய இரண்டும் என,என்று ஆகிய இரண்டின் செய்யுள் விகாரங்களேயன்றி வேறில்லை.

உறவுமுறைப் பெயர்ச் சொற்கள்

தமிழில் உள்ள பெரும்பாலான உறவு முறைப் பெயர்கள் தொல்காப்பியத்தில் ஆங்காங்கு கூறப்படுகின்றன. அய்யன் (ஐயன்), அய்யை (ஐயை), அத்தன், அன்னை, அப்பன், அம்மா, நம்பி, நங்கை, தந்தை, தாய், ஆய், தம்பதி, ஆள், ஆண், பெண், ஆத்தாள் முதலிய சொற்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றிற்கு விளக்கந்தந்த தமிழ் அகராதிகாரர் தாம் கற்பனை உலகிற்குச் சென்று பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் பொருந்தாத கூற்றுக்களைக் கூறியுள்ளனர். சுமர் நாட்டு அகழ்வுகளிற் பெற்ற கல்வெட்டுக்களிற் காணும் சொற்களும் அவற்றிற்கு கி.மு.2100 வரை வரையப்பட்ட விளக்கக் குறிப்புக்களும் சொற்பிறப்பின் ஆரம்பச் சூழலைத் தெளிவுறுத்துகின்றன. ஏறக்குறைய ஒரே சொற்களே சிற்சில விடத்துச் சிறிது ஒலிமாற்றத்துடன் இருமொழிகளிலும் பயின்று வருகின்றன. தமிழில் மூலம் புலப்படவில்லை. ஆனால் சுமர் மொழியில் மூலம் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. எனவே இச் சொற்பிறப்பு ஆய்வில் கற்பனைக்கே இடமில்லை.

ĝab,gal ஆகிய இரு மூலங்களினின்றும் கிளைத்தவையே

உறவு முறைப் பெயர்களெல்லாம் என்பது இவ்வாய்வின் மூலம் புலப்படுத்தப்படுகிறது. சுமர் மொழியில் **ab,ab-ba,ap,pap** ஆகிய நான்கு சொற்களும் தந்தையைச் சுட்டும். இவை **L.abbas. Got.aba Gr.appa Syr.abba** என்னும் மொழிகளின் தந்தையைச் சுட்டும் பெயர்களுடன் ஒப்பிடத்தக்கன. பெரும்பாலான திராவிட மொழிகளில் அப்ப,அப்பன்,அப்பு என்பன தந்தையையும் துளு,தெலுங்கு ஆகிய இருமொழிகளில் தந்தையுடன் தாயையும் உணர்த்தி வருவன. இச் சொற்களின் மூலம் சுமர் மொழியில் வரும் **gab** என்பதும் தமிழ் மொழியில் வரும் **kappu** என்பதுவுமாகும். முதன் மெய் கெட்ட **g̃ ab>ab** எனத் தோற்றமளிக்கிறது கெடாது **g̃>p** என மாறும் போது **pap** என்ற உருவத்தைப் பெறுகிறது. உருவப் படத்தில் வீடும் அதனைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூணும் **(House + Stand)** காட்டப்பட்டுள்ளன.

Pap: father; a stand or support (CS.SL.27)

தமிழில் கப்பு என்பதற்கு **support,refuge** 'தாங்குகை' என்னும் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டைத் தாங்கிக் கொண்டிருக்கும் கப்புப் போன்றவர்களே பிள்ளைகளின் தந்தையும் தாயும் ஆவர். எனவே தோற்றக் காலத்தில் **gab>ab** என்ற சொல் ஆண் பெண் என்ற வேறுபாட்டைக் காட்டாது பொதுவாக இருவரையுமே சுட்டிற்று என்பது பெறப்படும். **ab** என்பதன் ஈறு இரட்டித்து **ab-ba** என வருகின்றது. தமிழில் திணைபால் விகுதிகள் பெயர்ச் சொற்களுக்குச் சேர்க்கப்பட்ட காலத்தில் 'அன்' விகுதிபெற்று **ab-ba- an>appan** என வந்தது.

இனி **g̃ab>** அப்ப ஒலி மாற்றத்திற்குப் பல எடுத்துக் காட்டுக்களைக் காட்டலாம். ஆட்டின் இளையது **g̃ab** எனச் சுமர் மொழியில் அழைக்கப்படும். தமிழில் **g̃ab>** அப்பர் என மாறியதை

மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே

(தொல்.பொ.மர.48)

என்னுஞ் சூத்திரம் காட்டுகின்றது. இன்னும் **g̃ ab-food, cooked food, cake, loaf.** இது **g̃ ab>** அப்பம் என்பதாகும். இங்ஙனம் காலப் போக்கில் ஏற்பட்ட முதன் மெய்க் கேட்டினால்

g̃ab > ab, ab-ba அப்பன் (தந்தை)

g̃ab > ab 'அப்பர்' (ஆட்டுக் கடா)

g̃ag >ab 'அப்பம்' **(cake,loaf)**

என வந்தன என்பது பெறப்படும்.

தமிழில் அப்ப(ன்) என்பது தந்தையையும் மூத்தோரையும் மட்டுமே சுட்டுகின்றது. தாயைச் சுட்ட **ab** என்பது **av** எனவும் **am** எனவும் மாற்றம் பெற்று அவ்வை, அம்மா என வருகின்றது. அவ்வை தாய், பெண், அம்மா - தாய். சுமர் மொழியில் **V** ஒலி இல்லாமையின் அங்கு 'அவ்வை' என்ற சொல் இல்லை. மகர மெய் இரட்டிக்காத **ama**- 'தாய்' என்ற சொல்லே அங்கு உண்டு. திராவிட மொழிகளில் கன்னடம் தெலுங்கு ஆகிய இரண்டிலும் **amma,ama** ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. சுமர் மொழியில் **gab** என்பது **breast,** மார்பு,முலை எனப் பொருள்படும். அது தமிழில் **gab> ammam** 'அம்மம்' **breast,** மார்பு,முலை ஆக வருகிறது. இங்கு மகர மெய் இரட்டித்து வருவது குறிப்பிடத்தக்கது.

சுமர் மொழியில் உள்ள **ag(=ad),ad,** ஆகிய இரண்டு சொற்களும் தந்தை,தாய் ஆகிய இருவரையும் சுட்டும் சொற்களாகும். அங்கு **aga-rin(gin)** என வழங்கிய சொல்லுபயோகம் பெற்றோர் **(parents)** இருவரையும் **(sin=gin=**இனை**)** சுட்டிற்று. **ag** என்பதன் பொருள் ஆக்குதல், உண்டாக்குதல் அதாவது பிள்ளைகளை உண்டுபண்ணுவோர் என்பதாகும். ஆங்கிலத்தில் **'mating'** எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலச் சொல் **gag>ag** என மொழி முதன் மெய் கெட்ட நிலையில் மாற்றம் பெறுகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

தமிழில் **ag** என்பது மெலிவுற்று அய்,ஆய் என மாற்றம் பெறுகிறது. அய் என்பது திணை பால் காட்டும் விகுதிகளுடன் சேர்ந்து அய்(ஐ)+அன்=அய்யன் (ஐயன்), எனவும், அய்(ஐ)+அய்(ஐ)=ஐயை எனவும் முறையே தந்தையையும் தாயையும் சுட்டுகிறது. பெரியோர் என்ற பொருளில் ஐ+அர்=ஐயர் என்ற சொல்லும், தமையன் என்ற பொருளில் தம்+ஐயன்=தமையன் என்ற சொல்லும் பரந்து வழக்கிலுள்ளன.

gan > யான் என வந்தது போன்று

gag > யாய் என வந்து தாயைச் சுட்டிற்று. யாய் >ஆய், ஆயி, ஆய்ச்சி >ஆச்சி என வளரலாயிற்று.

gar > யார் எனவும்

gan > யான் எனவும்

gag > யாய் எனவும், தமிழில் வந்து வழங்கும் முறை படித்து இன்புறத் தக்கது. எனவே ஆய் என்பதன் முன்னைய வடிவம் யாய் என்பதாகும். 'யாயே கண்ணினுங் கடுங் காதலளே' முதலிய சொற் பிரயோகங்கள் சங்க நூல்களில் பெருவழக்கிலுள்ளன. யாடு >ஆடு, யாறு >ஆறு, யானை >ஆனை என யகர முதன் மெய் கெட்டு வழங்குவது இயற்கையாகும்.

gag என்னும் மூலவடிவத்தின் முதன் மெய் **g>t** ஒலிமாற்றம் பெற்றுத் 'தாய்' எனத் தமிழில் வருகின்றது. **gag** என்பதன் இரண்டு மெய்களும் தகரமாக மாறியதும் **gag>tat** என வருகின்றது. தந்தையையும் தாயையும் சுட்டும் சுமர் மொழி வடிவங்களான **at,ad,adda** என்பன **gag>ag>at,ad** என மாற்றம் பெற்று **ad** இறுதி மெய் இரட்டித்து **ad-da** என வந்த சொற்களாகும். மேலும் **tat** என்ற சொல் **<u>L</u>:tata <u>Gr</u>.tota <u>S</u>:tata, <u>Sinh</u>:tatta <u>E</u>.dad** எனவும் முதன் மெய் கெட்ட நிலையில் **<u>Hit</u>.attas <u>Gr</u>.<u>L</u>. <u>Got</u>.atta** எனவும் வருவதை ஒப்பியல் அடிப்படையில் காணலாம்.

tat என்பது தமிழில் மெல்லின நகர இடையீடு பெற்று **tat>tant** தந்தை என வருகின்றது. இது தமிழ் மொழியின் பண்பாகும். ஓர் >ஒன்று, இர் >இரண்டு, மூர் >மூன்று எனச் சொற்கள் மூலத்தில் இல்லாத மெல்லின ஒலி இடையீடு பெறுவது வழக்கமாகும். **at,ad,ad-da** என்னுஞ் சுமர் மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அத்தன்-தந்தை, மூத்தோன், ஆத்தாள்-தாய் 'தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்கத் தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்' என்னும் முதுமொழியில் ஆத்தாள்-பெற்ற தாய் என்பது தெரிகிறது. அன்,ஆள் என்னும் பால்காட்டும் விகுதிகள் அத்த என்பதற்குப் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டவையாகும். அத்தள் >ஆத்தாள் என நீண்டது. **Ad 'father', ad 'mother'** என்பதை விளக்கும் சுமர்மொழிக் குறிச்சொல் **(S.162)**வின் வரைபடம் அல்லது உருஎழுத்து ஆண் குறி **(Picture of a penis)** என்கின்றது. ஆண்குறி அடையாளம் தோற்றக் காலத்தில் **ad** என்பது தந்தையையும் காலப் போக்கில் தாயையும் சுட்டிற்று என விளக்கங் கூறப்பட்டுள்ளது.

இனி, சுமர் மொழியில் பெண் உறுப்பும் ஆண் உறுப்பும் ஒன்றோடொன்று சேர்ந்த நிலையில் **(Vulva + penis)** எழுதப்பட்ட உருவெழுத்து அக்காலத்தில் **female+ male** என வாசிக்கப்பட்டு **man, husband, woman, wife** என்னும் நான்கு பொருள்களைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டது. **(CS.50). Dam** என்பதன் உரு எழுத்துக் காட்டும் படமும் பொருள்களும் பின்வருமாறு **(CS.p.58)**



dam: wife (B 11108) S.500.

dam: woman (B 11109, B 11128)

dam: Consort (B.11101)

dam: man,consort (B 11101)

dam 'தம்' என்பது பண்டைக் காலத்தில் தமிழில் வழக்கிலிருந்திருக்க வேண்டும். தம்பதி 'மனைவியும் கணவனும்' என்னும் சொல்லுபயோகத்தைப் பார்க்குக. இதில் 'தம்' என்பது மனைவியையும் 'பதி' என்பது கணவனையும் சுட்டுகிறது. சுமர் மொழியில் **dam** என்ற ஒரு சொல்லுக்கே கணவனும் மனைவியும் **(The sign pictured the generative organs of the male and female in juxta-position.S.500)** என்ற பொருளும் உரு எழுத்தும் அமைந்திருந்தன. தமிழில் 'தம்' என்பதற்கு மனைவி என்ற பொருள் நிலைத்து நிற்கவே கணவனும் மனைவியும் என்ற பொருளைச் சுட்ட 'தம்பதி' என்ற சொல்லுபயோகம் தோன்றிற்றெனலாம். **d>n** ஒலி மாற்றத்தினால் **dam** என்பது 'நம்' என சுமர் மொழியிலும் தமிழிலும் மாற்றம் பெற்றது. சுமர் மொழியிலுள்ள **dim(<dam).gul 'row lock of a ship'** என்பதன் தமிழ் வடிவம் நங்கூரம் (நம்+கூரம்) என்பது ஈண்டு நினைவுறுத்தற் பாலது.

திணை, பால் முதலியன காட்டும் விகுதிகள் பெயர்ச் சொற்களுடன் இணைக்கப்பட்ட காலத்தில் நம்+பி=நம்பி எனவும், நம்+கை=நங்கை எனவும் வடிவங்கள் தோன்றலாயின. பிராகுவி மொழியில் **nang** என்பதற்கு 'மனைவி' என்ற பொருளே உண்டு. தமிழிலும் நம்பி, நங்கை என்னும் சொல்லுபயோகங்கள் மணஞ் செய்யும் பருவத்தினரைச் சுட்டி வருவது குறிப்பிடத்தக்கது. **dam** ஆகிய மூலச் சொல்லின் பொருள் விரிவை நாம் இங்கே காண்கிறோம்.

இனி **gal(=gan)** என்னும் மூலச் சொல்லினின்றும் பிறந்து



வளர்ந்த பல்வேறு சொற்கள் பற்றி ஆராய்வாம். **gal** என்பதன் அடிப்படைப் பொருள் **a single person** என்பது. இது முதன் மெய்க்கேடு பெற்றுத் தமிழில் **gal>al** 'ஆள்' என அதே கருத்தையுணர்த்தும் சொல்லாக மாற்றம் பெறுகிறது. களி மண்ணாற் செய்யப்பட்ட ஓர் உருவமே **<Picture of a clay figurine;** இச் சொல்லின் உரு எழுத்து. **(CSSL 78).** உரு எழுத்தாகிய இவ்வரைபடம் ஆண் பெண் உறுப்புக்களைக் காட்டவில்லையெனக் கூறப்பட்டுள்ளது. இதற்குக் கூறப்பட்ட பொருள்கள் **man, male, lord, woman, lady** என்பனவாம். அதாவது மனிதன், ஆண், தலைவன், பெண், தலைவி என்பன அவை.

gal என்பதும் அதனினின்றும் பிறந்த **gan** என்பதும் சுமர் மொழியில் ஆணைச் சுட்ட, **gal>sal** ஆக மாறிப் பெண்ணைச் சுட்டும் சொல்லாக நிலைத்து நிற்பதாயிற்று. **sal>celi,celiya** என மாற்றம் பெற்றுத் தெலுங்கு மொழியில் பெண்ணைச் சுட்டும் பெயர்களாயின **(DED 2288).** ஓரசைச் சொற்கள் வழக்கிலிருந்த பண்டைக் காலத்தில் பொருண் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஒலிமாற்றம் சொல்லின் முதல் **gal>sal** அல்லது ஈற்று **gal>gan,** ஒலிமாற்றமாகவே இருந்தது என்பதை



sal,gan ஆகிய இரு சொற்களும் தெள்ளிதின் எடுத்துக் காட்டுகின்றன. பெண்ணைச் சுட்டிக் காட்டும் உரு எழுத்தின் வரைபடம் **(CS.SL.56)** இங்கு காட்டப்பட்ட பெண்ணுறுப்பாகும். **(Picture of the Vulva).** தமிழில் **gal(=gan)** என்பது இரு வடிவங்களைப் பெறுகிறது. பெண் அல்லது இளம் பெண் என்ற பொருளைச் சுட்டி வரும் 'கன்னி' என்பது ஒன்று முதன் மெய்க் கேடு பெற்ற **gal>al** என்பது மற்றையது. அல் என்பது பெண்ணைச் சுட்டும் சொல்லாக வழக்கிலிருந்து பின் அல்குல் **(Vulva)** என மாற்றம் பெற்றது. மூலப்பொருளாகிய பெண்ணுறுப்பைச் சுட்டி, அதன் பின் அதனையுடையவளாகிய பெண்ணின் பெயராக மாறிற்றெனலாம். மேலும் தமிழில் ஆண் பாலைச் சுட்டும் அள்,ஆள் என்பன **gan** என்பதினின்றும் பிறந்தன. பெண்ணைச் சுட்டும் அள், ஆள் என்பன **'gal'** என்பதினின்றும் பிறந்தன. **gal**-இலிருந்து பிறந்த 'அல்' என்பது சுமர்மொழியில் தன்மையொருமையைச் சுட்டும் பெயர்ச் சொல்லாகவும், பண்டைத்

தமிழில் தன்மை ஒருமையைச் சுட்டும் தன்மை ஒருமைச் சொல்லின் விகுதியாகவும் பயின்று வந்தமை குறிப்பிடத்தக்கது. சங்கத் தமிழில் 'வருவல் யானே' என்பது யான் வருவேன் எனப் பொருள்படுவது காண்க. முன்னர் எடுத்துக்காட்டிய

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே

(தொல்.சொல் வினை 6)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'அல்' என்பது தன்மை ஒருமை விகுதியாகக் காட்டப்பட்டிருப்பது காண்க. தொல்காப்பியர் கருத்துப்படி தன்மைச் சொற்கள் உயர்திணைக்குரிய என்பதை

யான் யாம் என வரூஉம் பெயரும்

பால் அறி வந்த உயர்திணைப் பெயரே

(தொல் சொல்.பெய.8)

என்னுஞ் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. முன்னிலை அப்படியன்று, அது விரவுத் திணைக்குரியதாகும். எனவே gal என்பதன் விகாரமாகிய gan> அன்,ஆன் என்பன ஆண்பாலையும், gal>sal என்பனவற்றிலிருந்து பிறந்த அள்,ஆள் என்பன பெண்பாலையும், gal> அல் என்பது தன்மையொருமை யையுஞ் சுட்டி வரும் இவை உயர்திணைக்குரிய பெயரும் விகுதிகளும் என்பது அறியத்தக்கது. சுமர்மொழி தமிழ்மொழி ஆகிய இரண்டிற்கும் வகுக்கப்பட்ட உயர்திணை, அஃறிணைப் பாகுபாட்டு முறைமைகளை நோக்கும் போது இவ்விலக்கண முறை இவ்விரு மக்களும் பிரிவுக்குமுன் ஒன்றாக ஓரிடத்தில் வாழ்ந்த காலத்தில் உருவாக்கப்பட்டதா என்பது ஆராயத்தக்கது.

இனி அன்னை (mother) என்னுஞ் சொல்லின் தோற்றத்தை ஒப்புமை வாயிலாக ஆராய்வாம்.

'அன்னை' என்பதற்கு இணையான சுமர் மொழிச் சொற்கள் an அன், anna அன்ன, nanna நன்ன என்னும் மூன்றுமாகும்.

இவற்றுள் 'அன்' என்பது **Lady** 'இறைவி' என்னும் பெயராய் பெரும்பாலும் பெண் தெய்வத்தைச் சுட்டி வருகிறது. **anna** 'அன்ன' என்பது **In-anna** என்னும் பெண் தெய்வத்தின் பெயரில் மட்டுந் தான் பயின்று வருகிறது. **In** 'இன்' என்பது 'இறைவி' எனப் பொருள்படும். எனவே **In-anna** என்பது இறைவித்தாய் எனப் பொருள்படும். அதாவது **'mother goddess'** என வணங்கும் தெய்வம். ஏறக்குறைய 2000 (கி.மு.4000-கி.மு.) ஆண்டுச் சுமர் வரலாற்றில் நாட்டின் தன்னிகரில்லாத தாய்த் தெய்வமாக கோயில்கள் அமைத்து வழிபட்டவள் **In anna** என்னும் பெண் தெய்வமாகும். இவள் பெயரில் பல காவியங்களும் இலக்கியங்களும் புனையப்பட்டன.

நன்ன (**nanna**) என்ற சொல்லும் அன்னையைச் சுட்டி வருவது. **Hit annas 'mother', hannas 'grand mother' S.nana 'mother' Gr.nanna 'aunt' Brs.nana 'mother' gal(=gan)** என்னும் மூலச் சொல்லினின்றே இவையாவும் பிறந்து வளர்ந்தன. **gan** என்பதன் முதன் மெய் கெட **an** 'அன்' பிறந்தது; முதன்மெய் கெடாது நகரமாக மாற **gan>nan** வந்து ஈற்றுமெய் இரட்டிக்கவே **nan-na=nanna** என வந்தது. இது **ad** என்பதன் ஈற்றுமெய் இரட்டிக்க **ad-da** என வந்தது போன்றும் **ab** என்பதன் ஈற்று மெய் இரட்டிக்க **ab-ba** என வந்தது போன்றும் ஆகும். எனவே அத்தன்,அப்பன், அன்னை ஆகிய சொற்கள் முறையே **ab,ad,an** என்பனவற்றின் ஈற்று மெய் இரட்டித்ததனாற் பிறந்தனவாகும். **gan** என்பது கன்னி (இளம்பெண்)யாக இயற்கைப் பிறப்பெடுக்கிறது.

பெண்ணுறுப்பை (**gal(=gan)** மூலமாகக் கொண்டு பிறந்த பெண்ணைச் சுட்டும் அல்குலார் (**gal>al>olkul**) கன்னி (**gan**) அன்னை(**an-na**) ஆகிய மூன்று சொற்களும் இன்று சிறிது கிறிது வேறுபட்ட பருவத்துப் பெண்களைச் சுட்டுவனவாயினும் தோற்றக் காலத்தில் இவ்வித வேறுபாடு நிலவியதா என்பது பற்றி இன்று கூறுவதற்கில்லை.

அன்னை என்னும் தாய்த் தெய்வ வழிபாடு நட்சத்திரம் ஒன்றை உச்சியிற் கொண்ட தூண் ஒன்றன் மூலம் (**a post surmounted by a star**) காட்டப்பட்டுள்ளது. இந் நட்சத்திரம் சூரியனைச் சுட்டுவதாக இருக்கலாம் என்பர். தூண் பெண் தெய்வத்தின் அறிகுறி.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற

வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே

(தொல்.பொ.புற.33)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் வரும் கொடிநிலை என்னும் கடவுள் வழிபாடு சூரியனைச் சுட்டலாம் என்பர். கொடிநிலை கீழ்த்திசை. இங்கே ஞாயிறு எனப் பொருள் கூறப்பட்டது. இவ்விளக்கம் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததன்று. எனினும் கொடிநிலையில் மூலமாய் நிற்கும் கொடி சுமர் நாட்டு வழிபாட்டில் விளக்கப்பட்ட பெண் தெய்வ வழிபாடாகப் பண்டு நிலவியதாகலாம். இரு நாட்டு வழிபாட்டு முறைகளிலும் சூரியன் பெண் தெய்வ வழிபாட்டோடு பொருந்தியிருப்பதன் காரணம் இன்று தெரியவில்லை. அன்னையின் தந்தையாக அவன் கருதப்பட்டிருக்கலாம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

7. தமிழ்ச் சொற்பிறப்பியற் கட்டளைகள்

அழிந்து போன பண்டைத் தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாத போது அழியாது பாதுகாக்கப்பட்டு வந்த பண்டைய சுமர்மொழிச் சொற்கள் வேண்டிய விடங்களில் இவ்வாய்வில் தரவுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கட்டளைகள் அமைத்துக் காட்டப்படுகின்றன. எனவே கற்பனைகளுக்கும் ஊகங்களுக்கும் இங்கு இடமளிக்கப்படவில்லை. இந்நூலின் முன் இயல்களில் ஆங்காங்கு விளக்கப்பட்ட சொற்பிறப்புக் கோட்பாடுகள் ஒன்று சேர்த்து இவ்வியலில் கட்டளைகளாக நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏறக்குறைய கி.மு.3000 க்கு முற்பட்ட உருவெழுத்து (Pictographic writing)க் காலம், குறியெழுத்து (ideographic writing)க் காலம் ஆகிய காலப் பகுதிகளில் உருவாய தமிழ்ச் சொற்கள் அனைத்தும் அசைச் சொற்கள் (Syllabic Writing) எனப்படும். இவ் அசைச் சொற்களின் காலத்தின் பின் தோன்றியவையே. நாம் இப்போது எழுதும் ஒலியெழுக்களாலாய (Phonetic Writing) சொற்களின் காலமாகும். இது கி.மு.2800க்குப் பிற்பட்ட காலம் எனக் கூறப்படுகிறது. ஒலியெழுத்துக்களுக்கு வரையறை செய்யப்பட்ட ஒலிப் பண்புகள் உண்டு. எழுத்துக்கள் தொடர்ந்து பொருள்தரின் பதமாம் என்னும் நன்னூலார் கூற்று இவ்வொலியெழுத்துக் காலச் சொற்களுக்கே பொருந்தும். அசைச்

சொற்களில் அமைந்திருக்கும் ஒலிகளின் பண்புகள் வரையறை செய்யப்படாதவை.

கட்டளை1: தமிழில் முதன் முதற் பிறந்த அசைச் சொற்களனைத்தும் வரைந்து கூறப்படாத மூன்று ஒலிகளின் கூட்டம். இது மெய்+உயிர்+மெய்(CVC) என்னும் அமைதி பெற்றிருந்தது.

முதன் மெய்: தொண்டையின் அடியிற் பிறக்கும் வல்லினமாய் (guttural) ககர வருக்க மெய்யொலி.

ஈற்று மெய்: ர், க்(g), ல்(ள்), ன், ம் ஆகிய மெய்யொலிகளுள் ஒன்று.

நடுஉயிர்:தொண்டையில் அடியிற் பிறக்கும் குறில் நெடில் என வரையறை செய்யப்படாத ஆ(அ),ஊ(உ) ஆகிய இரண்டுமாகும்.

அசைச் சொல்	ஒலியெழுத்துச் சொல்	பொருள்
கார்	காரி	எருத்து
கர்	கரை	எல்லை
கூர்	கூரம்	கூர்மை
குர்	குறி	புள்ளியிடு

கட்டளை 2: மொழி முதற் கக்ர மெய் கெட உயிர் முதற் சொற்கள் உருவாகின்றன.

கல்	>அள்	வலிமை
கம்	>ஆம்	ஓம்
கர்	>அரை	மாவாக்கு
குர்	>உரி	தோலுரி
குர்	>உரம்	வலிமை
குதை	>உதை	தள்ளு

கட்டளை 3: மொழி முதற் ககர உயிர்மெய்யிலிருந்து முன்னண்ண உயிர்களாகிய எ,ஏ யும் இ,ஈ யும் பிறக்கின்றன.

ĝar >எருது,ஏறு 'ஆண்மாடு'

gar > எரு 'மாட்டின் கழிவு'

g̃ar > எழுது 'எழுத்துக்களைப் பொறி'

g̃ar >இரு 'அமர்'

gar > இடு 'வை'

g̃ar > இறுதி 'முடிவு'

gar >ஈறு 'கடைசி'

kab >இடம் இடப்பக்கம்,அல்லது இடதுகை

இ,ஈ,எ,ஏ ஆகிய நான்கு உயிர்களும் மூலவுயிர்கள் அல்ல. இவை ககர உயிர் மெய்யை முன்னோக்கி உச்சரித்ததின் விளைவாகத் தோன்றியவை.

கட்டளை 4: ககர உயிர்மெய்யின் ககர மெய் கெடாது பிறந்த கி,கீ,கெ,கே என்பனவற்றின் அடியாகத் தோன்றிய சொற்கள் ஏராளம்.

கட்டு	>கிட்டு	'கட்டுதல்'
கடா	>கிடா	'ஆண் ஆடு'
கடாரம்	>கிடாரம்	'பெரிய செப்புப் பாத்திரம்'
கண்டன்	>கெண்டன் >கிண்டன்	'வலியவன்'
கால்	>கீழ்	'அடிப்பக்கம்'
கறி	>கீரை	'இலை,குழை'
கல்லு	>கெல்லு	'தோண்டுதல்'
கார்	>கெடு,கேடு	'இழப்பு'
கவி	>கெவி	'குகை'
கட்டி	>கெட்டி	'வல்லவன்'

கட்டளை 5: தமிழிலுள்ள ஒ,ஓ ஆகிய இரு ஒலியன்களும் முறையே கு,கூ என்பனவற்றிலிருந்து பிற்காலத்திற் பிறந்தவை. இக்கால எல்லை கி.மு.1500க்கு முன்பின்னாக இருக்கலாம். சுமர் மொழியில் இவ்விரு எழுத்துக்களும் இல்லை.

gug-gin	**> uk-kin >**	ஒக்கல்.
		ஒன்று சேர்கை, கூட்டம், சுற்றம்
gul	> ஒழி	'இல்லாமற் செய்தல்'
gud,ul	> ஒளி	'பிரகாசம்'
kud	> ஓடு	'கடுகி நடத்தல்'
kud	>ஓதம்	'பெரு வெள்ளம்'

கட்டளை 6: எல்லா உயிர்களின் முன்னரும் ககர மெய் சகர மெய்யாக மாறும். அங்ஙனம் மாறும் போது அகர உயிர் இ,ஈ,எ,ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும். மாறாது விடுவதும் உண்டு.

g̃ab	> சமை	'உணவாக்கல்'
kag	> சா	'உயிர் நீத்தல்'
கறு	>சீறு	'கோபம் கொள்'
கலி	>செழி	'தழைத்து வளர்'
gam	>செம்	'சிவப்பு'
g̃ar	> செவிடு	'காது கேளாமை'
கரம்	>செடி	'ஒளி,பிரகாசம்'
கர்	>செய்	'செய்தல்'
kak		
g̃ul	>சுளி	'கோபம் கொள்'
g̃ud	>சுடர்	'ஒளி'
gur	>சூறை	'கொள்ளை'
gir	>சிறகு	'செட்டை'
gin	>சின்ன	'சிறு'
gul	> சுழல்,சூழ்	'வட்டமாகப் போ'

கட்டளை 7: எல்லா உயிர்களின் முன்னரும் ககர மெய் தகர மெய்யாக மாறும். அங்ஙனம் மாறும் போது அகர உயிர் இ,ஈ,எ,ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும்; மாறாது விடுவதும் உண்டு.

ḡab	> தவு	'குறைவுபடல்'
ḡab	>தெவ்	'பகைமை'
கால்	>தாள்	'பாதம்'
காழ்	>தாழ்	'கதவடைப்புத்தடை'
கார்	>தரிசு	'ஒன்றும் முளையாத நிலம்'
gar	> தடம்	'தெரு'
gir	> தெரு	'தெரு'
gir	>திறன்	'வலிமை'
கலி	>தடி	'செழித்து வளர்'
கட்டு	>தடு	'நிறுத்து'
gar	> தெளி	'தூவு,பரப்பு'
குழி	>துளை	'ஓட்டை'
கூர்	>துன்னு	'மிகுதி''நெருக்கம்'
ḡar	> தேடு	'நாடுதல்'
ḡul	> துளி	'சிறியது'

கட்டளை 8: எல்லா உயிர்களின் முன்னரும் ககர மெய் பகர மெய்யாக மாறும். அங்ஙனம் மாறும் போது அகர உயிர் இ,ஈ,எ ,ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும். மாறாது விடுவதும் உண்டு.

gar > bar > பண்ணு	'செய்'
gar > bar > பெறு	'பெற்றுக் கொள்'
ḡar,kar > bar > பார்	'காண்'

gar > bar > படி	'கூலிக்கான உணவு'
gar > bar > பரி	'வெட்டுதல்'
g̃ar > bar > படி	'தூசி படிதல்'
gar > bar > படு	'செய்'
gar > [illegible] > பணி	'வேலை'
gar > bar > பண்டி	'வண்டி'
gar > bar > படி	'ஆறுதல்'
gar > bar > பாழி	'கோயில்'
g̃a > பத்து	'ten'
gir > bir > பிணை gin	'ஒன்று சேர்த்துக் கட்டு'
girin > பிரி	'பிரித்தல்,பகுத்தல்'
g̃ir / gid > பிடி	'கையாற் பிடி'
gir > பிடுகு	'இடி,மின்னல்'
gig > பிணி	'நோய்'
gin > பின்னு	'கட்டுதல்,தைத்தல்'
gir >பீலி	'தோகை'
கீள் >பிள்	'பிரி,துண்டாக்கு'
கீறு >பீறு	துண்டாதல்,வெளிவரல்'
gu > புடை	'பக்கம்'
g̃u > புள்	'பறவை'
kur,gur > பூரி	'அதிகமாதல்'
kur > புசி	'உண்'
kur > புரள்	'மாறு,திரும்பு'

kur	> புர	'பாதுகா'
kur	> புறம்	'வெளி,வெளிநாடு'
kur	> புரை	'வசிப்பிடம்' வீடு.
gunu	> புண்	'காயம்'
gun (<gur)	> புரவு	'வரி'
kunim > bunim	> புதர்	'பற்றை'
un	> பொன்	'தங்கம்'
g̃ul	> பொல்லா	'தீது,கேடு'

கட்டளை 9: உ, ஊ, ஒ, ஓ அல்லாத ஏனைய உயிர்களின் முன் ககரமெய் வகர மெய்யாக மாறும். அங்ஙனம் மாறும் போது அகர உயிர் இ,ஈ,எ,ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும். மாறாது விடுவதும் உண்டு. உ,ஊ,ஒ,ஓ என்னும் உயிர்கள் வகர மெய்க்குப் பதில் பகரமெய்யுடன் வரும் என்பது முன்னர்க் காட்டப்பட்டது.

கர்	>வாய்	'வாய் என்னும் உறுப்பு'
கல்	>வல்	'வலிமை'
கலி	>வளர்	'கொழுந்து விடு'
கழி	>வரை	'விடுதல்'
g̃ar	> வால்	'வெள்ளை'
gar	> வாள்	'வாள் என்னும் ஆயுதம்'
gar > bar	> வரை,வரம்பு	'எல்லை'
g̃ar	> வரை	'எழுது' 'கீறு'
gar	> வரி	'கட்டுதல்'
g̃ar	> வரி	'திறை'
gar > bar	> வரைப்பு	'முற்ற மூடுதல்'
kar	> வரை	'கட்டுப்படுத்து'

gar	> வளை	'சுற்றிவளை'
g̃al	> வலை	'பின்னல்'
g̃ar	> வட்டி	'பணப்பெருக்கம்'
kaz(<kar)	> வெட்டு	'அரிதல்'
g̃ab > bar	> வெள்கு, வெட்கு	'வெட்கம்'
கெலி	> வெல்	'வெற்றியடை'
g̃al	> வேள்	'விருப்பம்'
gal	> வேள்	'நிலத்தலைவன்'
gar > bar	> வெளி	'வெளிஇடம்'
gi	> வில்	'பொருளை விற்றல்'
gid	> விளை	'விளைபொருள்'
kid	> விடு	'விட்டுப் போதல்'
gir	> விரை	'விரைவாகப் போ'
gir	> வெரு	'பயம்'

கட்டளை 10: எல்லா உயிர்களின் முன்னரும் ககர மெய் மகரமெய்யாக மாறும். அங்ஙனம் மாறும்போது அகர உயிர் இ,ஈ,எ,ஏ என்பனவற்றுள் ஒன்றாக மாறுமாயினும் மாறாதிருப்பதே பெரு வழக்கு.

சுமர் மொழியில் ககர முதன் மொழிச் சொற்களுக்குச் சிறப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சொற்கள் அரச மொழிச் சொற்கள் எனப் பெருமையுடன் கூறப்படுகின்றன. பெண்களின் வாயில் ககர மெய் மகரமாக மாறுகின்றது என்றும் அது மெலிந்து உச்சரிக்கப்படுகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே மகர முதன் மொழிச் சொற்கள் இழிவானவையென இலக்கண ஆசிரியர்களால் விளக்கப்படுகின்றன. தமிழ் மொழியில் ககர மகர ஒலிமாற்றம் பெருவழக்கில் காணப்படுகின்றது. இம்மாற்றம் சொல்லின் இறுதி மெய்யையும் நலிவடையச் செய்துள்ளது என்பதைப் பல எடுத்துக் காட்டுக்களிற் காணலாம்.

ĝa	> மலி	'நிறைவு'
gal	> மலர்,அலர்	'திறத்தல்,வாய்விடல்'
gal	> mal > மனை	'வீடு'
gal	> mal > மன்னு	'நிலைபெறு'
கல்	> மலை	'குன்று'
கலங்கு	> மலங்கு	'மனநிலை கெடல்'
கருவி	> மன்று	'கழகம்'
கார்	> மா	'கறுப்பு'
கல்	> மல்,மா	'பெரியது'
கட்டு	> மாட்டு	'கட்டுதல்'
கட்டு	> மடை	'நீர் வாய்க்கால் தடை'
கள்	> மட்டு	'தேன்,கள்'
கல	> மண,மண்டு	'ஒன்றுசேர்'
கலி	> மத	'செழித்துவளர்'
கழி	> மாய்	'மறைதல்'
கலிழ்,கம்(<kar)> மாறு		'நிலை திரிதல்'
கர	> மாற்று	'ஒளித்தல்'
gar	> மன்னு	'நிலைபெறு'
gar	> மாடு	'எருது'
garaš	> மழை	'மழை'
ĝaš,கணிச்சி	> மழு	'கோடரி'
gam	> மடி	'சா'
kad	> மடு	'நீர்நிலை,குளம்'
ĝar	> மண்	'பூமி'

gar	> மண்ணு	'செய்,உண்டுபண்ணு'
gar	> மண்ணு	'கழுவு,குளி'
kar	> மதில்	'அரண்'
gar	> மருங்கு	'பக்கம்'
gar	> மருவு	'ஒன்றுசேர்'
ĝar	> மார்	'மார்பு'
gin	> மிஞ்சு	'மிகுதல்'
gir,mer	> மிடல்	'வலிமை'
gir	>மிதி	'அடிவைத்தல்,உதைதல்'
gi	>மீள்	'திரும்புதல்'
kur,mug	>முகடு	'உச்சி'
kuš	> முச்சு	'மூடுதல்'
kuš	>முடி	'கட்டுதல்'
kuš,kud	>முடிவு	'தீர்மானம்'
kuš	>முது,முரஞ்சு	'முதுமையடை'
kur	>முரஞ்சு	'நிறைதல்'
gu[illegible],bur	>முலை	'பெண்ணின் முலை'
kurum,bur,mus	> முடி	'சா'
kurum,குடுவை	>முட்டி	'மண் பானை'
குத்து	> முட்டு	'தகர்த்தல்'
குத்து	> முட்டு	'தடை'
குறு	> முட்டு	'சிறியது'
gu	> முன்,முதல்	'பண்டை'
gutar	> முதுகு	'பின்புறம்'

kuš	>	முழை	'புகுதல்'
kuš	>	முற்று	'முதிர்தல்'
kud	>	முறி	'வெட்டு'
g̃ur	>	குரு > முறி	'வெட்டு'
kur	>	முழு	'எல்லாம்'
gu	>	முரல்	'சத்தமிடு'
kul	> கொளுத்து > முளி		'நெருப்பு மூட்டு'
குனி	>	முரி	'குனிதல்'
குருத்து	> முருகு		'மெல்லியது'
குருந்து	> முளை		'பயிரின் புறப்பாடு'
குழை	> முளை		'மூங்கில்'
ku,mud	>மூடம்		'இருட்டாதல்'
kul, கொளுத்து,முளி,மூள்			'நெருப்பை உண்டாக்கல்'
kur,kul	> மொத்தம்		'முழுத்தொகை'
குத்து	>	மொத்து	'அடித்தல்,குத்துதல்'

கட்டளை 11: எல்லா உயிர்களின் முன்னரும் ககரமெய் நகரமெய்யாக மாறும். அங்ஙனம் மாறும் போது அகரவுயிர் இ,ஈ,எ,ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும். மாறாது விடுவதும் உண்டு.

g̃ab	>	நவு	'மெலிதல்,வாடுதல்'
g̃ab	>	நாண்	'வெட்கம்'
g̃ar	>	நரை	'வெள்ளை'
g̃ar	>	நடு	'இடை'
g̃ar	>	நாடு,நேடு	'தேடுதல்'
g̃ar,dar .		நாடு	'தேசம்'

ĝar	>	நெஞ்சு	'இருதயம், மார்பு'
gar	>	நால்	'நான்கு'
kar	>	நடை	'அடிவைத்தல்'
kar	>	நடவை	'வழி, பாதை'
kaz	>	நேர்	'வெட்டு, தறி'
gan	>	நான்	'யான்'
KA x Gar	>	நிகர்	'மினுங்கு, பிரகாசி'
ĝe,ne,ni	>	நீ	'நீ' முன்னிலைப் பெயர்
gid	>	நீடு, நெடு, நீள்	'நீடுதல், நீளமாதல்'
giš, mtaĝ	>	நில்	'நிற்றல்'
gir	>	நெறி	'வழி'
gu	>	நூல்	'சேலை நூல்'
gag	>	நுவல்	'பேசுதல்' 'சொல்லுதல்'
kud	>	நொடி	'கூறுதல்'
kun(<kur)	>	நூறு	'பொடியாக்கல்'

கட்டளை 12: ஆகாரத்தின் முன்னர் வரும் ககர மெய் (g) சிலவிடங்களில் மெலிவுற்று யகர மெய்யாக மாறுகிறது.

gar	>	ga > யா	'யாத்தல், கட்டுதல்'
gad	**(<u>Br.</u>)** >		யாடு, ஆடு
ĝar><u>Go</u>.yeda,yend, hend	>	யாண்டு, ஆண்டு	'வருடம்'
gar	>	யார்?	'எவர்'
gan	>	யான்	'நான்'

8. முடிவுரை

தமிழ்ச் சொற்களின் பிறப்புப் பற்றிக் கூறும் இந்நூல் தமிழல்லாத பிறிதொரு மொழியாகிய சுமர் மொழிச் சொற்களைத் தரவுகளாக ஏற்று விளக்கங் கூறுவது ஒரு தனித்துவமாகும். தமிழ் ஒரு வாழும் மொழி. சுமர் மொழியோ ஒரு வழக்கிழந்த மொழி . ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு மேலாக உலகிலிருந்து மறைந்து போன இம்மொழி கி.பி.1879க்குப் பின் பூமியின் கீழ் புதைந்து கிடந்த களிமண் ஏடுகளிலிருந்து வெளிக் கொணரப்பட்ட ஓர் இறந்த மொழி. கி.மு.4000-2000 ஆகிய காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற எழுத்தோவியங்கள் பிரதிபலித்துக் காட்டும் ஒரு மொழி.

தமிழ்மொழியோ தன் 6000க்கு மேற்பட்ட கால உலக வாழ்க்கையில் ஏறக்குறைய 3500 க்கும் மேற்பட்ட காலப்பகுதியில் எழுந்தனவாகக் கருதப்படும் நூல்களையும் எழுத்தோவியங்களையும் இழந்து விட்டது. தமிழின் மிகப் பழைய காலத்து வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளுஞ் சாதனம் ஏதும் இப்போது அகப்படவில்லை. தென்னிந்தியாவில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதனம் பனையோலையாகையால் பனையோலையேடுகள் ஒரு காலப்பகுதிக்கு மேற் பாதுகாக்க முடியாமற் சிதையலாயின. அன்றியும் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடல்கோள்கள் நிலப்பரப்பை விழுங்க மக்களின் குடிபெயர்வு அவர் தம் கருவூலங்கள் நீரினுள் அமிழ்ந்து

போவதற்குக் காரணமாயிற்று. ஆனால் தமிழர்களுள் ஒரு பகுதியினரெனக் கருதப்படும் சுமர்நாட்டுக் குடியேற்றக் காரர்கள் சுட்ட களிமண்ணை எழுதுவதற்கு உபயோகித்தமையின் அவர்கள் விட்டுச் சென்ற சுடுமண் ஏடுகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மண்ணினுட் புதைந்து கிடந்தும் அவை சிறிதும் நிலை குலையவில்லை என்பதை அவ்வேடுகளின் புகைப்படங்கள் காட்டுகின்றன. மனித வரலாற்றிலேயே இது ஓர் அற்புத நிகழ்ச்சியாகும். உலகின் வேறெந்த மொழிக்கும் சுமர் மொழி கொண்டுள்ளது போன்ற மிகப் பழைய கால எழுத்தோவியங்கள் இல்லை.

தமிழ் மொழி உலகத்து முதன் மொழியென்றும் உலக மொழிகளின் தாய் மொழியென்றும் பல தமிழறிஞர்களாற் கூறப்பட்டு வருகின்றது. ஏன்? பிறநாட்டு கவிஞர்கள் பலரும் இக்கருத்தில் ஓரளவு உண்மையிருக்கக் கூடும் என நம்புகின்றனர்.

சுமர்மொழி தமிழிலிருந்து கிளைத்த ஒரு வழி மொழியென்ற சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் இவ்வுண்மை நிரூபிக்கப்படும். இவ்விருமொழிகளும் 1500 மைல்களுக்கப்பால் வேறுபட்ட சூழல்களில் வளர்ந்து வந்தவை. எனவே அவற்றிடையே ஒலிவேறுபாடுகள் அமைந்திருத்தல் வேண்டும் எனக் கருதப்படும். ஆனால் அசைச் சொற்கள் வழக்கிலிருந்த பண்டைக் காலத்தில் இவ்வேறுபாடுகள் மிகக் குறைவாகவே இருந்திருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு சொல்லை விளக்கிக் காட்டலாம். காண், பார், நாடு என்னும் மூன்று தமிழ்ச் சொற்களும் எறக்குறைய ஒரே பொருளைச் சுட்டுஞ் சொற்கள். ஆனால் இவற்றிடையே ஒலியமைப்பில் ஒரு ஒற்றுமையை எம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. சுமர் மொழியில் உள்ள **gar, kar, bar, pad** ஆகிய நான்கு சொற்களும் **see,look** என்னும் ஒரே கருத்தையே உணர்த்துஞ் சொற்கள். இவற்றுள் **gar** என்பது மூலச் சொல். இதன் மாற்று வடிவம் **kar** என்பது **gar>bar** என மாற்றமடைகிறது. **bar** என்பது **pad** என மாற்றம் பெற்று வளர்ந்த சொல். தமிழிலுள்ள காண் என்பதன் பண்டைய மூலவடிவம் **gar** அல்லது **kar** என்பது தானே பெறப்படும். எனவே காண் என்பதிலுள்ள ணகர மெய் ரகர மெய்யின் விகாரம் என்பதும் தானே பெறப்படும். கார் என்பது பார் என மாறுவது இயற்கை. இது போன்றே கார் என்பது நார் >நாடு என வளர்ந்தது என முன்னர் விளக்கப்பட்டது. சுமர் மொழியில்

உள்ள gar,kar என்ற சொற்களை நாம் பழைய தரவுகளாகக் கொள்ளாக்கால் காண் என்ற தமிழ் வடிவத்தின் பண்டைய வடிவத்தையும் அறிய முடியாது. இவற்றிலிருந்து அறியத்தக்கது யாதெனில் மூலச் சொல்லின் ஈற்றொலி ரகரம் என்பது. அது பார் என்பதில் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால் காண் என்பதில் பாதுகாக்கப்படவில்லை. தமிழ் மொழியின் மிகப் பழைய வடிவம் கார் என்பதை எல்லாப் பிரமாணங்களினாலும் வரையறுக்கப்படலாம். இவ்விதமே சுமர் மொழியிற் காணப்படும் பண்டைய அசைச் சொற்களெல்லாம் தமிழ் மொழியின் பண்டைய அசைச் சொற்களெனலாம். இதை வேறு வகையிற் கூறப்போனால் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த காண் என்பது கி.மு.2500இல் கார் என்பதாக இருந்தது என்பது பெறப்படும். கார் என்பதிலிருந்து பார் பிறந்தது. அது காண் என்ற மாற்றமடைந்த சொல்லிலிருந்து பிறக்கவில்லை. தமிழ் சுமர் ஆகிய இருமொழிச் சொற்களிடையே காணப்படும் இப்பெரிய ஒற்றுமை இந்தோ-ஐரோப்பிய குடும்ப மொழிகளாகிய இலத்தீன், கிரேக்கம், சங்கதம் ஆகியவற்றினிடையே காணப்பட வில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணமும் உண்டு. இந்தோ-ஐரோப்பிய மொழிகள் தமிழ்,சுமர் மொழிகளைக் காட்டிலும் மிகப் பிற்பட்ட காலத்துக்குரியவை. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் சங்கத மொழியிலேயே காலத்தால் முற்பட்ட இருக்கு வேதம் உள்ளது. இந்நூல் கி.மு.1400-1200 ஆகிய கால எல்லையுள் தோற்றம் பெற்றது. ஏனெனில் ஆரியர் இந்தியாவிற்குள் புகுவதன் முன் மெசொப்பத்தேமியாவுக் கூடாக கி.மு.1550 வரையில் வரும் போது அப்போது சுமர் இராச்சியத்திற்கு மிகப் பின்னர் வந்த குறுநில மன்னர்களாகிய கசைத்து (**Kassite**) என்னும் மன்னருடன் போர்புரிந்தனர் என மத்திய கிழக்கு வரலாற்று நூல்கள் கூறுகின்றன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே இலத்தீன்,கிரேக்க மொழிகளில் நூல்கள் எழுதப்பட்டன. பிற்பட்ட இக்காலப் பகுதியில் மனித பண்பாட்டு வளர்ச்சிக்குத் தக மொழி வளர்ச்சியும் மிக வேகமாக இருந்தது. ஆனால் அக்காலத்திலிருந்து 2000 ஆண்டுகள் முற்பட்ட கி.மு.2500 வரையான காலப்பகுதியில் வழக்கிலிருந்த சுமர் மொழி, தமிழ்மொழி ஆகியவற்றில் சொற்கள் பெரும்பாலும் சிறியனவாகவும் ஒலி மாற்றங்களைச் சிறிதளவேயே பெற்றனவாகவும் இருந்தன. இக்காரணங்களால் தமிழ்,சுமர் ஆகிய

இருமொழிகளும் வெவ்வேறு சூழலில் வளர்ந்தாலும் சிறிய சொற்களாகிய அசைச் சொற்களில் பெரும் ஒலி மாற்றங்களைப் பெறவில்லை என்பது ஒப்புமை ஆய்வு மூலம் பெறப்படுகின்றது.

இந்நூலில் தமிழ்ச் சொற்களுக்கு மூலச் சொற்களாகச் சுமர் மொழிச் சொற்கள் காட்டப்பட்டுள்ளன. இக்கோட்பாட்டுக்கு விளக்கம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இங்கு காட்டப்பட்ட சுமர் மொழிச் சொற்களுள் 90 வீதத்திற்கு மேற்பட்டவை உண்மையில் ஒலி மாற்றம் பெறாத அடிப்படையான சொற்கள். எஞ்சிய 10 வீதமான சொற்கள் மூலம் சிறிது ஒலிமாற்றம் பெற்ற சொற்கள். எடுத்துக்காட்டாக **kan 'be dark'** எனவும் அதற்கு இணையான தமிழ்ச் சொற்கள் காழ்,கார்,கரு,கறு எனவும் காட்டப்பட்டுள்ளன. **kan** என்பது **kar** என்னும் மூலச் சொல் **T>n** ஆக ஒலிமாற்றம் பெற்ற சொல்லாகும். இவ்வித **r>n** ஒலிமாற்றம் வட இந்திய திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக பிராகுவி மொழியிலுள்ள **kan-kanning 'to do'** என்ற சொல்லைப் பார்க்கலாம். சுமர் மொழியிலும் பெரும்பாலான திராவிட மொழிகளிலும் இது ரகர மெய்யீற்றுச் சொல்லான **kar** என்றே காணப்படுகிறது. **kan 'be dark'** என்ற வடிவமே சுமர் மொழிக் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றமையின் அதனையே யான் மூலச் சொல்லின் இடத்திற் குறித்துள்ளேன். அதனைப் புனரமைப்புச் செய்து **kar** எனக் காட்ட முயற்சி செய்யவில்லை. ஏனெனில் **gan 'shore'** என்ற சொல்லுக்கு இணையான தமிழ் வடிவங்களாக கரை,கானல் என்ற இரு வடிவங்களையும் கொடுத்துள்ளேன். குறில்,நெடில் என உயிரெழுத்துக்கள் மதிப்பிடப்படாத பண்டைக் காலத்தில் ஒவ்வொரு சொல்லும் இருவேறு வடிவங்களைக் கொண்டிருந்தன. நெட்டுயிர் கொண்ட 'கார்' என்னும் வடிவம் 'தகானல்' எனவும் குற்றுயிர் கொண்ட 'கர்' என்னும் வடிவம் 'கரை' எனவும் உருப்பெற்றன. இதுபோன்றே **kan 'field'** என்பதற்கு இணையான தமிழ் வடிவங்களாக 'சாணி, கழனி, செய்' என்ற மூன்றும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை வயலைக் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் 'செய்தல்' என்னும் பொருளில் வரும் 'செய்' என்பதன் மூலச் சொல் **kar,gar** என்பது. எனவே **kan 'field'** என்பது **kar field** என இருந்திருக்க வேண்டும். ஆனால் **kar** என்பது 'கன்' எனவும் 'கழ' (கழனி) எனவும் பிறவிடங்களில் மாற்றம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்காரணங்களால்

கல்வெட்டிற் காணப்பட்ட வடிவங்களை இந்நூலில் புனரமைப்புச் செய்து காட்ட விரும்பவில்லை. அங்ஙனம் செய்து காட்டின் அதுவே ஒரு தனிநூலாக விரிந்து செல்லும்.

மேலும் சுமர்மொழிச் சொற்களை மூலச் சொற்களாகக் கொண்டதிலிருந்து தமிழ்ச் சொற்கள் சுமர் மொழிச் சொற்களிலிருந்து பிறந்தன என்னுங் கருத்துக் கொள்ளப்படவில்லை. பண்டைத் தமிழ்ச் சொற்கள் கால வெள்ளத்துள் அழிந்து போன காரணத்தால் அவற்றைத் திரும்பவும் பெறும் முயற்சி பலிக்காது என்பதைக் கருத்திற் கொண்டு அழிந்துபோன தமிழ்ச் சொற்களுக்கு இணையான சொற்களாகவே சுமர்மொழிச் சொற்களைக் கொண்டனம். ஒன்றிலிருந்து மற்றது பிறந்தது என்னுங் கோட்பாடு பொருந்தாது. ஆழ் கடலில் மரக்கலம் ஒன்றில் பயணஞ் செய்த மக்கள் தம் மரக்கலம் நீரினுள் ஆழவே அவர் நீந்திச் சென்று தூரத்திற் சென்ற மரக்கல மொன்றைப் பற்றியேறிக் கரைக்கு வந்தாற் போன்றதே இங்குக் காட்டப்பட்ட சுமர் மொழி- தமிழ் மொழி உறவுமாகும். இருமரக்கலங்களும் ஒரே மையத்திலிருந்து புறப்பட்டனவாகலாம். இக்கருத்து இந்நூலின் ஆய்வுக்குப் புறம்பான தாகலால் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. விரிக்கின் அதுவே ஒரு தனி நூலாக உருப் பெறுமென்று விடுக்கப்பட்டது.

மேலும் இந்நூலிற் கூறப்படாத பொருள் தமிழிலுள்ள எழுத்துக்கள் யாவை? அவை எவ்வாறு சொல்லாக்கத்துக்கு உதவுகின்றன என்பது. இதன் காரணத்தை விளக்குவாம். இந்நூல் வரலாற்றுக் காலத்துத் தமிழ்மொழியைப் பற்றியது அன்று. வரலாற்றுக் காலத்துத் தமிழ் மொழியின் முன்னைய வடிவங்களையும் அவற்றின் தோற்றங்களையும் பற்றிய நூல் இதுவாகும். தமிழ் மொழியின் முன்னைய வரலாறே அன்றி அதன் தோற்றக் காலத்து நிலையே அறிந்து கொள்ள முடியாத விடத்துத் தமிழ்ப் புலவோரும் புராணகாரரும் தமிழ் மொழியை ஆதியில் சிவன் அகத்தியருக்கு உரைத்தான் என்றும் அகத்தியர் இமய மலையிலிருந்து தெற்கு நோக்கி வந்து பொதிகை மலையிற் குடியேறித் தமிழை மற்றவர்களுக்குப் போதித்தார் என்றும் கூறித் தப்பித்துக் கொண்டனர். இப்புராண வரலாறு மொழியின் நிலை தெரியாத காலத்து ஏற்பட்ட வெளியை தமிழிலுள்ள எழுத்துக்கள் நிரப்புவதற்காகத்தோற்றுவிக்கப்பட்ட புனைகதையேயாகும்.

பன்னீருயிரும் பதினெண் மெய்யும் சார்பெழுத்துக்கள் மூன்றுமாகிய 33 எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இது செம்மை செய்யப்பட்ட செந்தமிழுக்கு மட்டுமே பொருந்துவதாகும். தொல்காப்பியர் காலத்திலிருந்து ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தோற்றமெடுத்தது தமிழ்மொழி என இன்று பொதுவாகக் கருதப்படுகிறது. இந்நூலிற் காட்டப்பட்ட சுமர் மொழியின் வரலாற்றின்படி தோற்றக்காலத்தில் ஒலியெழுத்துக்களெதுவும் உருவாகவில்லையென்பது பெறப்பட்டது. இது ஒரு அழுத்தந் திருத்தமான கோட்பாடாகும். தாம் உணர்த்த விரும்பிய பொருள்களின் உருவங்களை வரைந்து காட்டியே முதன் முதலில் மக்கள் இக் கருத்தைப் புலப்படுத்தினர். அதன் பின்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு வழக்கிலிருந்தது குறிச்சொல்லால் விளக்கப்பட்ட அசைச் சொற்கள் இவ் அசைச் சொற்கள் மூவொலிகளின் வட்டமேயாயினும் ஒவ்வோர் ஒலியும் வரையறுக்கப்பட்ட பண்புகளைக் கொண்டிருக்கவில்லை யென்பது இந்நூலில் பல இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பண்புகள் கொண்ட ஒலியெழுத்துக்கள் பிறந்த காலம் ஏறக்குறைய கி.மு.2800 எனச் சுமர் மொழி வரலாறு கூறுகின்றது. வரையறுக்கப்பட்ட பண்புகளை யுடையனவேனும் ஓரொலிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் வழக்கிலிருந்ததைச் சுமர் மொழி காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக ககர மெய்யொலிக்கு g̃,g,k,Q என்னும் நான்கு எழுத்துக்களும் பகர ஒலிக்கு b,p என்ற இரண்டும், தகர ஒலிக்கு d,t என்ற இரண்டும் சகர ஒலிக்கு s,s,z என்ற மூன்றும் வழக்கிலிருந்ததைச் சுமர் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. இவ்வித நிலைமை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தமிழ்மொழியில் நிலவியதா என்பதை எம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை.

தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்ட ஒரு காலப் பகுதியில் தமிழ்மொழி தரப்படுத்தப்பட்டு செம்மை செய்யப்பட்டது. இது எக் காலத்தில் நடந்ததென்பதைத் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள முடியவில்லை. ஆயின் ஒன்று மட்டும் கூறுதல் பொருந்தும். வரையறுக்கப்படாத பண்புகளையுடைய பல ஒலிகளிலிருந்து வரையறுக்கப்பட்ட பண்புகளையுடைய சில ஒலியன்கள் உருவாக்கப் பட்டிருக்கலாம். இந்நிலைமை தெளிவாகத் தெரியாத விடத்து இந்நூலில் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் யாவை என விதந்து கூறப்படவில்லை.

தமிழிலுள்ள 12 உயிரெழுத்துக்களுள் குறிலும் நெடிலும் அற்ற அ(ஆ),இ(ஈ),எ(ஏ),உ(ஊ) ஆகிய நான்கு எழுத்துக்களே சுமர்மொழியில் உள்ளன. அதுவே பண்டைத் தமிழ் மொழிக்கும் பொருந்தும் என்பது இந்நூலில் பல இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. ஒ,ஓ என்பன முறையே உ,ஊ விலிருந்து பிற்காலத்திற் றோன்றியவை என்பது எண்ணிறந்த எடுத்துக் காட்டுக்கள் மூலம் நூலில் விளக்கப்பட்டுள்ளது. அதுபோலவே ஐ,ஔ என்னும் இரு கூட்டெழுத்துக்களும் பிற்காலத்திற் றோன்றியவை. பண்டைத் தமிழில் இவை முறையே அய்,அவ் என எழுதப்பட்டிருக்கலாம் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழில் நிலவிய மெய்யொலிகளின் வரையறுக்கப்பட்ட பண்பை அறிந்து கொள்ளு மாறில்லை. **g,d,b,s** முதலிய ஒலிவடிவங்கள் தரப்படுத்தப்பட்ட காலத்துக்கு முற்பட்ட காலத் தமிழ் மொழியில் இருந்தனவா என்பதை எம்மாற் கூறிக் கொள்ள முடியவில்லை. மொழியியல் ரீதியில் பண்டைத் தமிழ் எழுத்துக்களைப் புனரமைத்துக் கூறும் காலம் வரின் சில எழுத்துக்களின் பண்புகள் புலப்படுத்தப்படலாம் அல்லது அழிந்துபோன மிகப் பழைய தென்னிந்திய அகழ்வுப் புதையல்களிலிருந்து மிகப் பழைய கல்வெட்டுக்கள் கிட்டுமாயின் தமிழ் எழுத்துக்களின் பண்டைய நிலையை அறிந்து கொள்ள முடியும். காலந்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

[illegible]

[illegible]

[illegible]

உதவிய நூல்களும் கட்டுரைகளும்

English

Alexander Kondratov. *The Riddles of three Oceans*, Progress Publishers, Moscow, 1974.

C.J.Ball, *Chinese and Sumerian*, Oxford University Press, 1913.

George A.Barton, *The Origin and Development of Babylonian Writing*, Leipzig, 1913.

Sir Denys Bray, *The Brahui Language*, Part II Etymological vocabulary, Delhi 1934.

Robert Caldwell, *A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages*, University of Madras, 1961.

David Dringer, *Writing*, New York, 1962.

Edmond.I.Gordon, Sumerian Proverbs, *Glimpses of Every day life in Ancient Mesopotamia*, University Museum, Philedelphia, 1959.

H.R.Hall, *The Ancient History of the Near East*, London 1913.

Samuel Noah Kramer, *The Sumerians, Their History, Culture and Character*, The University of Chicago Press, 1968.

---------*Studies in Sumerian Phonetics*, Archiv Orientalni, Vol VIII, No.1, May 1936.

Stephen Langdon, *A Sumerian Grammar and Chrestomathy*, Paris.1911.

---------- *Sumerian Liturgical Texts*, The University Museum, Philadelphia, 1917.

Winfred P.Lehman, *Proto-Indo European Phonology*, Austin, 1955.

Sir.John Marshall, *Mohenjodaro and the Indus Civilization*, Vol II, with Post-script by Stephen Langdon, London 1931.

Journals

"Indian Ocean, the cradle of the Human Race"-Indian Foreign Review, 1980. reproduced in the Week End, Sunday, August 3, 1980.

Dictionaries

T.Burrow and M.B.Emeneau, *A Dravidian Etymological Dictionary*, Oxford 1961.

----------- Supplement, Oxford 1968.

S.Gnana Prakasar, An Etymological and Comparative Lexicon of the Tamil Language, Vol I, 1938.

Tamil Lexicon, Vols. I-VI University of Madras, 1982.

தமிழ்

தொல்காப்பியம்,திருநெல்வேலி,தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட்,1943.

தொல்காப்பியம்,வெள்ளைவாரணன் விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,1957.

தொல்காப்பியம்-சொல்லதி காரம், கணேசையர் உரை விளக்கக் குறிப்புடன் சுன்னாகம், 1938.